
கல்கி



KALKI ஜனவரி 9, 1955 **4** அணா

நாலு பேர் நம்மை மதிக்க வேண்டும்



துரு துரு வென்றிருக்கும் மாணவர்கள் வேண்டுவது 'ஸ்பீட்'தான்; மின்னலின் வேகம். இந்தக் காலத்து மாணவர்களுக்குப் பாடங்களைத் தவிர நண்பர்களைப் பார்த்து அளவளாவவும் பற்பல களியாட்டங்களில் கலந்து கொள்ளவும், இன்னும் இதர அலுவல்களுக்கும் எத்தனை அவகாசம் வேண்டி யிருக்கு! அதனால்தான் மாணவர்கள் 'ஸ்பீட்', 'ஸ்பீட்' எனத் துள்ளுகிறார்கள். அதாவது அவர்களுக்கு வேண்டியதெல்லாம் ராயல் என்பீல்டு மோட்டார் சைகிள். ஒரு கிளப்போ, விளையாட்டோ அல்லது காலேஜோ எதற்கானாலும் சரி, வேகத்திற்குப் பேர்போன வாகனத்தில் போனால்தானே நாலு பேர் கண்ணில் நாம் படலாம். அவர்களும் நம்மைப் பார்த்து மதிப்பார்கள்.

- ★ தவணைகளில் பணம் கட்டலாம்
- ★ ஸ்பேர்கள் எப்போதும் கிடைக்கும்
- ★ விற்பனைக்குப் பிறகு சர்வீஸ் உண்டு

வாங்கிய பின் எக்சேஞ்சும் சாத்தியம்

Royal Enfield

தி மதராஸ் மோட்டார்ஸ் லிமிடெட்

மோட்டார் சைக்கிள் ஸ்பெஷலிஸ்டுகள்

36-C, மவுண்ட் ரோடு :: மதராஸ்-2

மலர் 14 ∴ இதழ் 24

கல்கி

ஜய வரு ∴ மார்கழி 25

பொருளடக்கம்

1955 ஜனவரி 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



ஜனவரி 5௳ முதல்
சென்னை
பிராட்வே · கெயிட்டி · சயானி
மற்றும் தென்னிடெங்கும்
கஸ்தூரி பிலிம்ஸ்
மேனகா
வடுவூராரின் பிரசித்திபெற்ற நாவல்
தயாரிப்பு, டைரக்ஷன்
வி.சி.சுப்புராமன்
மதராஸ் பிக்சர்ஸ்
வெளியீடு

மலர் 14

இதழ் 24



தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்

மற்றொரு மகாநாடு

காலச் சக்கரம் அதி வேகமாகச் சுழன்று கொண்டு வருகிறது.

ஐரோப்பாவின் மேற்குக் கோடியிலிருந்து கிழக்குக் கோடியில் உள்ள சீனு வரையில் ஆயிரம் வருஷ காலத்துக்குப் பாரத நாடு வியாபாரத்தில் உன்னத நிலையை அடைந்திருந்தது.

அப்படி யிருந்தும் இந்தியா அந்த நாடுகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை.

கால சக்கரம் சுழன்று, மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் இந்தியாவின் வியாபகமும் வியாபாரமும், சீரும் செல்வாக்கும் குன்றத் தொடங்கின.

ஐரோப்பிய நாட்டினர் இந்தியாவிலும் மற்ற ஆசிய நாடுகளிலும் சாதாரண வியாபாரிகளாகப் பிரவேசித்தார்கள்; சதியும் சூழ்ச்சியும் சிறிது சிறிதாக நடைபெற்று அரசியல் ஆதிக்கமும் அவர்கள் கையில் போய்ச் சேர்ந்தது.

அவர்களுடைய வர்த்தகத்தைத் தங்கு தடையின்றிப் பெருக்குவதற்கு, அவர்களுக்கு அரசியல் ஆதிக்கம் அத்தியாவசியமாக இருந்தது.

கடைசியாக அவர்கள் இந்தியா, இலங்கை, பர்மா போன்ற பல நாடுகளிலும் தங்களுடைய சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்துக் கொண்டு விட்டார்கள்!

இவ்வாறாக, பல ஆசிய நாடுகளும் சுதந்திரமிழந்து வெகு காலம் அன்னியர்களின் ஆதிக்கத்துக்கு அடி பணிய நேர்ந்தது. பல கோடி ஆசியா மக்களின் தலைவிதியை ஐரோப்பியர்கள் நிர்ணயிக்கத் தொடங்கினர்.

மீண்டும் காலச் சக்கரம் ஒரு தடவை சுற்றி வந்தது.

ஐரோப்பியர்கள் தங்கள் சாம்ராஜ்யத்தைச் சிறிது சிறிதாக இழக்கலாயினர். எனினும், அவர்களுடைய சாம்ராஜ்யத்தின் சின்னங்களாகப் பல நாடுகளில் பல பிரதேசங்களும் திட்டுக்களும் இன்றும் சுதந்திரமின்றி வாழ்கின்றன.

இன்று உலக அமைதிக்கு முட்டுக்கட்டையாக இருந்து வரும் பிரச்னைகளில், அந்தப் பிரதேசங்களில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் சுதந்திரமின்றி வாழ்வதும் ஒன்றாகும்.

* * * *

சில தினங்களுக்கு முன் இந்தோனேஷ்யாவைச் சேர்ந்த பொகோர் என்ற இடத்தில் ஐந்து ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடு நடந்தது.

ஏற்கெனவே, இலங்கையில் கூடித் தீர்மானித்ததற்கு இணங்க இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பர்மா, இந்தோனேஷ்யா இந்த ஐந்து நாடுகளின் பிரதம மந்திரிகள் பொகோரில் கூடி, முக்கியமான தீர்மானம் செய்துள்ளனர்.

அதாவது அடுத்த ஏப்ரல் மாதம் இந்தோனேஷ்யாவிலே ஆப்பிரிக்கா, ஆசிய நாடுகள் அடங்கிய ஒரு மாபெரும் மகாநாட்டைக் கூட்டுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.


அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி இருபத்தைந்து ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு அழைப்பு அனுப்புவதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

1. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள நாடுகளிடையே நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் அபிவிருத்தியடையும்படி செய்ய வேண்டும்.
2. மகாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகளின் சமுதாய, பொருளாதார, கலாச்சாரப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும்.
3. அந்த நாடுகளின் சுதந்திர உரிமையைப் பாதிக்கும் பிரச்னைகளையும், நிற வேற்றுமை, காலனி ஆட்சி முறை போன்ற விஷயங்களையும் ஆலோசித்து, பரிகார முறைகளை வகுக்க வேண்டும்.
4. சர்வதேச அமைதிக்கும் உலக நாடுகளின் ஒத்துழைப்புக்கும் ஆசியா, ஆப்பிரிக்கா நாடுகளில் வாழும் மக்கள் எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியும் என்பதை ஆராய வேண்டும்.

பொகோர் மகாநாட்டில் கலந்து கொண்ட ஐந்து ஆசிய நாடுகளின் பிரதம மந்திரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவைதான் ஆப்பிரிக்கா, ஆசிய மகாநாடு




புது வருஷம்!
1955
!!?
பிரிட்டன்
இந்தியா
சீனா
ரஷ்யா
அமெரிக்கா
1955ம் வருஷத்தில் உலக நாடுகளுக்கிடையே ஒற்றுமை வளரலாம் என்ற நம்பிக்கை உதயமாகியிருக்கிறது.
கார்ட்டூன்
பெரியவர்!
பண்டிட் கோவிந்த வல்லப பந்த் மத்திய சர்க்கார் மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டார்.
மந்திரிகள்
பண்டிட் பந்த்
தடுக்க முடியுமா?
பாகிஸ்தான் ரூபாய்
பாகிஸ்தான்
நாணய மதிப்புக் குறைவு
பாகிஸ்தான் கூடிய விரைவில் ரூபாய் மதிப்பைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று உலக நிதி நிபுணர்கள் கருதுகின்றனர்!
அணு சக்தி!
ஹைட்ரஜன் குண்டு பரிசோதனையினால் இன்று பெரும் பாலான மக்கள் ரேடியோ கிரணத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் — செய்தி
அதனால்தானோ என்னவோ இன்று காதலர்களின் தொகை அதிகமாகியிருக்கிறது!
ராஜேந்திரர்




கைப் பாவை!
சீன
ஐ. நா. சபைக் காரிய தரிசி
அமெரிக்கா
ஐ. நா. சபைக் காரிய தரிசி சீனாவுக்குத் தூது செல்லுகிறார்.


கதம்பம்



பொருத்தமான பட்டம்!
"வாழ்த்துக் கூறுகிறேன்!"
கிருஷிக் பண்டிட்
மைசூர் ராஜ பிரமுக்
நல்ல உருளைக்கிழங்கு பயிரிட்டதற்காக மைசூர் வாசிக்கு கிருஷிக் பண்டிட் பட்டம் கிடைத்திருக்கிறது.



நிபுணர்கள்!
ஆவடி காங்கிரஸுக்கு 250 பஸ்கள் சென்னையிலிருந்து ஓடப்போகின்றன.
"சென்னை நகரப் போக்குவரத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். முன்பே நடப்பதில் நாங்கள் நிபுணர்களாகி விட்டோம்!"
சென்னை மக்கள்



எங்கும் பேச்சு!
சோஷலிஸம்
சோஷலிஸம்
சோ...
சோஷலிஸமே எனது இலட்சியம்
?!!
சோஷலிஸப் பொருளாதாரம்
சோஷலிஸத் தொழில்
சோஷலிஸ விவசாயம்
பிரஜா-சோஷலிஸ்டு கட்சி
இப்பொழுது எல்லோரும் சோஷலிஸத்தைப் பற்றிய பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

கூட்டுவதன் முக்கிய நோக்கம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

பொகோர் மகாநாட்டில் கலந்து கொண்ட பண்டித ஜவாஹர்லால் நேரு, "உலகில் நெருக்கடி தீர வேண்டும்; ஆசியா நாடுகள் அபிவிருத்தி அடைய வழி வகை செய்ய வேண்டும்; இந்த இரண்டு முக்கிய விஷயங்களிலும் கவனம் செலுத்துவதே ஆசியா, ஆப்பிரிக்க மகாநாட்டின் நோக்கமாக இருக்கும்" என்று சுருங்கக் கூறி விளங்க வைத்திருக்கிறார்.

இதற்கு முன் வல்லரசுகள் மகாநாடு, அட்லாண்டிக் பிரதேச மகாநாடு, தென்கிழக்கு ஆசியா மகாநாடு போன்ற இன்னும் பல மகாநாடுகள் அடுத்தடுத்து நடைபெற்றன.

ஆனால், அத்தகைய மகாநாடு முடிந்தவுடன் உலக நிலைமை நெருக்கடியான ஒரு புதிய கட்டத்தை அடைந்து வந்தது.

ஏனெனில், அம் மகாநாடுகள் இராணுவ பலத்தையும் கூட்டு எதிர்ப்பையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தன; சமாதானத்தையும் கூட்டுறவையும் முக்கியமாகக் கொண்டிருக்கவில்லை.

அதன் விளைவாக, பரஸ்பரம் பகையும் துவேஷமும் அதிகமாயிற்றே யன்றி, சமாதானத்துக்கு வழி உண்டாகவில்லை.

அவ்விதம் வல்லரசுகள் சிருஷ்டிக்கும் விபரீதச் சூழலில் ஆசிய நாடுகளும் தங்கள் சம்மதமின்றிச் சிக்கித் தவிக்கும்படி நேர்ந்தது.

ஆசிய நாடுகளில் பல இப்போது சுதந்திரம் பெற்று விட்டதால், அந்நாடுகள் தங்களுடைய விதியை ஐரோப்பிய நாடுகள் நிர்ணயித்த காலம் மலையேறி விட்டது என்று கருதுகின்றன.

வல்லரசுகளின் பரீட்சையிலும் போட்டா போட்டிக் கட்சியிலும் சேராமல் நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்ட சீரிய வழியைப் பின்பற்ற விரும்புகின்றன.

தங்கள் வாழ்க்கையைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள விழைகின்றன.

எனவே, ஆசியாவில் எஞ்சியுள்ள அடிமை நாடுகளும் விடுதலை பெறுவதற்கு உதவி புரிந்து, பல நாடுகளும் அடங்கிய சமாதான மண்டலத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளடங்கிய மகாநாடு கூட்ட பொகோரில் கூடிய ஐந்து ஆசிய நாடுகளின் பிரதம மந்திரிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

சர்வ தேச சமாதானத்தையும் உலக மக்களின் நல்வாழ்வையுமே குறிக்கோளாகக் கொண்ட அவர்களுடைய நன்முயற்சி வெற்றி பெற வேண்டும் என்றே உலக மக்கள் பிரார்த்திப்பார்கள்.

தமிழ் மக்களுக்குப் பெருமை!

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் அறுபதாவது கூட்டத்தை ஆவடியில் நடத்துவதென்று சில மாதங்களுக்கு முன் தீர்மானித்தார்கள் அல்லவா! அத் தீர்மானத்தை வரவேற்று நாம் எழுதுகையில், தமிழ் நாட்டு மக்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று குறிப்பிட்டிருந்தோம்.

பாரத நாடு சுதந்திரம் பெறுவதற்காக அரும் பெரும் தியாகங்கள் செய்த சத்தியசீலர்களும் சாந்த மூர்த்திகளும் அடங்கிய மகோன்னதமான தேசிய ஸ்தாபனத்தின் வைர விழாவைக் கொண்டாடும் வாய்ப்பு தமிழ் நாட்டினருக்குக் கிடைத்தது கிடைப்பதற்கரிய பெரும் பாக்கியம்தான்.

காங்கிரஸ் மகாசபையின் வைர விழாக் கூட்டத்துக்கு ஸ்ரீமதி அம்புஜம்மாள் வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதைக் குறித்துத் தமிழ்ப் பெருமக்கள் மேலும் மகிழ்ச்சி யடைவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. மாபெரும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சீனிவாச ஐயங்காரின் புதல்வியான ஸ்ரீமதி அம்புஜம்மாள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொண்டதற்காகச் சிறைத் தண்டனை அடைந்தவர். காந்திஜியின் பேரபிமானத்துக்குப் பாத்திரமாகும் பேறு பெற்றவர். ஏராளமான தொகை மதிப்புள்ள தம்முடைய நகைகளை ஸ்ரீமதி அம்புஜம்மாள் சமூக சேவைக்கு உபயோகிக்கும்படி காந்திஜியிடம் நன்கொடையாகக் கொடுத்து விட்டு, தேசியப் போரில் தீவிரமாக ஈடுபட்டார்.



ஸ்ரீமதி அம்புஜம்மாள்

1930-ல் காந்திஜியின் கட்டளைக்கு இணங்க அன்னிய துணி பகிஷ்கார இயக்கம் நடந்த போது, அதில் ஸ்ரீமதி அம்புஜம்மாள் ஈடுபட்டுத் தொண்டு புரிந்து சிறைப் பட்டார். பிறகு 1932-ல் நடந்த போராட்டத்திலும் அவர் ஆறுமாதம் சிறைத்தண்டனை அடைந்தார். சிறிதுகாலம் காந்திஜியுடன் சேவாக்கிராமத்தில் வசிக்கும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது.


ஸ்ரீமதி அம்புஜம்மாளிடம் காந்தி மகானைப் போலவே அன்னை கஸ்தூரி பாவும் பேரன்பு கொண்டிருந்தார்கள்.

அவரது தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு பெருமையாகும்; இணையற்ற தமிழ் நாட்டுத் தலைவரான ஸ்ரீ சீனிவாச ஐயங்காருக்குத் தமிழ் மக்கள் செலுத்தும் நன்றியாகும்; பாரதப் பெண் சமுதாயத்துக்கு அளிக்கும் மகத்தான கௌரவமாகும்.

புதிய தலைவரைப் பாராட்டுகிறோம்

காலம் மாறிவருகிறது! எந்த ஸ்தாபனமாயினும் அதில் பட்டம் பெற்ற பிரமுகர்களும் பணம் படைத்தவர்களும்தான் உயர் பதவியைத் திறம் பட வகிக்க முடியும் என்று கருதிய காலம் உண்டு. ஆனால் அந்தக் காலம் இப்போது மாறி விட்டது. ஏழைத் தொண்டராயினும் உழைப்பின் மூலம் எத்தகைய உயர்ந்த பதவிக்கும் வரலாம் என்ற ஜனநாயக தர்மம் வலுப்பெற்று வருகிறது.

சென்ற வாரம் சென்னையில் நிகழ்ந்த சம்பவம் இதற்கு எடுத்துக் காட்டாகும். ஸ்ரீ கக்கன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதைக் குறிப்பிடுகிறோம்.



ஸ்ரீ கக்கன்

டில்லியில் மக்கள் சபை அங்கத்தினரான ஸ்ரீ கக்கன் முன்பு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். தியாகத்தினாலும் சேவையினாலும்படிப்படியாக உயர்ந்து இன்று த. நா. கா. கமிட்டித் தலைவராக ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

ஹரிஜனங்களின் முன்னேற்றத்துக்காகவும், கதர், கிராமக் கைத்தொழில்கள், முதியோர் கல்வி வளர்ச்சிக்காகவும் தொண்டாற்றியவர். ஹரிஜன முன்னேற்ற சங்கங்கள், ஜில்லா, மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் போன்ற பலவேறு ஸ்தாபனங்களில் ஸ்ரீ கக்கன் தொடர்பு கொண்டு பெரும் சேவை செய்துள்ளார். விவசாயமும் நூல் நூற்பதும் அவர் ஈடுபட்டுள்ள முக்கிய தொழில்கள் எனில், அவரது மனப் பண்பை அதாவது உழைப்பில் அவருக்குள்ள பற்றுதலை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். எனவே, எவ்விதத்திலும் தகுதி வாய்ந்த நம்முடைய ஹரிஜன சகோதரர் ஸ்ரீ கக்கன் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்காக அவருக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

* * *

ஆவடியில் அறுபதாவது காங்கிரஸ் நடக்கப் போகும் இந்த சமயத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கக்கன் அவர்களுக்குப் பொது மக்களும் நாட்டின் நலத்தையே குறிக்கோளாகக் கொண்ட தேச ஊழியர்களும் பக்கபலமாகத் துணை நின்று தமிழ் நாடு காங்கிரஸுக்குப் பெருமை தேடித் தரப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறோம்.

விழாவுக்கு உகந்த வண்ண மலர்!

இருநூறு வருஷ இருண்ட வாழ்வை அகற்றி, பெறுதற்கரிய சுதந்திரத்தை ஈட்டிக் கொடுத்த மகோன்னத ஸ்தாபனமான இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை சென்னையில் கூடுகிறது. அடுத்த வாரம் ஆவடியில் நடைபெறும் காங்கிரஸ் கூட்டம் மாபெரும் திருவிழாவாகக் காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கு லட்சோப லட்சம் தமிழ் மக்களும் தவப் புதல்வர் புதல்விகளும் விஜயம் செய்து அக் கூட்டத்தைச் சிறப்பிப்பார்கள். இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பின் இங்கு நடைபெறும் காங்கிரஸின் அறுபதாவது கூட்டத்தை, அதாவது வைர விழாவைக் கொண்டாடும் வாய்ப்புக் கிடைத்ததைக் குறித்துத் தமிழ் மக்களின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொங்கும் மகிழ்ச்சியில் பங்கு கொள்ள "கல்கி"யின் இருபத்திமூன்றும் தேதி இதழ் காங்கிரஸ் மலராக வெளியாகிறது என்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"கல்கி" காங்கிரஸ் மலரில், வார இதழில் வெளியாகும் அம்சங்களுடன், கண்களையும் கருத்தையும் கவரும் பல விசேஷ விஷயங்கள் நேயர்களுக்கு நல் விருந்தாக இருக்கும். சீரிய தலைவரின் சொல்லோவியங்கள், சைத்ரிகர் தீட்டும் சரித்திரக் காட்சிகள், வண்ணச் சித்திரங்கள், சிறந்த கதைகள் முதலியவை மலருக்கு மணத்தையும் மாண்பையும் அளிக்கும்.

பாரத நாட்டுச் சரித்திரத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் ஓவியங்கள் இந்த மலரில் வர்ணங்களில் காட்சி தரும். நமது பாரத நாட்டின் விடுதலைக்குப் போராடி வென்ற தியாக வீரரின் திருவுருவப் படங்கள் மலரை அலங்கரிக்கும். சுதந்திரத்துக்கு அடிகோலிய பெரியாரின் வரலாற்றோடு, சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு தியாகத் தீயில் குதித்த தலைவர்களின் அனுபவம் நிறைந்த கட்டுரைகள், பாரத தேசத்தின் விடுதலைக் கதையை விமர்சனம் செய்யும். அரசியல் நிலைகளின் முக்கியமான கட்டங்கள், அவ்வப்போது சரித்திரப் பிரசித்தமான சம்பவங்களை உருவாக்கிய நிகழ்ச்சிகள், தமிழர்கள் இந்த அஹிம்சைப் போரில் எடுத்துக் கொண்ட மகத்தான பங்கு, காங்கிரஸ் மகா சபையின் தோற்றம், வளர்ச்சி, அந்த சபையின் அக்கிராசன பீடத்தில் அமர்ந்து சிறப்பித்த தென்னாட்டுத் தலைவர்களைப் பற்றிய குறிப்புகள்—இவை போன்ற பல விசேஷ அம்சங்கள் நிரம்பி யிருக்கும்.

நூற்றைம்பது பக்கங்களுக்கு மேல் படிப்பதற்கும் பார்ப்பதற்கும் ரஸமான விஷயங்களைத் தாங்கி கல்கி காங்கிரஸ் மலர் மலர்கிறது.

சரியா, தவறு?

சகோதரிகளே!

உங்களைப்போல் நானும் பெண்ணாய்த்தான் பிறந்தேன். பருவத்திலே என் நெஞ்சிலும் காதல் பிறந்தது. என் கருத்தோவியம் யார் தெரியுமா? எங்கள் வீட்டில் இருந்து கலாசாலைக் கல்வி பயின்று வந்த சுந்தர். முதலில் எங்கள் கண்கள் சந்தித்தன — கருத்துக்கள் பேசின — உள்ளங்கள் காதல் கீதம் பாடின — எனக்கு அவர். அவருக்கு நான் என்று முடிவு செய்து கொண்டோம். கண்ணியமான காதலைக் கட்டுப்பாடோடு வளர்த்தோம்.

மேனாட்டுக் கல்வி பயில விமான மேறினார் சுந்தர். கைவீசி வழி அனுப்பினேன் என் காதலனை. விர்ரென்று சென்ற விமானம் வீழ்ந்தது. மேனாடு சென்ற அனைவரும் வானாடு அடைந்து விட்டார்கள் என்ற செய்தி வந்தது. ஐயோ! என் எண்ணக் கோட்டை யெல்லாம் இடிந்து தூளாகி விட்டதே! கண்ணீர் விட்டேன் — கதறினேன் — பல்லால் உதடு அழுக்கி பல காலம் வாழ்ந்தேன்.

அந்த நேரத்திலே பட்ட கடனைத் தீர்க்க வழியில்லாது பராரியாக ஓடி விட்ட அண்ணனைப் பிரிந்த அண்ணி அழும் குரல் என் காதில் விழுந்தது. நான் வாழாவிடினும் அண்ணியாவது வாழட்டும் என்று எண்ணி அண்ணன் பட்ட கடனைத் தீர்க்க பணக்கார வயோதிகருக்குத் தாரமானேன். தொட்டுத் தாலி கட்டிய பிறகு அவர் என்னைத் தொடவே இல்லை. மருமகளாக வேண்டியவளை மனைவியாக்கிக் கொண்டோமே என்று தெரிந்து, மஞ்சமேறு முன்பே மறைந்து விட்டார் மாயமாக......

இறந்து விட்டார் என்று எண்ணிய காதலர் எங்கிருந்தோ வந்தார் — கண்ணிழந்த கபோதியாக. கருணை கொண்டு உபசரித்தேன். மணமானவள் என்று அறிந்த பிறகும் அவர் என்னோடு வாழ ஆசைப் பட்டார். நான் அவரோடு வாழ்ந்து மகிழ வேண்டுமென்று அண்ணனும் விரும்பினார். அண்ணியும் ஆமோதித்தாள்—கட்டிய கணவரின் கடிதமும் கட்டளை யிட்டது.

மற்றவர் மகிழ நான் செய்த சிறந்த முடிவு **எதிர்பாராதது**? அது பாரதத்தின் பண்புக்கு உகந்ததா? தமிழ் நாட்டு தவச் சிறப்புக்கு ஏற்றதா? கற்பரசி கண்ணகியின் பரம்பரைக்குப் பொருந்துமா?

உங்கள் அபிப்பிராயம் என்ன என்பதை "**எதிர்பாராதது**" படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்.

இப்படிக்கு,

சுமதி.

C/o சரவணபவா & யூனிட்டி பிக்சர்ஸ், மதராஸ் - 18

ADVT.

காந்திமதியின் காதலன்



கல்கி

"சுவாமி! இந்தக் கட்டை கேட்கிறதே யென்று வித்தியாசமாய் நினைக்க வேண்டாம்; ஸ்வாமி மனத்தில் சாந்தி ஏற்படவில்லை யென்று இந்த ஜடத்துக்குத் தோன்றுகிறது. ஒருவேளை இது தவறா யிருந்தாலும் இருக்கலாம். அப்படி ஏதாவது ஸ்வாமி மனத்தில் இருந்தால் இந்தக் கட்டையிடம் சொல்ல யோசிக்க வேண்டாம்" என்று பெரிய ஸ்வாமியார் சின்ன ஸ்வாமியாரிடம் சொன்னார். "சுவாமி சொல்வது நிஜம்; இந்தக் கட்டைக்கு இன்னும் மனச்சாந்தி ஏற்படவில்லை. இதன் மனத்திலே ஒரு பந்தம் இருக்கிறது; ஒரு தாபம் இருக்கிறது. அது இந்தக் கட்டையுடனேதான் தீருமோ, என்னமோ தெரியாது" என்றார் சின்ன ஸ்வாமியார்.

தன்னுடைய எல்லைக்குள்ளே உயிரை விடுவோர் அவ்வளவு பேரையும் மோக்ஷத்துக்கு அனுப்பக் கூடிய மகிமை வாய்ந்த ஸ்ரீ காசி க்ஷேத்திரத்தில் தமிழ் நாட்டுப் பெரிய மடங்களுக்குச் சொந்தமான கிளை மடங்கள் பல இருக்கின்றன. அந்த மடங்களில் ஒன்றிலேதான், மேலே கூறியவாறு இரு ஸ்வாமியார்களுக்குள் சம்பாஷணை ஆரம்பித்தது. அவர்களில் ஒருவர் கொஞ்சம் வயதானவர்; ஐம்பது ஐம்பத்தைந்து இருக்கலாம். அவருடைய திருமார்பை நீண்டு வளர்ந்த தாடி மறைத்திருந்தது. முகத்தில் ரோமத்தினால் மறைக்கப்படாதிருந்த பாகமெல்லாம் அம்மைத் தழும்பு காணப்பட்டது. ஆனாலும் அவர் முகம் பார்ப்பதற்கு அருவருப்பு அளிக்கவில்லை. அந்த கோரத்திலும் ஒரு திவ்ய களை இருந்தது. அவரது ஆழ்ந்த கண்களில் சாந்தி குடி கொண்டு விளங்கிற்று. இந்தப் பெரிய ஸ்வாமியார் பல வருஷ காலமாக மேற்படி கிளை மடத்தின் தலைவரா யிருந்து வருபவர். தென்னாட்டிலிருந்து காசிக்கு வரும் தமிழர்களில் அநேகர் இந்த மடத்தில் வந்து தங்குவதுண்டு. அவர்களுக்கெல்லாம் வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பார். இதனாலெல்லாம், ஸ்வாமி பிரணவானந்தரின் புகழ் விஸ்தாரமாய்ப் பரவி யிருந்தது.

இந்த மடத்துக்குக் கொஞ்ச நாளைக்கு முன் ஸ்ரீ குமாரானந்தர் என்னும் மற்றொரு தமிழ் ஸ்வாமி சேர்ந்தார். இவருக்குப் பிராயம் சுமார் முப்பத்தைந்துக்குமேல் நாற்பதுக்குள் இருக்கலாம். இவர் ஜடை, தாடி

'ஆனந்த விகடனி'ல் 1935-ம் ஆண்டு மே மாதம் வெளியானது.

முதலியவை வளர்க்காமல் நன்றாய்த் தலையை மொட்டை யடித்து முக க்ஷவரமும் செய்து கொண்டிருந்தார். பெரிய ஸ்வாமியார் அவரை அன்புடன் வரவேற்று வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்தார். குமாரானந்தரிடம் ஒரு விசேஷத்தைப் பெரிய ஸ்வாமியார் கண்டார். ஒரு குடும்பஸ்தனை விட அதிகமாய் அவருக்கு உலக விவகாரங்களில் சம்பந்தம் இருந்தது. கடிதப் போக்கு வரவு அவருக்கு அசாத்தியம். முக்கியமாய், தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுடன் அவருக்கு அதிக உறவு இருந்தது. ஓயாமல், ஏதாவது கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்புவார். அவர்களிடமிருந்து அவருக்கு ஐந்து ரூபாய், மூன்று ரூபாய், ஒன்றேகால் ரூபாய் இப்படிச் சின்னத் தொகைகளாக மணியார்டர் வரும். அவைகளை அவர் வாங்கிக் கொண்டு தாம் ஒரு விலாஸத்துக்கு 15 அல்லது 20 ரூபாய் மணியார்டர் செய்வார். ஒரு மாதத்தில் அவருக்குச் சரியானபடி மணியார்டர்கள் வராவிட்டால், கோபம் வந்து விடும். தமிழ்ப் பத்திரிகை நடத்துவோர்களைக் கண்டபடி திட்டுவார்.

இவற்றை யெல்லாம் கவனித்துத்தான் பெரிய ஸ்வாமியார், தலைப்பில் கண்டவாறு சம்பாஷணை துவக்கினார். அவர் மேலும் கூறியதாவது :—

"எத்தனையோ பேர் தங்களுடைய மனக் கவலைகளை இந்த ஜடத்திடம் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கட்டை அவர்களுக்குத் தக்க உபதேசம் செய்து, மனச்சாந்தி உண்டாக்கி யிருக்கிறது. ஸ்வாமியும் மனத்தி லிருப்பதைச் சொன்னால். அதை நிவர்த்திக்க முடியுமா என்று பார்க்கலாம்."

குமாரானந்தர் மோன வெளியில் கலந்திருந்தார். எனவே பிரணவானந்தர் மறுபடியும் கூறியதாவது :—

"ஒரு வேளை ஸ்வாமிக்குப் பூர்வாசிரமத்திலே குழந்தைகள் இருந்து, எங்கேயாவது விட்டு வந்திருக்கிறதோ? அப்படியிருந்து சொன்னால் அதற்குத் தக்க ஏற்பாடு செய்து விடலாமே?"

குமாரானந்தர் இப்போது வாய் திறந்தார். அவர் சொன்னதாவது :—"ஸ்வாமி ஊகித்தது பாதி வாஸ்தவம். ஒரு குழந்தை யிருக்கிறது. ஆனால் அது இந்த ஜடத்தின் குழந்தையல்ல. வேறொருவரின் குழந்தை. இந்த ஜடத்தின் கழுத்தில் அதைக் கட்டி



யிருக்கிறது. அதனால்தான் துளிக்கூட இந்தக் கட்டைக்கு மனச் சாந்தி இல்லாமல் போகிறது. தலைவிதி! தலைவிதி!'' என்று படீர் படீர் என்று மொட்டைத் தலையில் போட்டுக் கொண்டார்.

பெரிய ஸ்வாமியார் அவரைச் சாந்தப் படுத்தி, ஆதியோடந்தமாய் அவருடைய வரலாற்றை விவரமாகச் சொல்லச் சொல்லவே, குமாரானந்தர் அவ்வாறே கூறத் தொடங்கினார். அவர் கூறியபடியே, ஸ்வாமியார்களின் பரிபாஷையை மட்டும் நீக்கி விட்டு, இங்கே எழுதுகிறேன் :--

1

பூர்வாசிரமத்தில் எனக்கு விருத்தாசலம் என்று பெயர். என் பெற்றோர்களுக்கு நான் ஒரே பிள்ளை. என் தகப்பனார் சர்க்கார் உத்தியோகஸ்தர். அவர் இருந்த வரையில் பணக் கஷ்டம் என்றால் இன்னதென்று தெரியாதவனாயிருந்தேன். திடீரென்று ஒரு நாள் அவர் இறந்து போனபோது நானும் என் தாயாரும் தரித்திரத்தின் கொடுமையை உணரத் தொடங்கினோம். அப்போது நான் பட்டணத்தில் காலேஜில் படித்துக்கொண்டிருந்தபடியால், என் தாயார், என் மாமன் ஊரில் அவர் வீட்டிலேயே வசித்து வந்தாள். நல்லவேளையாய் என் தகப்பனார் இன்ஷியூர் செய்திருந்தார். இன்ஷியூரன்ஸ் கம்பெனியார் கொடுத்த பணந்தான் என் படிப்புச் செலவுக்கு உதவிற்று. மற்றப்படி எங்களுக்கு வீடு, வாசல், சொத்து, சுதந்திரம் ஒன்றுமேயில்லை. விடுமுறை நாட்களில் என் மாமன் ஊருக்கு நான் போவதுண்டு. அந்தப் பட்டிக்காட்டில் யாருடனும் அதிகமாகப் பேசுவதற்கு எனக்குப் பிடிக்காது. சாயங்கால வேளைகளில் குளத்தங்கரை அல்லது ஆற்றங் கரையில் தனிமையான இடத்தைத் தேடிச் சென்று ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருப்பேன். அப்போதெல்லாம் வருங் காலத்தைப் பற்றி எனக்குச் சிந்தனையே கிடையாது. பி. ஏ. பாஸ் செய்து விட்டு ஏதேனும் உத்தியோகத்துக்குப் போக வேண்டுமென்று தான் எண்ணியிருந்தேன்.

ஒருநாள் வழக்கம்போல் சாயங்காலம் ஐந்து மணி சுமாருக்கு நான் குளக் கரைக்குச் சென்றேன்.



அங்கே, அப்போதுதான் புதிதாய்த் தளிர் விட்டு மாலைச் சூரிய கிரணங்களில் தக தகவென்று பொன் மயமாய்த் திகழ்ந்து கொண்டிருந்த அரச மரத்தடியில் உட்கார்ந்து நான் சாவகாசமாய்ப் புத்தகம் படிப்பது வழக்கம். அன்றும் அரசமரத்தடிக்குச் சென்றேன். அங்கே உட்கார்ந்து படிக்கத் தொடங்கியதும், 'களுக்' என்ற சிரிப்பின் ஒலி கேட்டு, குளத்தின் பக்கம் திரும்பிப் பார்த்தேன். குளத்தில் ஒரு விநோதமான காட்சி புலப்பட்டது. ஓர் இளம் பெண் குளித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தேகமெல்லாம் நீரில் மூழ்கி யிருந்தது. முகம் மட்டும் ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து பார்த்த வண்ணம் வெளியில் தெரிந்தது. பெண்களின் முகங்களைத் தாமரை மலருக்கு ஒப்பிடுகிறார்களே, அதன் பொருத்தம் அப்போதுதான் எனக்கு நன்றாய்த் தெரிய வந்தது.

அந்தப் பெண் ஒருவித விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் வாயிலிருந்த ஜலத்தை ஆகாயத்தை நோக்கித் துப்புவாள். அது திரும்பி வருவதற்குள் சடக்கென்று தண்ணீரில் முழுகி விடுவாள். சில சமயம் துப்பிய ஜலம் அவள் முழுகுவதற்குள் அவள் முகத்திலே விழுந்து விடும். அப்படி விழும்போதெல்லாம் அவள் 'களுக்' என்று சிரிப்பாள்.

இந்த அசட்டு விளையாட்டு அப்போது என் மனத்தை ஏன் அவ்வளவு தூரம் கவர்ந்தது என்பதைச் சொல்ல முடியாது. குளத்தில் இறங்கி அம்மாதிரி நானும் விளையாட வேண்டுமென்று ஆசை யுண்டாயிற்று. ஆனால் இதற்குள் அவ்வளவு தூரம் நான் புத்தி இழந்து விடவில்லை. அந்தப் பெண் விளையாடும் காட்சியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு முறை தற்செயலாய் அவள் கரைப் பக்கம் திரும்பிய போது என்னைப் பார்த்து விட்டாள். நான் அவள் விளையாட்டைக் கவனித்துக் கொண்டிருந்ததையும் அவள் அறிந்திருக்க வேண்டும். வெட்கம் தாங்க முடியாமல் தண்ணீரில் முழுகியவள் வெகுநேரம் எழுந்திருக்கவே யில்லை. "இதென்ன? இந்தப் பெண்ணுக்கு மூச்சுப் போய்விடப் போகிறதே?" என்று கூட எனக்குக் கவலையாய்ப் போயிற்று. அவள் வெளியே தலையை எடுத்ததும், இனி மேல் அங்கு நிற்பது அநுசிதமா யிருக்குமென்று நினைத்து விரைந்து சென்றேன்.

இதற்குப் பிறகு, அந்தப் பெண்ணை வீதியிலும் குளக்கரையிலும் இரண்டு மூன்று தடவை சந்தித்தேன். என்னைப் பார்த்த போதெல்லாம் அவள் வெட்கத்தினால் தலை குனிந்து கொள்வாள். அவள் முகத்தில் புன் சிரிப்பு உண்டாகும். உடனே யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்ற பயத்தினால் நாலு புறமும் மிரண்டு நோக்குவாள். "ஐயோ! இந்தப் பெண் ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறாள்? நல்ல வேளை சீக்கிரம் இந்த ஊரை விட்டுப் போகிறோம்" என்று எண்ணிக் கொண்டேன்.

காலேஜ் திறக்கும் நாள் சமீபித்துவிட்ட படியால் சீக்கிரத்தில் கிளம்பிச் சென்னைக்குச் சென்றேன். ஆனால் என்ன பிரயோசனம்? அவளுடைய முகமும் என்னைப் பின் தொடர்ந்து வந்தது. ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று அந்த முகம்—தண்ணீரில் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த அவ்வழகிய முகம்—என் மனக் கண்ணில் தோன்றும். மாலை வேளையில் கடற்கரைக்குச் சென்று நீலக்கடலைப் பார்த்தேனாயின், திடீரென்று அங்கே அலைகளுக்கு மத்தியில் அந்த முகம் மிதப்பதுபோல் பிரமையுண்டாகும். வானத்தில் கருமேகம் சூழ்ந்திருக்கும்போது ஆகாயத்தை நோக்கினால் அங்கேயும் அந்த முகந்தான் தோன்றும். பனிச்சென்று நிலவு வீசிக் கொண்டிருக்கும் இரவில் சந்திரனைத் தற்செயலாக நோக்கினால், நீல வானமே குளம் என்றும் சந்திரனே அவளது வதனம் என்றும் பிரமை உண்டாகும். வீதியில் என்னைக் கண்டதும் வெட்கத்தினால் குனிந்து புன்சிரிப்புத் தவழ்ந்து கொண்டிருக்கும் அவள் முகமும் சில சமயம் இடையிடையே என் மனக் கண்முன் தோன்றும்.

எப்படியோ ஒரு வருஷம் சென்றது. அவ்வருஷ முடிவில் நான் பி. ஏ. பரீட்சைக்கு எழுதினேன். பின்னர், கிராமத்துக்குச் சென்றேன்.

கிராமத்தைச் சேர்ந்த அன்றைய சாயங்காலம் வழக்கம்போல் குளத்தங் கரைக்குப் போனேன். ஆனால் என் மனம் என்னமோ, புத்தகத்தில் இல்லை. அந்தப் பெண்ணைச் சந்திப்போமா என்னும் எண்ணமே மேலோங்கி யிருந்தது. அவ்வெண்ணத்திலே மகிழ்ச்சியும் வேதனையும் பிரிக்க முடியாதபடி கலந்திருந்தன.

நான் குளத்தங் கரைக்குச் சென்ற போது அவள் ஸ்நானம் செய்து விட்டு இடுப்பில் குடத்துடன் கரையேறி வந்து கொண்டிருந்தாள். என்னைப் பார்த்தாள். ஆனால் இம்முறை அவள் தலை குனியவுமில்லை; புன் சிரிப்புக் கொள்ளவு மில்லை. இரண்டாவது தடவை என்னைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. விர்ரென்று போய் விட்டாள். ஆனால் அவளுடைய அந்த ஒரு பார்வையே என் இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்து விட்டது. அதன் பொருள் முழுவதும் நான் அப்போது அறிந்து கொள்ள வில்லையானாலும், அதில் நிந்தையும் கோபமும் நிறைந்திருந்தது மட்டும் என் உணர்வுக்குத் தெரிந்தது. சொல்ல முடியாத மனவேதனை கொண்டேன்.

அப்போதுதான் "கல்யாணம்" என்னும் யோசனை முதன் முதலில் என் உள்ளத்தில் உதித்தது. ஆனால் என்ன பைத்தியக்காரத்தனம்? எனக்கு வீடில்லை, வாசலில்லை

SHOCK-PROTECTED!
WATER-PROOF & STAIN-PROOF!



"வெஸ்ட் எண்ட" என்ற வார்த்தை நம்பகம், நீடித்த உழைப்பு இவைகளுடன் கவர்ச்சிகரமான புதிய புதிய டிசைன்களில் உள்ள கடியாரங்களைத்தான் குறிக்கிறது. இவ்வளவும் அமையப்பெற்ற "ஸோவர் ப்ரைமா" மாடல்கள் அதிர்ச்சி, தண்ணீர் இவைகளால் பாதிக்கப்படாதது. கறை படியாது. கடினமான சூழ்நிலையிலும் நேரம் பிசகாது காட்டும். சற்றும் எதிர்பாராது கீழே விழுதல், அதிர்ச்சி முதலிய விபத்தால் எந்தக்கெடுதலுமேற்படாது

West End ALL·PROOF "SOWAR PRIMA"



ALL-PROOF "SOWAR PRIMA"
10½''' Medium Size
W. E. Patent Everbright Steel Rs. 162
14-ct. Gold Capped Case ... Rs. 283

Available in three modern exclusive designs, 10½''', 8¾''' and 7¾''' (Ladies' Size)

இந்த விரிவான குறிப்புகளை கவனியுங்கள்

உயர் ரக ஸ்விஸ் வேலைப்பாடு: காந்த சக்தி, ஈரம், புழுதி முதலியவைகளால் பாதிக்கப்படாதது. அழகிய 15 ஜுவல்கள் பொருத்தப்பட்டது. ஈடு கொடுக்கக்கூடிய ஹேர்ஸ்பிரிங், பாலன்ஸ் வீல், உடைக்க முடியாத மெயின் ஸ்பிரிங், உறுதியான மடிப்பற்ற எப்பொழுதும் வெள்ளிபோல் பிரகாசிக்கும் மெடல் கேஸ், காற்று புக முடியாத உறுதியான கண்ணாடி. பளிச்சென ஜொலிக்கும் டயல். மிகத் தெளிவாகத் தெரியக்கூடிய எண்களும் முட்களும்.

WEST END WATCH Co.
BOMBAY CALCUTTA

சொத்து, நிலம் ஒன்றும் இடையாது. பரீட்சை பாஸ் ஆனால், ஏதாவது உத்தியோகம் தேடிச் சம்பாதித்துச் சாப்பிடலாம். அதற்குள் இப்போது கலியாணம் எப்படிச் செய்து கொள்வது?

இவ்வாறு குழம்பிய உள்ளத்துடன் வீடு திரும்பினேன். அந்தப் பெண்ணைப் பற்றி — என்னுடைய மன நிலையைக் காட்டிக்கொள்ளாமல்—மெதுவாக விசாரித்தேன். கிராமாந்திரத்தில் இத்தகைய விஷயங்களைச் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலா மல்லவா? அவள் பெயர் காந்திமதி என்றும், ஏழைப் பெண் என்றும், அவளுடைய தாயார் க்ஷய ரோகத்தினால் கஷ்டப்படுகிறவள் என்றும், எப்படியாவது தான் கண் மூடுவதற்குள் தன் பெண்ணுக்குக் கலியாணம் செய்து வைத்து விட வேண்டுமென்று அவள் பெரிதும் கவலைப்படுகிறாள் என்றும் தெரிந்து கொண்டேன்.

இவ்வளவு அழகும் புத்திசாலித்தனமும் வாய்ந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நான் முந்தி, நீ முந்தி என்று போட்டியிட்டுக்கொண்டு வாலிபர்கள் முன் வரவில்லை யென்னும் விஷயம் எனக்கு மிகவும் வியப்பளித்தது. இது நம்முடைய அதிர்ஷ்டத்தினால் தான் என்று எண்ணிக் கொண்டேன்.

ஆனாலும் இப்போது கல்யாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க எனக்கு மிகவும் வெட்கமா யிருந்தது. கல்யாணம் செய்து கொண்டால் பெண்ணை உடனே அழைத்துப் போக வேண்டு மல்லவா? எங்கே அழைத்துப் போவது? இவ்வருஷம் பரீட்சை தேறா விட்டால், இன்னும் ஒரு வருஷம் படிக்க வேண்டி வரும். அப்போது அவளை எங்கே விடுவது? என் தாயாரையே வைத்துக் காப்பாற்ற முடியாமல், மாமன் வீட்டில் விட்டு வைத்திருக்கும் நான், கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றால் கேட்டவர்கள் எல்லாரும் சிரிக்க மாட்டார்களா?

என்னவெல்லாமோ யோசித்து, கடைசியில் உடனே பட்டணத்துக்குத் திரும்புவதென்றும், பரீட்சை முடிவு தெரிந்ததும், பரீட்சை தேறியிருந்தாலும் தேறியிராவிட்டாலும் ஏதாவது உத்தியோகத்துக்கு முயற்சி செய்வதென்றும், உத்தியோகம் கிடைத்ததும் ஊருக்குத் திரும்பி வந்து காந்திமதியைக் கல்யாணம் செய்து கொள்வதென்றும் முடிவுக்கு வந்தேன். அவ்வாறே சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

2

என்னுடைய தகப்பனாருடைய சிநேகிதர் ஒருவர் அப்போது சைதாப்பேட்டையில் டிபுடி கலெக்டரா யிருந்தார். தம்முடைய ஆபீஸில் ஓர் ஆக்டிங் குமாஸ்தா வேலை காலியா யிருப்பதாகவும், பிறகு செக்ரடேரியேட்டில் உத்தியோகத்துக்குச் சிபார்சு செய்வதாகவும் சொன்னார். சாதாரணமாய் உத்தியோகம் கிடைப்பதனால் ஏற்படக் கூடிய சந்தோஷத்தைக் காட்டிலும் எனக்குப் பத்து மடங்கு அதிக சந்தோஷ முண்டாயிற்று. இதற்குள் பரீட்சையில் நான் முதல் வகுப்பில் தேறிய செய்தியும் கிடைத்தது. மறுபடியும் ஊருக்குத் திரும்பிப் போனேன்.

தாயாரிடம் மேற்கூறிய விவரங்களைச் சொல்லி விட்டுக் காந்திமதியைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். அவள் "ஐயோ, பைத்தியக்காரா! முன்னமே சொல்லி யிருக்கக் கூடாதா? அந்தப் பெண்ணின் தாயார் கூட, 'உன் பிள்ளைக்குக் காந்திமதியைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா?" என்று கேட்டாளே? நான்தானே 'இவனெல்லாம் இங்கிலீஷ் படித்து விட்டானல்லவா? பட்டிக்காட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டான்' என்று சொல்லி விட்டேன். இப்போது காரியம் மிஞ்சி விட்டதே. யாரோ பெரிய உத்தியோகஸ்தன் வந்து பெண்ணைக் கொண்டு போய் விட்டானே? நகைகளாகச் செய்து



"ஏ. பி. ஸி. ஸ்தாபனத்தில் அங்கத்தினர் ஆகிவிட்டால் விளம்பர வருமானம் அதிகரித்து விடுமா என்ற கேள்விக்கே இடமில்லை. சரியான படிக்கல்லும் தராசும் வைத்துக் கொண்டால் வியாபாரம் அதிகரித்து விடுமா என்று கேட்பது போலத் தான் இது!"—இவ்வளவு அழகான முறையில் சென்ற டிசம்பர் மாதம் பம்பாயில் நடைபெற்ற ஏ. பி. ஸி. ஸ்தாபனத்தின் ஆறுவது ஆண்டு கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய ஜே. என். ஸிஸ்ட் அவர்கள், வியாபார தர்மத்தை எடுத்துச் சொல்லி நல்லவர் உள்ளத்தை யெல்லாம் கவர்ந்தார்.

ஜே. என். ஸிஸ்ட் அவர்கள் பிரபல சோப் உற்பத்தியாளர்களான லீவர் பிரதர்ஸ் ஸ்தாபனத்திலும் அவர்களது விளம்பர ஸ்தாபனமாகிய லின்டாஸ் லிமிடெட் ஸ்தாபனத்திலும் பல்லாண்டுகள் வெகு சிறப்பாக உழைத்த பின், இப்போது ஓய்வு பெற்று இன்னும் சில தினங்களில் தமது தாயகமாகிய இங்கிலாந்து செல்கிறார்.

இழைத்திருக்கிறான். காந்திமதியின் அதிர்ஷ்டத்தைப் பற்றி ஊரெல்லாம் பேசுகிறார்களே!" என்றான்.

இதைக் கேட்டதும் என்னுடைய ஆகாசக் கோட்டை அப்படியே பொல பொல வென்று உதிர்ந்து விழுந்தது. வாழ்க்கையிலேயே ருசி யின்றிப் போயிற்று. இந்தச் சோக சாகரத்தி லிருந்து தப்புவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டென்று நினைத்தேன். அது தான் ஏதாவது தீவிரமான வேலையில் ஈடுபடுதல். எனவே, சீக்கிரமாகவே சைதாப் பேட்டைக்குத் திரும்பிச் சென்று வேலையை ஒப்புக் கொண்டேன்.

இவ்வாறு இரண்டே வருஷங்கள் சென்றன. ஸெக்ரடேரியட் ஆபீ ஸில் எனக்கு உத்தியோகம் கிடைத் தது. இதற்குள் ஒருவாறு காந்தி மதியை மறந்திருந்தேன். வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது பற்றிக்கூட யோசிக்க லானேன்.

ஸெக்ரடேரியட்டில் என்னுடைய ஸெக்‌ஷனுக்கு ஒரு தலைமை உத் தியோகஸ்தர் இருந்தார். அவர் பெயர் காமாட்சிநாதன். அவருக் குச் சுமார் நாற்பது வயதிருக்க லாம். ஆரம்ப முதலே எங்க ளுக்கு ஒருவரை ஒருவர் பிடித்துப் போயிற்று. பரம யோக்கியர். வேதாந்தத்தில் அதிகப் பற்றுள்ள வர். அவரைப் பார்த்தவுடன், "சம்சாரத்தில் தாமரை இலையில் தண்ணீர் போல் வாழ வேண்டும்" என்பார்களே, அதற்கு உதாரண புருஷர் இவர்தான் என்று தோன்றும்.

எனக்கு இளம் பிராயம் முதலே வேதாந்த விஷயங்களில் பற்று உண்டு. அடிக்கடி நாங்கள் பர மார்த்திக தத்துவங்களைப் பற்றிப் பேசுவோம். ஒரு சமயம் அவர் "என் வீட்டில் அருமையான வேதாந்தப் புத்தகங்கள் பல வைத் திருக்கிறேன். நீ ஒரு நாள் வந்தால் பார்க்க லாம்" என்றார்.

அவ்வாறே அடுத்த ஞாயிற்றுக் கிழமை அவர் வீட்டுக்குச் சென்றேன். நானும் அவரும் பேசிக் கொண்டிருக்கையில், அவர் மனைவி எங்களுக்குச் சிற்றுண்டி கொண்டு வந்தாள். அவளும் நானும் ஏக காலத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தோம். என்னுடைய நெஞ்சு ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டது. உடம்பிலிருந்த ரோமங்க ளெல்லாம் குத்திட்டு நின்றன. தேக மெல்லாம் வியர்வை துளித்தது. அவளுக்கும் அப்படித் தான் இருந்திருக்க வேண்டும். உடனே முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண் டாள். அன்றியும் கொண்டு வந்த தட்டுக் களை வைத்து விட்டு விரைந்து உள்ளே சென்றாள். டம்ளர்களில் ஜலம் எடுத்துக் கொண்டு அவள் திரும்பி வருவதற்கு ஐந்து நிமிஷம் பிடித்தது.

அதற்குள் என் மனத்தை ஒருவாறு சாந்தப் படுத்திக் கொண்டேன். மறுபடி அவள் வந்த தும், "இவள்தான் என் மனைவி" என்று காமாட்சிநாதன் தெரிவித்து, என்னையும்

"சோமு" அவர்களின் புதிய புத்தகங்களைப் பற்றிய விவரம் முன் பக்கத்தில் பார்க்கலாம். இந்தப் புத்தகங்களின் முதலாவது தொகுதி, 'உதயகுமாரி.' வெளியானதும் அதைக் கண்டு களிப்படைந்து ஆசிரியர் "கல்கி" அவர்கள் "சோமு" அவர்களுக்கு எழுதிய கடிதம் இங்கே பிரசுரமாகிறது. கல்கி அவர்களின் மறைவுக்குச் சரியாக ஒரு மாதத்துக்கு முன்பு எழுதப்பட்ட இந்த அருமைக் கடிதம் "சோமு"வின் கதைகளைப் பற்றிய பாராட்டு மட்டுமல்ல, கல்கி அவர்களின் தனி இலக்கியப் போக்குக்கு ஒரு நல்ல உதாரண மாக விளங்குகிறது :—

அன்புள்ள சோமுவுக்கு,

உதய குமாரி முதலிய கதைகள் பதினைந்தையும் படித்து முடித்தேன். ஆனால் முடிந்து விட்டதாகத் தோன்றவில்லை. கதா பாத்திரங்களும் பாத்திரங்களின் உணர்ச்சிகளும் உள்ளத்தில் வட்டமிட்டுக் கொண்டு வருகின்றன.

ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு ரத்தினம். புத்தகம் ஒரு ரத்தின ஹாரம்; தமிழன்னை மகிழ்ச்சியுடன் அணியக் கூடிய ஹாரம்.

வாழ்க்கையும் கற்பனையும் ஒளியும் நிழலும் இன்பமும் சோகமும் பாட்டும் இசையும் கலந்து கதைகள் உருவாகி யிருக்கின்றன. இவ்வளவுக்கும் ஆதார கருதியாக உண்மை ஊடுருவி நிற்கிறது.

"ஸ்ரீ ரவீந்திரநாத டாகூரின் கதைகளுக்கு ஒப்பாக இருக்கின்றன" என்று சொன்னால், ஒரு வேளை உயர்வு நவிற்சியாகப் படும். ஆகையால் "டாகூரின் கதைகளை நினைவூட்டுகின்றன" என்று சொல்வதுடன் திருப்தி அடைகிறேன்.

உங்களுடைய சிறுகதைகளைப் படித்தவுடன் "அடடா! சிறுகதை எழுதுவதை நாம் ஏன் நிறுத்தி விட்டோம்?" என்று எண்ணினேன். பின்னர், "நிறுத்தியதே நல்லதாய்ப் போயிற்று" என்று திருப்தி அடைந்தேன்.

புல்லாங்குழலின் கதையை நினைத்துப் பார்த்தால் உடம்பு புல்லரிக்கின்றது. ஒவ்வொன்றும் அப்படியே தான். ஹிந்தி, வங்காளி முதலிய பாஷைகளில் மொழி பெயர்த்து உதவினால் தமிழ் நாட்டின் சிறுகதைச் செல்வத்தை நம் வடநாட்டுச் சகோதரர்களும் அநுப விக்க ஏதுவாகும்.

இம்மாதிரி இன்னும் பல சிறுகதைத் தொகுதிகளை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்.

இங்ஙனம்

காந்தி நகர்

5-11-54

ரா. கிருஷ்ணமூர்த்தி

அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவள் விஷயத்தில் இவருக்கு ரொம்பவும் பெருமை என்பது நன்ருய் வெளியாயிற்று.

எனக்கு அவர் மனைவியை முன்னமேயே தெரியும் என்று நான் சொல்லவில்லை. எப்படிச் சொல்வது? என்ன சொல்வது? உண்மையிலேயே நாங்கள் பேசிப் பழகி யிருந்தோமானுல் சொல்லலாம். "குளக்கரையிலும், வீதியிலும் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்திருக்கிறோம்; கண்களினுல் பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று சொல்ல முடியுமா? ஆகையாலேயே நான் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. ஒருவேளை, அப்போதே அதைச் சொல்லியிருந்தால், பின்னுல் அவ்வளவு துன்பங்களுக்கு ஆளாகியிருக்க வேண்டாமோ என்னமோ?

"உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவாமோ?"

என்ற கவியின் வாக்கு என் விஷயத்தில் உண்மையாயிற்று.

அதன் பிறகு அவருடைய வீட்டுக்கு நான் அடிக்கடி போகத் தொடங்கினேன். என் மனத்திலே இது சம்பந்தமாக ஒரு பெரிய போராட்டம் நடந்தது. "அவர் வீட்டுக்குப் போகாதே; போவதினுல் கஷ்டந்தான் ஏற்படும்" என்று ஒரு புத்தி சொல்லிற்று. ஆனுல் இதை மீறிக் கொண்டு "அங்கே போக வேண்டும், போக வேண்டும்" என்ற ஆவல் கட்டுக் கடங்காமல் பொங்கி எழுந்து கொண்டிருந்தது.

"போக வேண்டாம்" என்ற கட்சி நாளடைவில் மங்கி மறைந்தது. அடிக்கடி போகத் தொடங்கினேன். அதனுல் காமாட்சிநாதனும் அதிக சந்தோஷமடைந்ததாகத் தெரிந்தது. முதன் முதலில் நானும் அவர் மனைவியும் சந்தித்த போது, எங்களுக்கு ஏற்பட்ட மனக் கலக்கத்தை அவர் கவனித்தாரா என்ருவது. பின்னுல் என்னை அவர் வீட்டுக்கு அடிக்கடி கவர்ந்திழுத்த காரணம் இன்னதென்று அவர் ஊகித்தாரா என்ருவது இன்று வரை நான் அறியேன். இதெல்லாம் தெரிந்தவராக அவர் சிறிதும் காட்டிக் கொள்ளவில்லை.

* * *

ஒரு நாள் அவர் வீட்டுக்குப் போன போது, அவர் வெளியில் போயிருந்தார் "உட்காருங்கள், வந்து விடுவார்" என்று காந்திமதி சொன்னுள். சற்று நேரம் இருவரும் சும்மா இருந்தோம். ஏதாவது பேசாவிட்டால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் தோன்றிற்று. "என்னைப் போல் துர்ப்பாக்கியசாலி இந்த உலகத்திலேயே கிடையாது" என்றேன். நான் யோசித்துப் பேசினேன் என்று சொல்ல முடியாது. அந்த வார்த்தைகள் தாமே வெளிவந்தன என்றே சொல்லலாம்.

"நீங்கள் இங்கே வர வேண்டாமென்று சொல்வதற்கு இருந்தேன், இந்தப் பாழும் மனசு கேட்க மாட்டேனென்கிறது" என்ருள் காந்திமதி.

அப்போது எனக்கு மயிர் சிலிர்த்தது. உடம்பு முழுவதும் படபட வென்று அடித்துக் கொண்டது. **(அடுத்த இதழில் முடியும்)**

<u>அட்டைப் பட விளக்கம்</u>

பூங்குயில் கூவும் பூஞ்சோலையில்

பூஞ்சோலையிலே பூங்குயில் கூவுகிறது. எத்தனையோ நாளாகத்தான் அது கூவுகிறது. ஆனுல் ஒரு நாள் என்ன நடந்தது! அந்தச் சோலையிலே மாமயில் வந்தது. அதன் மேல் முருகனே வந்து விட்டான்! அந்த இன்ப அநுபவத்தின் விளைவாக உள்ளத்தில் என்னென்ன மாறுதல்கள் எல்லாம் உண்டாயின! அந்தப் பெருமிதத்தில் இதயம் எப்படியெல்லாம் களித்தது!—இவற்றைச் சித்திரிக்கிறது கீழே வருகிற பாடல்.

பூங்குயில் கூவும் பூஞ்சோலையில் ஒருநாள்
மாமயில் மீது மாயமாய் வந்தான் —பூங்குயில்

பொன்முகம் அதனில் புன்னகை பொங்க
இன்னமு தென்ன இன்மொழி பகர்ந்தொரு
மின்னலைப் போலே மறைந்தான் —பூங்குயில்

பனிமல ரதனில் புதுமணம் கண்டேன்
வானில் கடலில் வண்ணங்கள் கண்டேன்
தேனிசை வீணையில் தீஞ்சுவை கண்டேன்
தனிமையில் இனிமை கண்டேன் —பூங்குயில்

வீரவேல் முருகன் மீண்டும் வருவான்
வள்ளி மணுளன் என்னை மறவான்
பேரரு ளாளன் எனக்கருள்வான் எனும்
பெருமிதத் தால்மெய் மறந்தேன் —பூங்குயில்

ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் அவர்கள் பாடி இசைத் தட்டுக்களிலே ஒலிக்கும் இந்த அருமையான பாடல் அமரர் "கல்கி" அவர்கள் இயற்றியது. இந்தப் பாடலின் அழகான காட்சிகளையெல்லாம் மூவர்ண அட்டைப் படமாக வழங்குகிருர் நமது ஓவியர் 'சந்திரா'.



ஸ்டார்ட்டிங் தொந்தரவுகளைத் தவிருங்கள்!

ஒரு நல்ல பாட்டரி தேர்ந்தெடுப்பது

எப்படி என்பதை இப்போழுது அறிந்து கொள்ளுங்கள்


உங்கள் காருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் பாட்டரி பொருத்தும் பட்சத்தில் ஸ்டார்ட்டிங் தொந்தரவுகள் நின்று விடும். எவ்வகைப்பட்ட காரிலும் உன்னத சேவை புரியும்படி பிரத்தியேகமாக உண்டாக்கப்பட்ட பாட்டரிகள் இவை.

உங்கள் காருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் பாட்டரியே ஏன் சிறந்ததென்பதற்கு ஐந்து விசேஷ காரணங்கள் இதோ:

- ★ பெரும்பான்மையான புதுக் கார்களிலும் பொருத்தப்படுவது இதுவே
- ★ கெட்டியாக்கப்பட்ட ரப்பரில் செய்த கேஸ்
- ★ பூர்ணமாக பரிசோதிக்கப்பட்டது
- ★ நம்பகமான 6-மாத உத்தரவாதம்
- ★ நியாயமான விலைகள்

உங்கள் பணத்திற்கு பூர்ண பயன் கிடைக்க..

ஸ்டாண்டர்ட்




ஸ்டாண்டர்ட் பாட்டரீஸ் லிட்., பம்பாய்

விநியோகஸ்தர்கள்: அடிஸன் & கம்பெனி லிட்., 158, மவுண்டு ரோடு, மதராஸ்

கிளைகள்: பெங்களூர் & வெல்லிங்டன் (நீலகிரி)

STB. 720



அத்தியாயம் 31

"ராஜாராம் விஜயம்!"

என் தந்தையின் பாட்டையும், கிராம மக்களின் வில்லுப் பாட்டையும், ஏற்றம் இறைக்கும் குடியானவர்களின் களைப்பை வென்ற இனிய குரலிலிருந்து எழும்பும்

"மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே"

என்ற கீதத்தையும், மழைக் காலத் தவளைகளின் "ஙஞணநமன" என்ற ஓசையையும் தவிர, வேறு எந்தவிதமான சங்கீதத்தையும் கேட்டு அறியாத குங்குமத்துறைக்கு, சினிமாப் பாட்டுக்களைக் கேட்டுப் பரவசமடையும் வாய்ப்பு ஒரு நாள் நேரிட்டது.

இரு பக்கங்களிலும் பெரிய சினிமா விளம்பரங்களுடன் ஒற்றை மாட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போனார்கள். அது மாத்திரமா? அதில் ஒருவன் அமர்ந்து அதியற்புதமான ஒரு சினிமா கீதத்தை, தன் விரிசல் விழுந்த புல்லாங்குழலில் அபஸ்வரம் அதிகமாக வந்து விடாமல், ஜாக்கிரதையாக வாசித்துக் காதுகளுக்குப் "பரவச" மூட்டினான். வீதிகள் அனைத்திலும் சிறிய விளம்பரக் காகிதங்கள் பறந்தன. சிறுவர்கள் முதல் கிழவர்கள் வரையில் அனைவரும் அந்தக் காகிதங்களின் பின்னால் பறந்தனர். சினிமாவுக்குப் போகிறார்களோ இல்லையோ, இந்த சினிமா விளம்பரங்களைப் பொறுக்குவதில் குங்குமத்துறை பூராவுமே மிக மிக அக்கறை காட்டியது.

இத்தனை அல்லோல கல்லோலங்களுக்கும் காரணம் வெகு நாட்களுக்குப் பிறகு குங்குமத்துறைக்கு வந்திருந்த "பயாஸ்கோப்" என்று சொல்லப்பட்ட சினிமாக் கூடாரந்தான். "அதிரூப சுந்தரி" என்ற மிகப் பழைய படம் வந்திருந்தது. யாரைப் பார்த்தாலும் இந்த "அதிரூப சுந்தரி"யை வெகுவாக வர்ணித்துக் கொண்டே இருந்தார்கள்!

இத்தனை அமர்க்களத்தையும் காதில் போட்டுக் கொள்ளாதவர் என் தந்தை மந்திரமூர்த்தி ஒருவர்தான். அவர் எத்தனையோ முற்போக்கான கொள்கைகளை உடையவராக இருந்தும், சினிமா ஒன்று மாத்திரம் அவருக்குப் பிடிக்காது. இந்த விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். இருந்த போதிலும் எனக்கு சினிமாப் பார்க்க வேண்டும் என்று மனதிற்குள் ரொம்ப ஆசை. அதைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தேன்!

ஒரு நாள் ரங்கதுரையும் என் தந்தையும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது சினிமா வண்டிக்காரர் ஊதும் குழல் முழக்கம் கேட்டது. என் தந்தை, "சிவ, சிவா!" என்று தம் காதுகளைப் பொத்திக் கொண்டார்.

"நீங்கள் என்ன பொத்திக் கொண்டாலும் பிரயோஜனமில்லை. காதைத்

துலைத்து விட்டுத்தான் போவது என்று அந்த வண்டிக்காரன் விரதமெடுத்துக் கொண்டிருக்கிறானும்" என்றார் ரங்கதுரை, கேலியாக.

"ஊதித்தான் தொலைக்கிறாரே, ஏதாவது தெம்மாங்கு, கும்மி, அல்லது காவடிச் சிந்து ஊதக் கூடாதோ? இது கபந்த சங்கீதமாகவல்லவா இருக்கிறது?"

இந்தச் சந்தர்ப்பத்தில் நான், "அதிரூப சுந்தரி சினிமாவில் கதாநாயகி பாடும் பாட்டாம் இது. சினிமாவில் ரொம்ப நன்றாக இருக்கிறதாம். கேட்டுக் கண்ணீர் விடாதவர்கள் இல்லையாம். இவர் ஊதுவதுதான் சகிக்க வில்லை. நமது பண்ணையாட்கள் கூட குடும்பத்தோடு போய் விட்டு வந்திருக்கிறார்கள்" என்று பதில் சொன்னேன்.

ரங்கதுரை, "ஐயோ! இப்படிப் பிதற்றுகிறாயே?" என்று கேட்பது போல் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார். நான் சொன்னது சரியில்லை என்று எனக்கு உடனே தெரிந்து போய் விட்டது. என்னுடைய ரஸிகத் தன்மையின் தரத்தை ரொம்பக் குறைத்து வெளிப்படுத்தி விட்டேனே என்ற கவலை என் மனத்தை அரித்தெடுத்து விட்டது.

மந்திரமூர்த்தி நேராகவே சொல்லி விட்டார். "ஏன் இந்து உன் புத்தி இப்படிப் போகிறது? திருவாசகமும், திருப்பாவையும், திருவிருத்தமும் கேட்டுப் பழக்கமான உனக்கு இந்த மட்டமான சங்கீதம் எப்படிப் பிடிக்கிறது?" என்று கேட்டார்.

எனக்கு ரொம்ப வருத்தமாகப் போய் விட்டது. அதைக் கவனித்த ரங்கதுரை, "இந்து சிறியவள் தானே? அப்படி என்ன, நல்லது கெட்டது தெரிந்து கொள்ளும் வயதாகி விட்டதா அவளுக்கு?" என்றார்.



என் தந்தை அந்தக் காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த 'ஹாஸ்ய விருந்து' என்னும் பத்திரிகையைத் தவறாமல் வரவழைப்பார். அதில் சினிமா விமரிசனங்கள், சங்கீதக் கச்சேரி விமரிசனங்கள் முதலியன வெளியாகும். என் தந்தை அதில் வெளியாகும் வேதாந்தக் கட்டுரைகளையும், அரசியல் சம்பந்தமான கட்டுரைகளையும் மாத்திரம் படித்து விட்டுப் போட்டு விடுவார். நான் அந்த சினிமா விமரிசனங்களைப் படித்துப் படித்து சினிமா என்றால் நன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று என் கற்பனையில் தீர்மானித்துக் கொண்டிருந்தேன். என் மனதிற்குகந்த மணவாளருடன் சினிமாவுக்குப் போவதாகச் சில சமயம் பகற்கனவு கண்டதும் உண்டு.

"ஹாஸ்ய விருந்தில் சினிமாவைப் பற்றி 'அப்படி இருக்கிறது' 'இப்படி இருக்கிறது' என்றெல்லாம் பிரமாதமாக எழுதுகிறார்களே, சினிமாப் பார்ப்பதே தவறாக இருந்தால் இப்படி எழுதுவார்களா?" என்றேன்.

ரங்கதுரை என் உதவிக்கு வந்தார். "இல்லை, இந்து! எந்த சாதனத்தையும் அறிவு வளர்ச்சிக்காக உபயோகப்படுத்துவதில் தவறில்லை. ஆனால் மிருக உணர்ச்சிகளை உண்டாக்கக் கூடிய சினிமாக்கள் அறிவைக் கெடுத்து விடும். சாராயத்தை விடப் போதை தரும்" என்றார்.

என் தந்தை, "ரங்கதுரை! நீ சொல்வதுகூட சரியில்லை என்பது என் அபிப்பிராயம். எனக்கு சினிமாக் கலையைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனால் ஒன்று சொல்லுகிறேன். மனிதர்களுக்கு இயல்பாகப் பல ஆசைகள், ஆசாபாசங்கள், உணர்ச்சிகள் இருக்கின்றன. இவைகளை வாழ்வில் அவ்வப்போது அனுபவித்து விட வேண்டும். அதைப் போன்ற நிழலை உள்ளத்திற்குக் காட்டி ஏமாற்றுவது சரியல்ல. நிறைவேறாத உணர்ச்சிகளை சினிமாவில் கண்டு திருப்தி செய்விக்க முயல்வது அறிவீனம். இன்பமும் துன்பமும் தனக்குள்ளேயே இருக்கிறது. வெளியில் அல்ல. ஆனால் நான் இப்படிச் சொல்வது உங்களுக்கெல்லாம் பிடிக்காதென்று எனக்குத் தெரியும்" என்றார்.

ரங்கதுரை சற்று மௌனமாக இருந்தார். "நீங்கள் சொல்வதில் ரொம்ப உண்மையிருக்கிறது. ஆனால் புரிவது ரொம்ப சிரமம். தன்னைத்தான் உணர்ந்து விட்டால் அவன் ஞானியாகி விடுவானே? ஆயினும், எந்தக் கலைத் துறையானாலும் நன்மையைப் பரப்புவதற்கு உபயோகப் படுத்தலாம் என்று நான் நினைக்கிறேன். ஏன்! பக்தியைப் பரப்புவதற்கு பக்திமான்களின் கதைகளைப் படம் பிடித்து வெளியிடலாமல்லவா? இங்கிலாந்து முதலிய மேற்கு நாடுகளில் சினிமாக் கலை மிக முன்னேறி

யிருக்கிறது. நம் நாட்டில் இன்னும் முன்னேறவில்லை'' என்றார்.

இந்தச் சமயத்தில் யாரோ வந்து வாசலில் நின்றார். கட்டை குட்டையாக இருந்த அந்த மனிதரைப் பார்த்தவுடனேயே எனக்குச் சிரிப்பு வந்தது. மந்திர மூர்த்தி எழுந்து போய் "வாருங்கள்" என்று அழைத்தார். அந்த மனிதரும் உள்ளே வந்தார். ஸெண்ட் வாசனை விடெங்கும் வியாபித்தது.

"என்ன, மாமா! நான் யாரென்று தெரிகிறதா?'' என்று கேட்டுக்கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தார், புதிதாக வந்தவர்.

மந்திரமூர்த்தி அந்த மனிதரைப் பார்த்துக் கொண்டே, "எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறது. ஆனால் யாரென்று புரியவில்லையே?'' என்றார்.

"என்ன மாமா! நான்தான் அய்யாக் குட்டி. இங்கே கொஞ்ச நாட்கள் இருந்து விட்டு ஓடி விட்டேனே நினைவில்லையா?''

"அடப் பாவி, நீ அய்யாக் குட்டியா? உங்க அத்தை போய் இத்தனை வருஷங்களுக்குப் பிறகாவது துக்கம் கேட்க வந்தாயே. நல்ல பிள்ளை நீ'' என்றார் மந்திரமூர்த்திப் பண்ணையார்.

பிறகு அவனைப் பற்றி விசாரித்தார். "என்னப்பா செய்து கொண்டிருக்கிறாய்? ஏதோ நாடகத்தில் சேர்ந்து நடிக்கிறாய் என்று கேள்விப்பட்டேன். பிறகு யாரோ சிங்கப்பூர் போயிருக்கிறாய் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஒரு தகவலும் தெரியவே யில்லையே.''

"உண்மைதான், மாமா! இங்கு நாடகம் நடந்து கொண்டிருந்த தல்லவா? அதில் பபூன் பாகத்தை நான் நடித்தேன். உங்களுக்கெல்லாம் தெரிந்தால் தடுத்து விடுவீர்களென்று அப்படி நடித்தேன். அந்த நாடகக்காரர்கள் என்னைத் தங்களுடன் வரும்படி வற்புறுத்தி அழைத்துப் போனார்கள். அவர்களுடன் சிங்கப்பூருக்குப் போனேன். கதையை வளர்த்துவானேன்? அங்கே சண்டை பிடித்துக் கொண்டு திரும்பி வந்தேன். பிறகு சினிமாவில் சேர்ந்து கொஞ்சம் நாள் நடித்துக் கொண்டிருந்தேன். இப்போது நான் சினிமா முதலாளியாகி விட்டேன். இப்போது இந்த ஊருக்கு வந்திருக்கும் சினிமாக் கொட்டகையின் முதலாளி ராஜாராம் என்பது நான்தான். அப்படியே உங்களையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்று சொன்னார் அய்யாக் குட்டி.

ரங்கதுரை என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தார். அதை அந்த அய்யாக் குட்டி கவனித்தார். உடனே, "இவர்கள் யார்?'' என்று என் தந்தையைப் பார்த்துக் கேட்டார்.

"இவள் என்னுடைய பேத்தி, இந்துமதி. இவர் இந்த ஊர் ஜமீந்தார் தங்க பாண்டியனுடைய நண்பர். எனக்கும் நண்பர்'' என்றார் மந்திரமூர்த்தி.

"பேத்தியா? அத்தைக்குப் பிறந்த குழந்தைகள் இருக்கிறார்களா, என்ன?'' என்று கேட்டார் அய்யாக் குட்டி. அவருடைய குரலில் ஒருவித ஏமாற்றம் இருந்ததாக எனக்குப் பட்டது.

இதற்கு என் தந்தை பதில் சொல்லாமல், "இந்து! அய்யாக்குட்டியும் இன்று இங்கு சாப்பிடுவார். நான் வேண்டுமானால் உனக்கு ஒத்தாசை செய்கிறேன்'' என்று எழுந்து உள்ளே வந்து விட்டார். ரங்கதுரையும் என்னிடம் மாலை பாதிரித் தோட்டத்துக்கு வரச் சொல்லி விட்டுப் போய் விட்டார்.

அய்யாக்குட்டி அசைகிற வழியாய் இல்லை. நன்றாகச் சாப்பிட்டார். பிறகு மேல் துண்டை விரித்துப் படுத்து விட்டார். என் தந்தையிடம் அவரைப் பற்றி விசாரித்தேன். அய்யாக் குட்டி தன்னுடைய மைத்துனன் மகன் என்றும், சிறு வயதில் தம் வீட்டில் இருந்து கொண்டிருந்தான் என்றும், சகவாச தோஷத்தினால் கொஞ்சம் பணத்தைத் திருடிக் கொண்டு ஓடிவிட்டானென்றும் மந்திரமூர்த்தி கூறினார்.

"நல்ல அய்யாக்குட்டி! யானைக் குட்டி என்று பெயரிட்டிருந்தால் ரொம்பப் பொருத்தமாக இருக்கும். இங்கிருந்து நகர மாட்டார் போலிருக்கிறதே'' என்றேன் நான்.

"அதிகமிருந்தால் ஒரு மாதம் இருக்கப் போகிறான். வந்தவனைப் போ என்று எப்படிச் சொல்வது? இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே!'' என்றார் என் தந்தை மந்திரமூர்த்தி.

எனக்கென்னவோ அய்யாக் குட்டியை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனால் அவர் வலியப் பேசிய போது என்னால் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அவர் பேசிய விதம், நடந்து கொண்ட முறை எல்லாம் அவரிடம் எனக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பைக் குறைத்து, நல்ல எண்ணம் ஏற்படச் செய்தது. மிகப் பணிவாகவே பேசினார். மந்திரமூர்த்தி கூட அவர் பேச்சைச் சுவாரசியமாகக் கேட்கத் தொடங்கினார்.

பல ஊர்களைப் பற்றியும், அந்த அந்த இடத்து மனிதர்களைப் பற்றியும் சிரிக்கச் சிரிக்க எத்தனையோ விஷயங்கள் சொன்னார். சிங்கப்பூரில் உள்ள பழக்க வழக்கங்களைப் பற்றிக் கூறினார். இலங்கைக்குக் கூடப் போயிருப்பதாகக் கூறினார். அவர் சொன்னதில் எவ்வளவு தூரம் உண்மையிருந்ததோ யாருக்குத் தெரியும் அது?

ஆனால் இரண்டு நாட்களுக்குள் 'ரொம்ப நல்ல மனிதர்' என்ற எண்ணம் ஏற்படும்படி செய்து விட்டார். ரங்கதுரையிடம் அவர் ரொம்ப மரியாதையாகவும், அன்புடனும் நடந்து கொண்டதினால் எனக்கு முதலில் தோன்றிய வெறுப்பு படிப்படியாக மறைந்தது. நானும் சகஜமாக என் கதையையெல்லாம் அவரிடம் சொல்ல ஆரம்பித்தேன். அவர் எல்லாவற்றிற்கும் மேலாக மந்திரமூர்த்தியை ரொம்பப் புகழ்ந்தார்.

"அவர் புண்ணியமூர்த்தி. மகா தர்மவான். என்னைச் சிறு வயதில் மிக அன்போடு வளர்த்தார். எனக்குத்தான் அவர் அருமை அப்போது தெரிந்திருக்கவில்லை. அவரை மாதிரி மனிதர்கள் லக்ஷத்தில் ஒருவர்தான் இருக்க முடியும்" என்றெல்லாம் சொன்னதும் எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. புகழ்ச்சியில் மயங்காதவர்கள் யார்தான் இருக்கிறார்கள்? என் தந்தையை மூன்றாவது மனிதர் புகழ்வதைக் கேட்டபோது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அதிலும் அவர் அந்தப் புகழ்ச்சிக்குப் பாத்திரமானவராக இருந்ததால் இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு உண்டாயிற்று.

சினிமா எடுப்பது சம்பந்தமான பல விஷயங்களை அவர் கூறுவார். நான் வியப்புடனே கேட்டுக் கொண்டிருப்பேன். இரண்டு நாட்களிலேயே அய்யாக்குட்டி எங்கள் வீட்டு மனிதருள் ஒருவராகிவிட்டார். அவர் ஒரு அன்னியர் என்பதையே ரங்கதுரை உள்பட எல்லோரும் மறந்து விட்டோம். அவர் இருக்கும்போதே மந்திரமூர்த்தி என்னையும் ரங்கதுரையையும் பரிகசித்தார்.

"ரங்கதுரை! இந்து படும்பாட்டைப் பார்த்தால் அவளால் உன்னை விட்டு இருக்க முடியாது போலிருக்கிறதே! அவளை நீ அழைத்துக் கொண்டுதான் சீமைக்குப் போக வேண்டும்" என்று சொல்லி விட்டு, "இந்து, உனக்கு ராம நாடகக் கீர்த்தனம் சொல்லித் தருகிறேன். நீ பாடினால் ரங்கதுரை உன்னை விட்டுப் போகவே மாட்டார்.


> **எப்படி மனம் துணிந்ததோ—ஸ்வாமி**
> **வனம் போய் வருகிறேனென்றால்**
> **இதை ஏற்குமோ பூமி?"**

என்று உசேனி ராகத்தில் பாட ஆரம்பித்து விடுவார். அந்த நாட்கள் அப்படியே இருந்திருக்கக் கூடாதா என்று இப்போது நினைத்து நான் ஏங்குகிறேன். கவலை என்பதையே சிறிதும் அறியாமல், எப்போதும் சிரிப்பும் களிப்புமாக இருந்த அந்த நாட்கள் இனிமேல் நான் என்ன ஏங்கினாலும் வரப் போகிறதா? ஆனால் அந்த இன்ப நாட்களை எண்ணிப் பார்க்கும் போதே, இந்தச் சிறையில் அடைபட்டிருக்கிறோம் என்பதே மறந்து விடுகிறது. அந்த நாட்களில் வாழ்வதாகவே நினைத்து ஆனந்தப் படுகிறேன். திடீரென்று இந்தக் கம்பிகளும், அழுக்கடைந்த சுவர்களும் முன்னே நின்று, "அது கனவு" என்று சொல்லி என்னைத் திடுக்கிட வைக்கின்றன. ஆனால் நான் எதற்காகக் கலங்க வேண்டும்? நானும் பிறந்து இருபத்து மூன்று வருடங்கள் வாழ்வதற்குள், வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகள் அனைத்தையும் அனுபவித்து விட்டேன். இனி மேல் நான் இருந்து புதிதாக ஒன்றையும் அனுபவித்து விடப் போவதில்லை. இறைவன் திருவடியில் அமைதியை நாடிய என்னுடைய உள்ளம் இப்பொழுது பிரார்த்திக்கிறது.

அத்தியாயம் 32

"ஒட்டும் இரண்டுளம்"

தினமும் ரங்கதுரையைத் தனிமையில் சந்திக்க நான் பாதிரித் தோட்டத்துக்குத்தான் போக வேண்டியிருந்தது. அய்யாக்குட்டி வந்த பிறகு அவருடன் மனம் விட்டுப் பேச வீட்டில் முடியவில்லை. அவருடைய அமுத மொழிகளைக் கேட்க வேண்டுமென்று ஆர்வம் பொங்கித் ததும்பும். அதற்கு வாய்ப்புக் கிடைக்காமல் போகும் போதுதான் அதன் வேகம் இன்னும் அதிகமாகும். எப்போதுமே ஒரு வஸ்து இல்லாத போதுதானே அதன் அருமையை நாம்



நன்றாகத் தெரிந்து கொள்கிறோம்.

அது என்னவோ தெரியவில்லை. ரங்கதுரையின் பேச்சில் ஒரு காந்த சக்தி இருந்தது. எத்தனை பெரிய விஷயமானாலும் குழந்தைக்குக் கூடப் புரியும்படி தெளிவாகச் சொல்லும் சக்தி அவருக்கு இருந்தது. விஷயத்தில் குழப்பமே இருக்காது. அவருடைய கலாசாலையில் பாதிரிமார்கள் அனைவரும் அவரிடம் அன்பைச் சொரிந்ததில் அதிசயமே இல்லை. அவருடைய வசிகரத் தோற்றமும், அறிவுச் சுடர் வீசும் கண்களும், தெளிவான பேச்சும், பார்த்தவர்களை யெல்லாம் கவர்ந்தன. அவர் என்ன சொன்னாலும் செய்து விடலாமென்று தோன்றும். இப்படிப் பட்டவரின் அன்புக்குப் பாத்திரமாவதற்கு நான் என்ன பாக்கியம் செய்தேனோ? அதை எண்ணும் போது எனக்கு 'என்ன துன்பம் நேரிட்டாலும் பரவாயில்லை. அவருடைய அன்பு நிரந்தரமாக இருக்கிறதே, அது ஒன்றே போதும்' என்று தோன்றுகிறது. அவரை மணந்து கொள்ள நவநாகரிக மங்கைகளும், செல்வத்தில் திளைக்கும் குமரிகளும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் புறக்கணித்து விட்டு என்னிடம்

இன்னும் அன்பைப் பொழிகிறார். அவருடைய அந்தஸ்தையும் கௌரவத்தையும் எனக்காகத் தியாகம் செய்திருக்கிறார். வேலையையும் விட்டு விட்டுக் குங்குமத் துறைக்குப் போய் என்னைக் காப்பாற்ற ஏதேனும் ருசு கிடைக்குமா என்று தேடிக் கொண்டிருக்கிறார். என் அன்னை சந்திரமணியும், என் தந்தை மந்திரமூர்த்தியும் அவருடைய முயற்சிக்குத் தெய்வமாக இருந்து உதவுவார்கள் என்று என் மனத்தில் தோன்றிக் கொண்டேயிருக்கிறது.



எங்கேயோ போகிறேனே. கதையின் தொடர்ச்சிக்கு வருகிறேன். ஆம்! என் வாழ்வு ஒரு கதைதான். கதையாகவே சீக்கிரம் முடிந்து விட்டால் நலமே என்று சில சமயம் தோன்றுகிறது. சில சமயம் அவருக்காக நான் வாழ வேண்டும் என்று தோன்றுகிறது. இந்த மனப் போராட்டம் எப்போதுதான் ஓயுமோ?

ரங்கதுரையைச் சந்திக்கப் பாதிரித் தோட்டத்துக்கு ஓடினேன். முதலில் வேலியோரத்தில் மறைந்து நின்று புன்னை மரத்தடியில் அவர் நிற்கிறாரா என்று பார்த்து விட்டுத்தான் உள்ளே நுழைவேன். இல்லாவிட்டால் அதில் நுழையப் பயமாக இருக்கும்.

சொக்கையா தோட்டத்தை வாங்கிய பிறகு அந்தப் பக்கமே நான் போவதில்லை. அதிலும் சுசீலாதேவி சொன்னது என் மனத்தில் அழுத்தமாகப் பதிந்து போயிருந்தது. தோட்டத்தில் ரங்கதுரை இல்லாதபோது சொக்கையாவைச் சந்திக்கும்படி நேரிட்டு விட்டால் என்ன செய்வதென்று பயமாக இருக்கும். ரங்கதுரையிடம் நாம் இங்கே சந்திக்க வேண்டாமென்று சொல்லிப் பார்த்தேன். அவர் கேட்கவில்லை. அந்தச் சோலைதான் தனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறதென்று கூறினார். நான் சொக்கையாவைப் பற்றிக் கூறியபோது, அவர் சற்று அலட்சியமாக, "சொக்கையாவைப் பற்றி நீ எதற்குப் பயப்படுகிறாய், இந்து? நாம் சரியாக நடந்து கொள்ள வேண்டியது நம் கடமை. 'மற்றவர்கள் என்ன செய்வார்களோ?' என்று ஏன் நாமாகவே ஒரு பயத்தை மனத்தில் சிருஷ்டித்துக் கொண்டு துன்பப் படவேண்டும்? நீ தைரியமாக இருந்தால்தான் எனக்குப் பிடிக்கும். கோழையாக இருக்கக் கூடாது" என்றார்.

சிவப்புப் பங்களாவின் ஜன்னல்கள், கதவுகள் எல்லாம் எப்போதும் சாத்தியே இருக்கும். நான் அன்று வேலியோரத்தில் நின்று கவனித்தபோது ரங்கதுரை மரத்தின் மீது உட்கார்ந்து படித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. தூரத்தில் சிவப்புப் பங்களா மரங்களின் நடுவே தெரிந்தது. ஒரு ஜன்னல் மாத்திரம் திறந்திருப்பது போல் தோன்றியது. ரங்கதுரை உட்கார்ந்திருந்த மரத்தின் அருகில் வந்த போது அந்த ஜன்னல் திறந்திருந்தது நிச்சயமாயிற்று. ரங்கதுரை கீழே இறங்கினார்.

"ஏன் இன்று தேவியின் முகம் வாடியிருக்கிறது?" என்று கேட்டார். நான் சிவப்புப் பங்களாவை அவருக்குச் சுட்டிக் காட்டினேன்.

அவர் பார்த்து விட்டு, "அங்கே ஒன்றுமில்லையே? இத்தனை நேரம் நான் தனியாக உட்கார்ந்திருப்பது போல், அந்த பங்களாவும் எத்தனையோ நாளாகத் தனியாக அங்கு நிற்கிறது. இத்தனை நேரம் அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். 'இந்த பங்களாவுக்குத் துணையாக நாமும் இப்படி உட்கார்ந்து கொண்டே இருக்க வேண்டியதுதான் போலிருக்கிறது. இந்துமதி எங்கே வரப்போகிறாள்?' என்று நினைந்தேன்! ஏன் இத்தனை நேரம்?" என்றார்.

"அதிருக்கட்டும். ஏன் அந்த ஜன்னல் இன்று மட்டும் திறந்திருக்கிறது?" என்று கேட்டேன்.

"ஐயோ! உன் தைரியத்தைப் பார்த்து சந்தோஷப்பட பயில்வான் காசிலிங்கம் இங்கு இல்லையே? பங்களாவின் ஜன்னல் காற்றில் திறந்து கொண்டிருக்கும். அங்கே பிசாசு இருக்கும், அது ஜன்னலை வந்து திறந்திருக்கும் என்று யாரேனும் சொல்லி விட்டார்களோ?" என்று சொல்லிப் பரிகசித்தார்.

"எனக்கு ஒன்றும் பயமாக இல்லை. பேய் பிசாசு இவைகளில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. சொக்கையாவின் தோட்டத்தில் நாம் சந்திப்பது அவருக்குப் பிடிக்காமலிருக்கலாம் என்ற ஒரே கவலைதான். வீட்டில் இருந்தால் உங்களுடன் தனியாகப் பேச வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. இங்கே வந்தால் யாராவது பார்த்து விட்டுத் தப்பர்த்தம் செய்து கொள்ளப் போகிறார்களோ என்று கவலையாக இருக்கிறது" என்றேன்.

ரங்கதுரை முகவாயைத் தம் கையால் தொட்டுக் கொண்டே, "இந்து! நாம் தவறான காரியம் எதுவும் செய்யவில்லையே? சொக்கையா பார்த்து விட்டால்தான் என்ன குடி முழுகிப் போய் விடும்? யார் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொண்டு போகட்டும். என் இந்துவுடன் நான் பேசத்தான் பேசுவேன்" என்றார்.

என் உள்ளம் பரவசமடைந்தது. அவருடைய கையை என் கையில் எடுத்துக் கொண்டு, "இந்த அன்பு என்றும் நிலைத்திருக்க வேண்டும். நான் உங்கள் இந்துவாகவே என்றும் இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை" என்று கூறினேன்.

"அப்படியே ஆகுக" என்று சிரித்துக் கொண்டே கூறினார் ரங்கதுரை. ஆகா! அந்தச் சிரிப்புத்தான் எப்படி என் நெஞ்சை நிறைத்தது!

பிறகு அவர், "இந்து! உனக்குப் பழம் பாடல்களையே கேட்டுப் பழக்கமாகி விட்டது. நான் ஒரு புதுப் பாட்டு பாடுகிறேன், கேட்கிறாயா?" என்றார். நானும் தலையை ஆட்டினேன்.

பாரதியாரின் "மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே" என்ற பாடலை ஒரு புதிய மெட்டில் பாடிக் காட்டினார். இனிமையான குரலில் அவர்,

"ஓங்கி வரும் உவகை ஊற்றி லறிந்தேன்
ஒட்டும் இரண்டுளத்தின் நட்டி லறிந்தேன்!"

என்று என்னைப் பார்த்துக் கொண்டே பாடியபோது எனக்கு ககனமார்க்கத்தில் பறந்து செல்வது போன்ற இன்ப உணர்ச்சி உண்டாயிற்று. அவருடைய பாடலுக்கு மூங்கில் புதரில் காற்று வீசிய போது உண்டான ஓசை சுருதி கூட்டியது. எங்கோ ஒரு மரங்கொத்தி டொக் டொக்கென்று உற்சாகமாகத் தாளம் போட்டது.

பிறகு கண்ணம்மா கேள்வி கேட்பதாக வரும் அடிகளை என்னைப் பாடச் சொன்னார். பிறகு எழுதிக் கொடுத்து, சரியாகப் பாட வேண்டுமென்று சொன்னார். மறு நாள். இத்தகைய சம்பவங்கள் என் வாழ்க்கையில் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டும்.

"செந்தமிழ் நாடு" என்ற கும்மியை அழகாகப் பாடினார். "பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்" முதலிய பாரதியாரின் தேசிய கீதங்களையும் பாடிக் காட்டினார்.

"தேசத்தினிடம் இவ்வளவு பற்று உடையவர் எதற்காகச் சீமைக்குப் போய்ப் படிக்க வேண்டும்? இங்கேயே இருக்கலாமே?" என்றேன்.

"இல்லை, இந்து! தேச பக்தி வேறு; படிப்பு வேறு. சீமைக்குப் போவதனால் நம் தேசத்தினிடம் எனக்கு பக்தி குறைந்து விடுமா, என்ன? பார்க்கப் போனால் அதிகமாகும். நான் என் படிப்பை முடித்த பிறகு நாட்டுக்குச் சேவை செய்ய ஒரு தனி வழியை வகுத்துக் கொள்வேன். அதன்படி சேவை செய்வேன்" என்றார்.

மூங்கில் புதர்களிலிருந்து சலசலவென்ற ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. திடீரென்று பெருங்காற்று அடிக்க ஆரம்பித்தது. வானத்தை நிமிர்ந்து பார்த்தேன். மேற்குத் திக்கில் கன்னங் கரேலென்று மேகங்கள் கவிந்திருந்தன. நடு வானத்தை நோக்கி அவை பாய்ந்து வந்து கொண்டிருந்தன. என் உள்ளம் கலங்கியது. "என்னை ஒருக்காலும் கை விட்டு விட மாட்டீர்களே?" என்று கேட்டேன். உணர்ச்சி மிகுதியினால் எனக்கு நெஞ்சை அடைத்தது. கரிய மேகங்கள் விரைந்து வருவதைப் பார்த்த போது எனக்கு யானைக் கூட்டம் ஒன்று என்னைத் துரத்திக் கொண்டு வருவதாகத் தோன்றியது. என் உடல் நடுங்கிற்று.

அதை உணர்ந்த ரங்கதுரை உள்ள நெகிழ்ச்சியுடன் கனிவாக, "இந்து! நான் என் உணர்ச்சிகளை அதிகமாக வெளிப்படுத்துவதே இல்லை. நான் ரொம்பக் கஷ்டப்பட்டவன். எனக்கு எதையும் தாங்கும் சக்தி உண்டு. உனக்கும் எப்படிப்பட்ட கஷ்டத்தையும் தாங்கும் சக்தியை அளிக்குமாறு நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். கஷ்டம் வரும் போது நம்மை யறியாமல் வந்து விடும். அதை நம்மால் ஒரு நாளும் தடுக்க முடியாது. என்ன அபசகுனம் தோன்றி

நமக்கு எச்சரித்தாலும் வருகிற கஷ்டம் வந்துதான் தீரும். அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. ஆனால் அதைத் தைரியமாகத் தாங்கி நிற்கும்படியான பலம் பொருந்திய இதயத்தைக் கொடுக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்போம். அப்படிப் பிரார்த்திப்பதனாலேயே மனதிற்குத் தென்பு ஏற்படும்'' என்றார்.

எனக்குக் கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்தது. அதே சமயத்தில் இலேசாகத் தூற்றல் போட ஆரம்பித்தது. எனக்கு அந்த இடத்தை விட்டு நகரவே இஷ்டமில்லை. ரங்கதுரையும் நானும் அங்கேயே வாழ் நாள் முழுதும் நின்று கொண்டிருந்து விடமாட்டோமா?—என்ற பைத்தியக்கார எண்ணம் என் மனத்தில் தோன்றிக் கொண்டிருந்தது.

"இந்து! சென்னைக்கு இன்னும் ஒரு வாரத்தில் புறப்பட்டு விட வேண்டும் என்று தங்க பாண்டியன் கூறினான். எனக்கோ 'எதற்காகச் சென்னை போக வேண்டும்? இங்கேயே இருந்து விடலாமே' என்று தோன்றுகிறது! உன்னை விட்டுப்போக எனக்கு மனமே இல்லை, இந்து. நான் சீமைக்குப் போக இன்னும் நாலைந்து மாதங்களில் உத்தரவு வந்து விடும். நான் சென்னைக்கு இப்போது போய் விட்டாலும், சீமை போவதற்கு முன்னால் உன்னை வந்து பார்த்து விட்டுத் தான் போவேன். ஆனால் சீமைக்குப் போய் வந்த பிறகுதான் நாம் கல்யாணம் செய்துகொள்ள முடியும். ஏன், இந்து? எதற்காக அழுகிறாய்? என்னைப் பார்! நீ எனக்காக இன்னும் இரண்டரை வருஷங்கள் என்ன நேர்ந்தாலும் சமாளித்துக் கொண்டு காத்திருப்பாயா?'' என்று கேட்டார்.

எனக்குச் சிரிப்புக்கூட வந்தது. "நான் நீங்கள் என்னை மறக்காமலிருக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறேன். நீங்கள் என்னைக் காத்திருப்பாயா என்று கேட்கிறீர்களே? யுகம் யுகமாய் உங்களுக்காகக் காத்திருப்பேன்'' என்றேன்.

ரங்கதுரையின் முகம் பொலிவுடன் பிரகாசித்தது. மழை வலுக்க ஆரம்பிக்கவே நாங்கள் வேகமாக நடந்தோம். ஆயினும் வீடு சேர்வதற்குள் சொட்டச் சொட்ட நனைந்து விட்டோம். வீட்டின் அருகே வந்தபோது என் தந்தை குடையைக் கையில் எடுத்துக் கொண்டு எதிரே வந்து கொண்டிருந்தார். எனக்குப் பாவமாக இருந்தது. என்மீதுதான் அவருக்கு எத்தனை அன்பு! மழையில் நான் நனைந்து விடக் கூடாதே என்று உடனே புறப்பட்டிருக்கிறார்.

என்னைப் பார்த்ததும் கவலையெல்லாம் கோபமாக மாறி விட்டது. நான் நனைந்து போயிருந்தபடியால் ரொம்பக் கோபம். சாதாரணமாக அவர் கோபித்துக் கொள்ளவே மாட்டார். ஆனால் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத விஷயங்களை மாத்திரம் நான் செய்தால் அவருக்கு அசாத்திய கோபம் வந்து விடும்.

"உனக்கு மூளை இருக்கிறதா? காற்று புயல் மாதிரி அடிக்கிறது. இந்த மழையில் வெளியில் போகாவிட்டால் என்ன?'' என்று கேட்டார்.

ரங்கதுரை எனக்குப் பரிந்து கொண்டு பேசினார். "இந்து பேரில் தவறு இல்லை. நான்தான் அவளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்து நேரம் கடத்திவிட்டேன். நாளை நாங்கள் இருவரும் அதை உங்களுக்குப் பாடிக் காட்டுகிறோம், பாருங்கள்'' என்றார். என் தந்தை பதிலே பேசவில்லை.

அதற்குள் அய்யாக் குட்டி, "அப்பா துடித்துப் போய் விட்டார். வானம் கறுத்த உடனேயே குடையை எடுத்துக் கொண்டு உன்னைத் தேடப் புறப்பட்டார். நான்தான் 'இப்போது இரண்டு பேரும் வந்து விடுவார்கள்?' என்று சொல்லி நிறுத்தினேன். ஆனால் மழை பிடித்துக் கொண்டதும் அவர்களால் இங்கு இருக்க முடியவேயில்லை'' என்றார்.

"மழையில் சற்று நனைந்தால் என்ன தவறு? தண்ணீர்தானே? இதற்கெல்லாம் நமது உடலைப் பழக்கிக் கொண்டு விட வேண்டும். இதற்காக நீங்கள் பயப்பட வேண்டியதே இல்லை'' என்றார் ரங்கதுரை.

அய்யாக்குட்டி சிரித்துக் கொண்டே, "நீங்கள் இப்படிச் சொன்னால் உங்களுக்குப் பெண்ணைக் கொடுக்கவே மறுத்தாலும் மறுத்து விடுவார்கள். நீங்கள் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டால்தான் மாமாவுக்குத் திருப்தியாக இருக்கும்!'' என்றார். இவர் என்னத்துக்கு அநாவசியமாக அதிகப் பிரசங்கம் செய்கிறார் என்று நான் அப்பொழுது நினைத்துக் கொண்டேன்.

மாலை சமையலுக்கு ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தேன்.

ரங்கதுரை மாலை பேசியதையெல்லாம் மனத்தில் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தேன். 'எனக்காகக் காத்திருப்பாயா?' என்று அவர் என்

னிடம் கேட்டதை நினைத்தபோதே என் மெய் சிலிர்த்தது.

ஆனாலும் சிவப்புப் பங்களாவைப் பற்றிய எண்ணம் அடிக்கடி உள்ளத்தில் தோன்றி என்னை வேதனை செய்தது. அந்தத் திறந்திருந்த ஜன்னல் என் மனத்தை மிகவும் உறுத்திக் கொண்டே இருந்தது.

அந்த இனந் தெரியாத வேதனையின் மத்தியிலும்,

"ஓங்கி வரும் உவகை ஊற்றி லறிந்தேன்
ஒட்டு மிரண்டு ளத்தின் தட்டி லறிந்தேன்"

என்ற அடியை என் மனம் திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டே இருந்தது.

அன்றிரவு எனக்குச் சரியாகத் தூக்கமே வரவில்லை. தூக்கத்தின் நடுநடுவே சற்று விழிப்பு ஏற்பட்டால் கூட ரங்கதுரையின் புன்னகை தவழும் முகம் கண்ணெதிரில் தோன்றியது. 'ஓட்டுமிரண்டுளம்' என்று அவர் பாடுவது போல் எனக்குத் தோன்றியது.

மறுநாள் நானும் ரங்கதுரையும் சேர்ந்து பாரதியாரின் அந்தப் பாடலை மந்திரமூர்த்திக்கும் பாடிக் காட்டினோம். எனக்கு வெட்கமாக இருந்தது. ரங்கதுரை உற்சாகப் படுத்தினர்.

"நெரித்ததிரை கடலில் நின்முகம் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகம் கண்டேன்!"

"சிரித்த ஒலியில் நின்றன் கைவிலக்கியே
திருமித் தழுவியதில் நின்முகம் கண்டேன்!"

என்று அவர் என் தந்தையின் எதிரில் பாடியபோது ரொம்பக் கூச்சமாக இருந்தது. அய்யாக் குட்டிக்கும் இது அவ்வளவாகப் பிடிக்கவில்லையோ என்று தோன்றிற்று. கிணற்றில் கல்லைப் போட்ட மாதிரி பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

ஆனல் என் தந்தை உற்சாகமாக, "பேஷ்! பேஷ்! நீங்கள் இருவரும் பாரதியாரின் பாடல்களை ரேடியோவில் இப்படிப் பாடினுல் எல்லோரும் பிரமித்துப் போய் விடுவார்கள். இந்து! நீ என்ன இப்படி வெட்கப் படுகிருயே? சிமைக்குப் போகும் ரங்கதுரைக்கு ஏற்ற மாதிரி நீ இருக்கப் பழகிக் கொள்ள வேண்டாமா, அம்மா?" என்றெல்லாம் களிப்போடு கூறினர்.

இப்படி நாங்கள் பேசிக் கொண்டே இருக்கையில் தங்கபாண்டியன் அவசரமாகக் கூப்பிடுவதாக ரங்கதுரைக்குச் செய்தி வந்தது. ரங்கதுரையும் அவசரமாகப் புறப்பட்டுச் சென்ருர். எனக்கு "என்ன அவசரமாக இருக்கும்?" என்று ஒரே கவலையாக இருந்தது. (தொடரும்)



கொள்ளைக்காரனான புலி சித்தய்யாவைச் சித்ரதுர்க்க ஜில்லாவில் அறியாதவர்கள் யாருமே இல்லை. அந்தப் பிராந்தியத்தில் அவனது பெயரைக் கேட்டுச் சகலரும் நடுநடுங்கினர்.

ஒரு சமயம் அவன் ஹொஸ்துர்க்க மலைக் காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்த போது கொழுத்த புலி ஒன்று எதிர்ப்பட்டது. தன் எதிரில் வரும் அதன் துணிச்சலைக் கண்டு ஆத்திரம் கொண்ட சித்தய்யா அந்தப் புலியின் கழுத்தை நெரித்து அதை அந்த இடத்திலேயே கொன்று விட்டுத்தான் மறு காரியம் பார்த்தான். அதிலிருந்து தான் அவனுக்குப் புலி சித்தய்யா என்ற பெயர் வழங்கலாயிற்று.

அவனது பெயரை உரக்கச் சொல்லவும் ஜனங்கள் பயந்தார்கள். தங்களுடைய குழந்தைகளைப் பயமுறுத்தி, அவர்களின் அழுகையை நிறுத்தத் தாய்மார்கள் புலி சித்தய்யாவின் பெயரையே உபயோகிக்கலாயினர்.

புலி சித்தய்யா அந்தப் பிராந்தியத்தில் தன் இஷ்டப்படி அட்டகாசம் செய்து வந்தான். மக்களை ஹிம்சித்து, கிராமங்களையெல்லாம் சூறையாடினான். அவனால் பெண்கள் சகிக்க முடியாத துன்பத்துக் குள்ளாயினர். அவன் எத்தனை கொள்ளைகள் அடித்தான், எத்தனை கொலைகளெல்லாம் செய்தான் என்பது கணக்கிலே அடங்காமற் போயிற்று.

புலி சித்தய்யாவின் வழியில் குறுக்கே நின்ற எவரும் உயிருடன் திரும்பி வந்ததில்லை. அவனுக்கு எதிராக யாராவது ஒரு வார்த்தை சொன்னாலும், அத்தகையோர் மரணம் அடைவது நிச்சயம். எவ்வளவோ முயன்றும் போலீசாரால் அவனைப் பிடிக்கவே முடியவில்லை.

* * *

கடைசியில் புலி சித்தய்யா சர்க்கார் அதிகாரிகளின் தலையிலேயே கை வைக்க ஆரம்பித்து விட்டான்! அவனால் சர்க்கார் அதிகாரி ஒருவர் கொலையுண்டபோது, அதிகாரி வர்க்கமே அதிர்ச்சியடைந்தது. எனவே, மிகுந்த யோக்கியப் பொறுப்பும் திறமையும் வாய்ந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பீமராவை அதிகாரிகள் ஹொஸ் துர்க்கத்துக்கு அனுப்பி வைத்தனர். புலி சித்தய்யாவைப் பிடிப்பவருக்கோ, அல்லது அவரைப் பிடிக்க உளவு கூறுவோருக்கோ இருபதினாயிரம் ரூபாய் பரிசு கொடுப்பதாக அதிகாரிகள் பிரகடனம் செய்தனர்.

மங்கியது!

கே.ஏ.என்.ராவ்

பீமராவ் புலி சித்தய்யாவை இரண்டு வருஷ காலம் இடைவிடாது வேட்டையாடினார். அப்படியும் அவன் அவரிடம் அகப்படாமல் மாய வேலைகள் செய்து வந்தான். இருபதினாயிரம் ரூபாய்க்கு ஆசைப்பட்ட இரண்டு துர்ப்பாக்கிய சாலிகள், கோபாவேசம் கொண்ட சித்தய்யாவிடம் தங்கள் உயிரையே இழக்க நேர்ந்தது.

அதிலிருந்து' எவரும் சித்தய்யாவைப் பற்றிப் பேசவும் நடுங்கினர். அவனைப் பிடிக்கும் விஷயத்தில் எல்லையற்ற உற்சாகமும் நம்பிக்கையும் கொண்டிருந்த பீமராவ் கூட இறுதியில் 'சோர்ந்து போய் விட்டார்.

அவ்விஷயத்தில்; பொது ஜனங்கள் அவருடன் ஒத்துழைக்க விரும்பாததுடன், அவர் தமது முயற்சியில் வெற்றி பெறாததற்காக அவரைக் கேலி செய்யவும் முற்பட்டனர்.

கடைசியாக, அதிகாரிகள் பீமராவை வேறிடத்துக்கு மாற்றப் போவதாகவும் வதந்தி உலாவியது. அதைக் கேட்டுப் பீமராவ் உற்சாகம் குன்றி மனம் தளர்ந்தார். எனினும், பின்னர் தம்மைச் சமாளித்துக் கொண்டு மறுபடியும் கடைசியாக ஒரு தடவை முயற்சி செய்து விடத் தீர்மானித்தார். மேற்படி வதந்தி அவருக்கு ஒரு புதிய வேகத்தைக் கொடுத்தது.

தம்மை வேறு இடத்துக்கு மாற்று முன், எப்படியாவது சித்தய்யாவைப் பிடித்து விடுவதென்று உறுதி கொண்டார். தமது உயிருக்கு ஆபத்து வருவதாக இருப்பினும், அம்முயற்சியைக் கைவிட அவர் சிறிதும் விரும்பவில்லை.

ராம்கிரி நகருக்கு வெளியில் உள்ள கள்ளுக் கடை ஒன்றில் முந்திய நாள் இரவு சித்தய்யா வந்திருப்பதாக ஒருநாள் காலையில் பீமராவுக்குத் தகவல் கிடைத்தது. இரவு கள்ளுக்கடை சொந்தக்காரரின் மனைவி தனியாக இருந்தாள். திடீரென்று சித்தய்யா தன் எதிரில் வந்து நின்றதும் அவள் மிகவும் திகில் அடைந்து மூர்ச்சை யுற்றாள். சித்தய்யா கள்ளுக் கடையில் தன் இஷ்டப்படி குடித்துக் கொண்டிருந்தபோது சொந்தக்காரன் வந்தான். அவனைச் சித்தய்யா கட்டிப் போட்டு விட்டு, பெட்டியிலிருந்த பெருந் தொகையை எடுத்துக் கொண்டு மறைந்து விட்டான். தமக்கு அந்தக் கொள்ளையைப் பற்றிய தகவல் கிடைத்ததும் பீமராவ் ஏராளமான போலீஸ்காரர்களை நாற்புறமும் அனுப்பினார். தாமும் அன்றிரவு ஒரு போலீஸ் படையுடன் சென்று கள்ளுக் கடையைக் கண்காணித்து வந்தார். ஆனால், சித்தய்யா மாயமாய் மறைந்தது மறைந்ததுதான்!

இவ்விதம் பீமராவ் பல தடவை ஏமாந்ததுண்டு.

கடைசியாகப் பீமராவை வேறு ஊருக்கு மாற்றியிருப்பதாக மேல் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வந்தது. அதன்படி அந்த மாதக் கடைசியில் அவர் தமது உத்தியோகத்தை ஏற்றுக் கொள்வதற்காக வேறு இடத்துக்குப் புறப்பட வேண்டும் என்பது நிச்சயமாயிற்று.

ஜோளாடு கோவில் சந்தை ஆரம்பமாக இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. வேதவதி




ருசியான உணவை சமைக்க
ஏற்றது...
துஷார்
விட்டமின் சேர்ந்த
வனஸ்பதி
Tushar
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட். கர்நூல்.
துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்


பலஹீனத்திற்கும்
உற்சாகமின்மைக்கும்
SANATOGEN
ஸானடோஜன் ஜெர்மன் டானிக்
உணவை சாப்பிடுங்கள்

நதிக்கரையில் உள்ள காளாடு ஹோஸ் தூர்க்கத்திலிருந்து அதிக தூரமில்லை. அது மிகவும் பெரிய சந்தை. கொள்ளை, கலகம் எதுவும் ஏற்படாமல் தடுப்பதற்காகப் பீமராவ் போலீஸ் படையுடன் அங்கு முகாம் போட்டிருந்தார்.

பீமராவ் மன நிம்மதியின்றிச் சந்தையைச் சுற்றிச் சுற்றி வந்தார். முதல் நாள் அங்கு யாதொரு விசேஷ சம்பவமும் நிகழவில்லை. புலி சித்தய்யாவிடத்தில் தான் தோல்வியடைந்ததை எண்ணி எண்ணி அவர் மனம் புழுங்கித் தமது கூடாரத்தில் சோர்ந்து உட்கார்ந்திருந்தார்.

அச்சமயத்தில் கூடாரத்துக்கு எதிரே நின்று கொண்டிருந்த ஒரு பெண் உருவம் அவரது கண்களுக்குத் தென்பட்டது. அவ்வளவுதான்! அவர் நாற்காலியிலிருந்து துள்ளி எழுந்தார்.

அப்போது கூடாரத்துக்கு எதிரே இருந்த கடையில் சென்னி கடைக்காரருடன் ஏதோ பேரம் செய்து கொண்டிருந்தாள். அவள்தான் புலி சித்தய்யாவின் மனைவி.

சென்னிக்கு இருபது இருபத்தைந்து வயது இருக்கும். அவளை அழகி என்றுதான் சொல்ல வேண்டும். நல்ல தேகக் கட்டும் திடகாத்திரமும் உடல் வனப்பும் வாய்ந்தவள். அவள் வாரி முடிந்திருந்த கொண்டை அவளது அழகை மேலும் அதிகப்படுத்தியது. அவளது கண்கள் குறுகுறுவென்று சுழன்று கொண்டிருந்தன. மலிவான இமிடேஷன் நகைகள் அவள் தேகத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தன.

பீமராவ் சென்னியை இதற்கு முன்பு இரண்டொரு தடவை பார்த்தது உண்டு. ஆனால் அவளை அவர் ஏற இறங்க நன்றாகக் கவனித்துப் பார்த்தது இதுதான் முதல் தடவை. அவளுடைய அன்பைப் பெற்றுள்ள புலி சித்தய்யா அதிர்ஷ்டசாலிதான் என்று அவருக்குத் தோன்றியது. அதே சமயம், இத்தகைய மனைவியைப் பெற்ற அவன் கொள்ளைக்காரனாகவும் கொலைகாரனாகவும் இருப்பது விதியின் சதியென்று அவர் வருந்தினார்.

சித்தய்யா புலியின் கழுத்தை நெரித்து அதைக் கொன்றான் என்ற செய்தியைக் கேட்டதிலிருந்து சென்னி அவனை ஒரு மாபெரும் வீரனாகக் கருதி அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுத்து விட்டாள். சித்தய்யா இல்லாத வாழ்க்கையே பாழ் என்ற எண்ணம் அவளுக்கு ஏற்பட்டு விட்டது. அழகிலும், படிப்பிலும், குணத்திலும், பணத்திலும் மேலான பல இளைஞர்கள் அழகி சென்னியை விவாகம் செய்து கொள்ளப் போட்டி போட்டார்கள். ஆனால், சென்னி அவர்களில் யாரையும் விரும்பவில்லை. சித்தய்யா ஒருவனைத் தவிர வேறு எவனையும் தான் ஏறெடுத்தும் பார்க்க முடியாது என்று அடம் பிடித்தாள்.

இளைஞனை இருந்தபோதே சித்தய்யா தீய வழியில் இறங்கி விட்டான். எனவே, சென்னியின் பெற்றோர் அவளை வேறொரு இளைஞனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க நிச்சயித்தனர். ஆனால் சென்னியோ பெற்றோரின் வார்த்தையைக் கேட்கவில்லை. ஒருவருக்கும் தெரியாமல் சித்தய்யாவுடன் ஓடி விட்டாள். கடைசியில் வேறு வழியின்றி, அவளது பெற்றோர் அவளைச் சித்தய்யாவுக்கே கல்யாணம் செய்து கொடுத்தனர்.

சித்தய்யா பெரும் துஷ்டனாக இருந்தும் கூட சென்னியிடம் அவன் உயிரையே வைத்திருந்தான். "சென்னி என் ராணி அல்லவா!" என்று அவன் அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொள்வது உண்டு. அவளுக்குத் தேவையான துணிமணிகளும் நகை நட்டுகளும் சிறிதும் ஆட்சேபணையின்றி வாங்கிக் கொடுத்தான்.

சித்தய்யா அடிக்கடி சென்னியைச் சந்தித்து வந்தான். ஆனால் எந்த இடத்தில், எந்த நேரத்தில் சந்திக்கிறான் என்பதை அறிந்து கொள்ளப் போலீசார் எவ்வளவோ முயற்சி செய்தும் ஒரு பலனும் ஏற்படவில்லை.

• • •

கடைக்காரருடன் பேரம் செய்து கொண்டிருந்த சென்னியைப் பார்த்ததும் பீமராவின் மூளை தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது. அவர் தம்முடைய வேலைக்காரனைக் கூப்பிட்டார்.

"சித்தய்யாவின் மனைவி சென்னம்மாவிடம் நான் அவசரமாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன் என்று போய்ச் சொல்லு. கோவிலுக்குப் பின்புறமுள்ள புளிய மரத்தடியில் நான் உட்கார்ந்திருப்பதாக அவளிடம் கூறிவிட்டு வா!" என்று கட்டளை யிட்டார் பீமராவ்.

சென்னி மிகவும் தயங்கிக் கொண்டே வேண்டா வெறுப்புடன் புளிய மரத்தடிக்கு வந்தாள்.

பீமராவ் அந்த மரத்தடியில் இருந்த ஒரு வேரின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தார்.

"என்னம்மா! அப்படியே அந்த இடத்தில் உட்காரு. உன்னை நான் பல தடவை சந்தித்திருக்கிறேன். ஆனால், உன்னுடன் பேசியதில்லை. இப்போது என்னை இங்கிருந்து மாற்றி விட்டார்களாதலால், இப்போது உன்னுடன் பேசவேண்டும் என்று தோன்றியது" என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தார் பீமராவ்.

"என்ன பேச வேண்டும், எஜமான்!"

சென்னியின் இந்தக் கேள்வி பீமராவைச் சிந்தனையில் ஆழ்த்தியது. அதற்கு என்ன பதில் சொல்லுவதென்றே அவருக்குத் தோன்றவில்லை.

கடைசியாக, "சந்தைக்கு ஏதாவது சாமான் வாங்க வந்தாய் போலிருக்கிறது" என்று மெள்ளப் பேச்சைத் தொடங்கினார். பிறகு அவளது க்ஷேம லாபங்களைப் பற்றி விசாரித்தார். அதன்பின் மெதுவாகத் தம் மனத்தில் உள்ளதைச் சிறிதும் மறைக்காமல் சொல்லலானார்.

"இங்கே பார், சென்னம்மா! உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும். நான் கூறுவதை வித்தியாசமாக நினைக்காதே. நீ அவனுடைய மனைவி அல்லவா! உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லுவது! சென்ற பத்து, பன்னிரண்டு வருஷங்களாகச் சித்தய்யா ஜனங்களுக்கு எவ்வளவு கொடுமைகளும் துன்பமும் விளைவித்து வருகிறான் என்பது உனக்குத் தெரியும். அவ்விதம் செய்வது சரியா! தர்மமா!"

பீமராவின் இந்தக் கேள்வி சென்னம்மாவின் மனத்தில் எவ்விதக் கலக்கத்தையும் உண்டாக்கவில்லை. அவள் நிதானமாக, "அதைப் பற்றியெல்லாம் எனக்கு என்ன தெரியும், எஜமான்!" என்று கூறினாள்.

"உனக்குத் தெரியாதது என்ன இருக்கிறது! சித்தய்யா செய்யும் அட்டூழியங்களை ஒவ்வொரு குழந்தையும் அறியும். தாயே, உனக்கு ஒன்றுமே தெரியாது என்று மாத்திரம் சொல்லாதே. அடுத்த கிராமத்துக்குச் சித்தய்யா இரக்கமின்றித் தீ வைத்து அதை எரித்தது உனக்குத் தெரியாதா! அவன் செய்துள்ள அக்கிரமங்களை நீ எண்ணிப் பார்த்தால், உன் நெஞ்சிலிருந்து இரத்தம் பெருகும். அவன் எத்தனை பேரைக் கொள்ளையடித்தான்! எத்தனை குழந்தைகளைக் கொன்றான்! எத்தனை பெண்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாக்கினான்! இன்னும் அவன் செய்த பாதகச் செயல்கள் எண்ணில் அடங்குமா!"

இதை யெல்லாம் கேட்ட சென்னம்மா மௌனமாக இருந்தாள். 'இதெல்லாம் எனக்குத் தெரியாது' என்று அவள் மறுபடியும் பிமராவிடம் கூறத் துணியவில்லை.

"அவனை யாராவது தண்டித்துத் திருத்த வேண்டாமா? அவன் செய்யும் கொடுமைகளுக்கு ஒரு முடிவு ஏற்பட வேண்டாமா?" என்றார் பிமராவ் மேற்கொண்டு.

"அவனைப் பிடிக்கத்தான் நீங்கள் எவ்வளவோ முயற்சி செய்தீர்களே!" என்றாள் சென்னம்மா.

சென்னம்மாவின் இந்த வார்த்தைகள் பிமராவின் ஹிருதயத்தைத் தைத்தன. சித்தய்யாவைப் பிடிக்கும் விஷயமாகத் தாம் அடைந்த தோல்வியைச் சென்னம்மா குத்திக் காட்டிப் பரிகாசம் செய்வது போல் அவருக்குத் தோன்றியது.

"அவனைப் பிடிக்க எவ்வளவோ முயற்சி செய்தும் பலன் ஏற்படவில்லை. அவ் விஷயத்தில் நான் தோல்வி யடைந்தேன் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், பொது ஜனங்களின் ஒத்துழைப்பின்றிச் சர்க்கார் என்ன செய்ய முடியும்! 'பொது ஜனங்கள்' என்று நான் சொல்லும்போது உன்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். பொது மக்களில் நீயும் ஒருத்தி அல்லவா தாயே!" என்றார் பிமராவ்.

"நான் என்ன செய்வேன், எஜமான்! நான் ஒரு பெண்தானே. என் வார்த்தையை அவர் கேட்டு நடப்பாரா!"

"ஏன் கேட்க மாட்டான்? நீ அவனுடைய மனைவி அல்லவா!"

"எங்கேயாவது மனைவி சொல்லுகிறபடி கேட்கும் கணவன் உண்டா!" என்று திருப்பிக் கேட்டாள் சென்னம்மா.

சென்னம்மா மறுபடியும் தம்மைப் பரிகாசம் செய்வது போலவே பிமராவுக்குத் தோன்றியது. இருந்தாலும் தம்மைச் சமாளித்துக் கொண்டு அவர் மீண்டும் சொன்னார்.

"அப்படிச் சொல்லாதே, தாயே. நீ உயர்ந்த குணம் படைத்தவள் என்பதை உன் முகம் பளிங்கு போல் காட்டுகிறது. எது நல்லது, எது கெட்டது என்பதை நீ நன்றாக அறிவாய். சித்தய்யாவினால் மேற்கொண்டு மக்களுக்குத் துன்பம் ஏற்படாமல் தடுக்க வேண்டியது உன்னுடைய கடமையல்லவா!"

"ஒருவரை யொருவர் சுரண்டிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் மலிந்துள்ள இந்த உலகில் எது நல்லது, எது கெட்டது என்பதை யார் நிர்ணயம் செய்ய முடியும்! சமூகத்தில் சிறந்த கௌரவத்துடன் வாழும் செல்வந்தர்கள் ஏழைகளைச் சுரண்டி லாபம் அடித்தவர்கள் அல்லவா! அவர்களைச் சர்க்கார் சட்டம் என்ன செய்ய முடிகிறது! அவர்கள் பணத்தின் பலத்தைக் கொண்டு மென்மேலும் கொள்ளை லாபம் தட்டுகிறார்கள். என் கணவர் தன் தேக பலத்தை உபயோகித்து லாபம் அடைகிறார். இதில் தவறு என்ன இருக்கிறது!"

சென்னம்மாவின் பிரசங்கம் பிமராவைத் திக்கு முக்காடச் செய்தது.

"நீ சொல்லுவதில் உண்மை இருக்கிறது. இருந்தாலும் செல்வந்தர்கள் ஏழைகளைச் சுரண்டுகிறார்கள் என்பதற்காக எல்லோரும் ஒருவரை யொருவர் துன்புறுத்த ஆரம்பித்து விட்டால், இந்த உலகில் மக்கள் எவ்விதம் வாழ முடியும்! யாராயிருந்தாலும் சர்க்கார் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தானே தீர வேண்டும்."

"சரி, அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்!"

சென்னம்மாவின் குரலில் வெறுப்புத் தட்டியது. பேச்சை முடித்து விட்டு, அங்கிருந்து சென்று விட அவள் விரும்புவதாகத் தோன்றியது.

"நீ மனம் வைத்தால் எங்களுக்கு உதவி செய்யலாம். துஷ்டர்கள் மென்மேலும் அக்கிரமங்கள் செய்து கொண்டு போகாமல் தடுப்பதற்குத் தானே சிறைகள் இருக்கின்றன!"

'சிறை' என்ற வார்த்தையைக் கேட்டதும் சென்னம்மாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஓஹோ! இப்போது தெரிந்து கொண்டேன் உங்கள் நோக்கத்தை. என் கணவரைக் கைது செய்ய நான் உதவி புரிய வேண்டும் என்று சொல்லுகிறீர்களோ! நான் உதவி செய்ய முடியாது. என் கணவனைப் பிடிக்க நான் உதவி செய்ய வேண்டும் என்று கேட்க உங்களுக்கு எப்படி மனம் வந்ததோ தெரியவில்லை. எந்தப் பெண்ணாவது தன் கணவனைப் போலீசாரிடம் பிடித்துக் கொடுப்பாளா!"

சென்னம்மா இவ்விதம் சொல்லி விட்டு, பிமராவினிடம் சொல்லிக் கொள்ளாமலேயே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள்.

"உன் இஷ்டப்படி, செய். சென்னம்மா! நான் உன்னை வற்புறுத்தவில்லை. உன் கணவனால் எத்தனையோ பேர் உயிரையும் உடைமையையும் இழந்திருக்கிறார்கள். சகிக்க முடியாத துன்பத்தை அடைந்திருக்கிறார்கள்; நீ உதவி செய்யாவிடில், இன்னும் எத்தனையோ ஆடவர்களும் பெண்களும் குழந்தைகளும் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். அந்தப் பாவம் உன்னைத்தான் சேரும். எது நியாயம், எது கடமை என்று தோன்றுகிறதோ அதைச் செய். கடவுள் இருக்கிறார்" என்றார் பிமராவ், கடைசியாக.

* * *

சித்தய்யாவைப் பிடிப்பதற்கு யாதொரு உதவியும் செய்ய முடியாது என்று சென்னம்மா சொல்லி விட்டாள் என்றாலும், அவளது மனசாட்சி அவளைத் துன்புறுத்தத் தொடங்கியது.

அவள் கோவில் பக்கம் சென்ற போது, கோவில் வாசலின் இரு புறத்திலும் பிச்சைக்காரர்கள் உட்கார்ந்திருந்தனர். காஞ்சி என்ற பெண்ணும் தன் ஐந்து வயதுக் குழந்தையுடன் அங்கு உட்கார்ந்து பிச்சை யெடுத்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஆத்திரம் காரணமாக அவளது வீட்டை எரித்து, அவளது கணவனைக் கொன்றவன் சித்தய்யா தான் என்பது சென்னம்மாவுக்கு நன்றாகத் தெரியும்.

அந்தப் பிச்சைக்காரர்களின் கூட்டத்தில் எலும்பும் தோலுமாக கொண்டித் திம்மா உட்கார்ந்திருந்தான். ஒரு சமயம் போலீசாரிடம் தகவல் கொடுத்ததற்காகச் சித்தய்யா அவன் காலை அடித்து நொறுக்கி விட்டான். அதிலிருந்து திம்மா பிச்சைக்காரர் கூட்டத்தைச் சேர்ந்து விட்டான். சித்தய்யாவின் கோபாவேசத்துக்கு ஆளான மற்றும் சில துர்ப்பாக்கியசாலிகளும் சென்னம்மாவின் கண்ணில் தென்பட்டனர்.

சென்னம்மா அடிக்கடி அந்தப் பிச்சைக்காரர்களைப் பார்ப்பது உண்டு. ஆனால், அன்று அந்தப் பரிதாபமான காட்சி அவள் மனத்தை வாள் கொண்டு அறுத்தது. அவள் உடனே முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டு வேதனையுடன் கோவிலுக்குள் சென்று விட்டாள்.

அவள் உள்ளே சென்ற போது குருக்கள் ஸ்வாமிக்குத் தீபாராதனை செய்து கொண்டிருந்தார். அது பித்தளை விக்கிரகம். ஏற்கெனவே அங்கு வெள்ளி விக்கிரகம்தான் இருந்தது. ஒரு நாள்



சென்ற டிஸம்பர் 11-ல பம்பாய், மாதுங்கா தென் இந்திய கலை மன்றத்தின் முதல் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவுக்கு டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமை வகித்தார்கள். விழாவில் திரு ப. அருணாசலம் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி நடைபெற்றது. விழாவுக்கு வந்திருந்த ஐயாயிரம் தென் இந்தியர் களும் கச்சேரி முடியும் வரையில் இருந்து ரஸித்ததைக் குறிப்பிட வேண்டும். இந்த அருமை யான இசை விருந்தைப் பம்பாயில் உள்ள தென்னிந்தியர்களுக்கு அளித்த தென் இந்திய கலை மன்றத்தாரைப் பாராட்டுகிறோம்.

சென்னம்மா தனக்குப் பாதசரம் வேண்டும் என்று சித்தய்யாவிடம் சொன்னாள். அதற்கு மறுநாளே கோவிலில் இருந்த மேற்படி வெள்ளி விக்கிரகம் திருட்டுப் போய் விட்டது. அது திருட்டுப் போன இரண்டு நாட்களுக்குப் பிறகு சென்னம்மாவின் கால்களில் பாதசரங்கள் ஏறி விட்டன!

சென்னம்மா கோவிலில் இருந்த பித்தளை விக்கிர கத்தைப் பார்த்தாள். உடனே தன் பாதசரங் களையும் பார்த்துக் கொண்டாள். அவள் மனத் தில் இனம் தெரியாத வேதனை உண்டாயிற்று. அங்கே மேற்கொண்டு நிற்க அவள் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. உடனே அங்கிருந்து தலை குனிந்த வண்ணம் வீட்டுக்குத் திரும்பி விட்டாள்.

வீட்டுக்குச் செல்லும்போதும், சித்தய்யாவினால் வாழ்க்கை பாழானவர்கள் அவள் கண்களில் எதிர்ப்பட்டது, அவளது மன வேதனையை இன்னும் அதிகப்படுத்தியது.

அவள் நதிக்கரைக்கு அப்பால் வேகமாகச் சென்று கொண்டிருந்த போது, ஒரு மனிதன் நாற்புறமும் பார்த்துக் கொண்டே அவளை நெருங்கினான்; பக்கத்தில் வந்தான்.

"சென்னம்மா! உன்னைப் பார்க்கத்தான் வீட்டுக் குப் போய்க் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ இங்கேயே வந்து விட்டாய். சித்தய்யா நாளைக்கு வருகிறான். இன்னும் இரண்டொரு நாளில் அந்தப் பாவி இன்ஸ்பெக்டர் இங்கிருந்து தொலைந்து விடுவான். இனிமேல் நாம் நிம்மதி யாக இருக்கலாம்."

இவ்விதம் சித்தய்யாவின் நம்பிக்கையுள்ள சகாக்களில் ஒருவனான சிகார் கூறியது ஏதோ கனவில் நடப்பதுபோல் சென்னம்மா வுக்குத் தோன்றியது. இன்ஸ்பெக்டர் பீமராவ் கூறிய விஷயங்கள் அவள் மனத்தை அவ்வளவு தூரம் ஆட்கொண்டிருந்தன.

*   *   *

சென்னம்மா வீட்டுக்குச் செல்லும் வழியில் பீமராவின் கூடாரம் கண்ணில் தென்பட்டது. அதைப் பார்த்ததிலிருந்து அவள் மனத்தில் மறு படியும் பெரும் புயல் அடிக்கத் தொடங்கியது.

அவள் வீட்டுக்குச் சென்றாள். தன் பாத சரத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். தன் கை வளையல்கள், கழுத்துச் சங்கிலி முதலிய வற்றை எடுத்து அப்பால் எறிந்தாள். அவளுக் குத் திடீரென்று வாழ்க்கையே கசந்து விட்டது.

சென்னம்மா ஜன்னலுக்கு அருகில் நின்று கொண்டு வெகு நேரம் வெளியே எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். இருட்டிய பிறகு தான், தான் வெகுநேரம் அங்கு நின்று விட்டது அவளுக்குத் தெரிந்தது.

பிறகு உள்ளே வந்து விளக்கை ஏற்றி, அடுப்பை மூட்ட ஆரம்பித்தாள். ஆனால், அடுப்பை மூட்ட அவளால் முடியவில்லை. எனவே, இரண்டு வாய் பழைய சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்ட பின், படுக்கையில் படுத்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. இரவு வெகு நேரம் வரை யில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

அதே சமயம், இன்ஸ்பெக்டர் பீமராவ் தமது கூடாரத்தில் பிரயாணத்துக்காகச் சாமான்களை யெல்லாம் கட்டிக் கொண்டிருந்தார். சித்தய்யா வைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை அவர் மனத்திலிருந்து அடியோடு மறைந்தது.

*   *   *

மறுநாள் மாலை பீமராவ் ஊருக்குப் புறப்படும் தறுவாயில் ஒரு வேலைக்காரன் உள்ளே பரபரப் புடன் ஓடி வந்தான்.

"சென்னம்மா வந்திருக்கிறாள். நீங்கள் அவளை வரச் சொன்னீர்களாமே!" என்றான்.

பீமராவுக்குத் தலை சுழன்றது. எனினும், உடனே தம்மைச் சமாளித்துக் கொண்டார். துள்ளி எழுந்து வெளியே வந்தார்.

தம் எதிரில் நிற்பது சென்னம்மாதானா என் பதை உறுதி செய்து கொள்ள அவருக்குச் சிறிது நேரமாகியது. ஏனெனில் சென்னம்மா தம்மைத் தேடி வருவாள் என்று அவர் கனவிலும் நினைக்க

வில்லை. அவளது முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டார் பீமராவ். ஒரே இரவில் அவளது முகம் மன வேதனை காரணமாக அவ்வளவு தூரம் மாறியிருந்தது.

“தாயே, எதற்காக இங்கு வந்தாய்!” என்றார் பீமராவ் பரிவுடன்.

முதல் நாள் சென்னம்மாவுடன் பேசிக்கொண்டிருந்ததன் பலனாக, அவருக்கு அவள் மீது மதிப்பும் அனுதாபமும் ஏற்பட்டிருந்தன.

சென்னம்மா தரையை நோக்கிய வண்ணம் மௌனமாக இருந்தாள்.

“ஏன் உன் முகத்தில் இவ்வளவு சோகம்! ஏதாவது உதவி தேவையாக இருந்தால் சொல்லு” என்றார் பீமராவ்.

சென்னம்மாவின் கண்கள் கலங்கின. வார்த்தைகள் வெளி வரவில்லை.

“எனக்கு எவ்வித உதவியும் தேவை யில்லை” என்றாள். ஆனால் அவளுடைய வார்த்தைகள் சோகத்தில் தோய்ந்திருந்தன.

“அப்படியானால். இங்கு எதற்காக......!”

பீமராவ் சொல்லி முடிப்பதற்குள், சென்னம்மா, “நாளை... இரவு...அவர்...வருகிறார்” என்று நாத் தழுதழுக்கத் தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

“என்ன, என்ன! நாளைக்கா வருகிறான்!”

பீமராவுக்குத் தமது காதுகளையே நம்ப முடியவில்லை. சந்தோஷத்தினால் அவரது உள்ளம் துள்ளிக் குதித்தது. இவ்வளவு காலமாக அவர் செய்த பெரு முயற்சியும், பட்ட கஷ்டங்களும் கவலையும் இறுதியில் பலனைக் கொடுக்கப் போவதை எண்ணியபோது அவருக்குப் புல்லரித்தது. சித்தய்யா விஷயத்தில் தாம் படுதோல்வி அடைந்ததை எண்ணி எண்ணி அவர் மனம் புழுங்கிக் கொண்டிருந்தார். சென்னம்மா கூறிய நாலே வார்த்தைகள், அவர் மனத்தில் அடியோடு மறைந்திருந்த நம்பிக்கையை மறுபடியும் துளிர்க்கும்படி செய்தன.

சென்னம்மா தான் கூற வேண்டியதைச் சொன்னதும் அங்கு ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் திரும்பிச் செல்ல முற்பட்டாள்.

அவளைப் பின் தொடர்ந்து சென்ற பீமராவ், “தாயே! யாராலும் செய்ய முடியாத, நம்ப முடியாத கஷ்டமான ஒரு காரியத்தை நீ செய்திருக்கிறாய். உன்னைக் கடவுள் காப்பாற்றுவார்” என்று உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னார்.

சென்னம்மா திரும்பிப் பார்க்காமல் மௌனமாகச் சென்று கொண்டிருந்தாள். மறுபடியும் பீமராவ் அவளைத் தொடர்ந்தார்.

“உனக்கு நியாயம் என்று தோன்றினால், சித்தய்யா வீட்டில் இருப்பதை அறிவிப்பதற்காக ஜன்னலில் விளக்கை வைத்து, எரியும் திரியைக் கொஞ்சம் இறக்கிக் காட்டு. நாங்கள் வெளியே சிறிது தூரத்தில் காத்திருப்போம். உன் வீட்டுக் கதவு—சித்தய்யாவின் துப்பாக்கி—இதற்கு மேல் நான் சொல்ல வேண்டியதில்லை. இந்த உதவியைச் செய். உனக்கு வந்தனம். நீ எனக்கும் சமூகத்துக்கும் செய்யும் இந்தப் பேருதவியை நான் எக்காலத்திலும் மறக்க மாட்டேன்.”

சென்னம்மா அதற்கும் பதில் சொல்லாமல் சென்றாள். அவள் வெகு தூரம் செல்லும் வரையில் பீமராவ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். இது ஒரு வேளை தம்மைப் பிடிப்பதற்காகச் சித்தய்யா செய்த சூழ்ச்சியாக இருக்குமோ என்று எண்ணினார். எனினும் சோகம் நிறைந்த சென்னம்மாவின் முகத்தை அவர் நினைத்துப் பார்த்தபோது, தம்முடைய பீதிக்கு ஆதாரமில்லை என்று அவருக்குத் தோன்றியது.

சென்னம்மா அன்றிரவு தூங்கவே இல்லை. விவரிக்க முடியாத வேதனையால் அவள் மனம் துடித்தது. அவளது ஹிருதயம் எரிமலையைப் போல் நெருப்பாக இருந்தது.

* * *

மறுநாள் காலையில் சென்னம்மா கடைக்குச் சென்று பல சாமான்கள் வாங்கிக் கொண்டு வந்தாள். தன் வீட்டைச் சுத்தமாகப் பெருக்கி, மெழுகி, அழகாகக் கோலமிட்டாள். கறி காய்களுடன் மிகுந்த அக்கறையோடு சமைத்தாள். ஆனால் அவளுக்குச் சாப்பாடு இறங்கவில்லை.

உள்ளே இருந்த புதிய நீலநிறப் புடவையையும் ஜரிகை ரவிக்கையையும் உடுத்திக் கொண்டாள். தலையை வாரிப் பின்னி, கடையிலிருந்து வாங்கி வந்திருந்த புஷ்ப சரத்தைச் சுற்றி வைத்துக் கொண்டாள். குங்குமம் இட்டுக் கொண்டாள். வெகுநேரம் கண்ணாடிக்கு எதிரில் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

எனினும், சாதாரணமாக, சித்தய்யாவின் வரவை மிகவும் குதூகலத்துடன் எதிர்பார்க்கும் அவளது முகம் அன்று சோகத்தினால் வாடியிருந்தது.

இரவு வந்ததும் அவள் ‘ஹரிகேன்’ விளக்கை ஏற்றி வைத்தாள். படுக்கையை விரித்துப் போட்டு அதில் படுத்துக் கொண்டாள்.

சுமார் பத்து மணி இருக்கும். ஜன்னலின் வழியாக ஒரு சிறிய கூழாங்கல் வந்து அவள் மீது விழுந்தது. அவள் திடுக்கிட்டு எழுந்தாள். எப்போதும் சித்தய்யா அப்படித்தான் தன் வருகையைத் தெரிவிப்பது வழக்கம்!

சென்னம்மா எழுந்து சென்று கதவைத் திறந்தாள். அங்கு ஆஜானுபாகுவாக நின்று கொண்டிருந்தான் சித்தய்யா. அவன் தோளில் பெரிய துப்பாக்கி இருந்தது. சென்னம்மாவைக் கண்டதும் அவன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது.

அவன் உள்ளே நுழைந்ததும், சென்னம்மா கதவைச் சாத்தித் தாழ்ப்பாளிட்டு வந்தாள்.

“ஆஹா! என்ன வாசனை! என்ன இனிமை! வீடு முழுதும் வாசனையாக இருக்கிறதே! எவ்வளவு சுத்தமாகப் பெருக்கிக் கோலமிட்டிருக்கிறாய்!” என்று பரவசம் அடைந்தான் சித்தய்யா.

சென்னம்மாவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. அதே சமயம் அவள் முகத்தில் படர்ந்திருந்த வேதனையையும் கவனிக்க அவன் தவறவில்லை. தன் பிரிவினால்தான் அவள் மனம் வேதனைப் படுகிறதென்ற எண்ணத்துடன் அவளுக்குச் சமாதானம் கூற முற்பட்டான்.


“சென்னம்மா, வருந்தாதே. இனிமேல் அடிக்கடி உன்னைப் பார்க்க வருகிறேன். எனக்கு இடைவிடாத தொல்லையாக இருந்து வந்த அந்தப் பாழும் பீமராவ் நாளை இங்கிருந்து போய் விடுகிறான். பாவம்! அவன் என்னைப் பிடித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பதென்ற உறுதியுடன் வந்தான். இப்போது ஏமாந்து போய்த் திரும்புகிறான். ஹா! ஹா!...சரி, எனக்குப் பசியாக இருக்கிறது. சாதம் போடுகிறாயா!”

இவ்விதம் கூறிக்கொண்டே சித்தய்யா தன் துப்பாக்கியை ஒரு மூலையில் வைத்தான். கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு, சாப்பிட உட்கார்ந்தான். அவனது முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

“பேஷ்! இன்றைக்கு எனக்காக ஒரு விருந்தே வைத்து விட்டாயே. இன்றைக்கு என் பிறந்த நாளா, அல்லது உன் பிறந்த நாளா!...ஏன், வழக்கம் போல் நீ குதூகலமாக இல்லை! ஏன், வாய் திறவாத மௌனியைப் போல் இருக்கிறாய்! தெரி

நேருஜிக்கு நன்றி

இந்தியாவில் உள்ள இலங்கை மாணவர்கள் மூன்று மாத காலத்துக்குத்தான் இந்திய சர்க்காரிடமிருந்து 'வைஸா' (பிரயாண அனுமதி) பெற்றிருந்தார்கள். அவ்விஷய மாக, சமீபத்தில் இலங்கை மாணவர்கள் சங்கத் தலைவர் ஸ்ரீ எஸ். பாஸ்கரன் விண்ணப்பம் செய்து கொண்டதன் பலனாக, அதை ஒரு வருஷ காலத்துக்குப் புதுப்பித்துக் கொள்ள இந்திய சர்க்கார் இப்போது அனுமதித்திருக்கிறார்கள். அந்த ஒரு வருஷ காலத்துக்குள் இலங்கை மாணவர்கள் இரண்டு தடவை இந்தியாவுக்கு வெளியே சென்று வரலாம். நேருஜி சில தினங்களுக்கு முன் இந்தோனேஷ்யாவுக்குச் செல்லும் பாதையில் கல்கத்தாவில் இறங்கிய போது, அவரை இந்தியாவில் உள்ள இலங்கை மாணவர்கள் சார்பில் ஸ்ரீ பாஸ்கரன் சந்தித்து, 'வைஸா' கொடுக்கும் விஷயத்தில் இந்திய சர்க்கார் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டார். இந்திய சர்வ கலாசாலைகளில் சேருவதிலும் வருமான வரி விடுதலைப் பத்திரங்கள் பெறுவதிலும் இலங்கை மாணவர்களுக்கு உள்ள கஷ்டங்களை விவரித்து நேருஜியிடம் அவர் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். மேற்படி கஷ்டங்களைக் கவனித்துத் தகுந்த பரிகார முறைகளைக் கைக்கொள்வதாக நேருஜி ஸ்ரீ பாஸ்கரனுக்கு வாக்களித்த காட்சியைப் படத்தில் காணலாம்.



* * *

கிறது, தெரிகிறது. நான் அடிக்கடி உன்னை வந்து பார்க்கவில்லை என்ற கோபம்தானே? இப்போது தான் வந்து விட்டேனே. இன்னும் ஏன் கோபம்!'' என்றான் மிகுந்த அன்புடன்.

இவ்விதம் சித்தய்யா அவளுடன் ஆனந்தமாகப் பேசிக் கொண்டே சாப்பிட்டான்.

சாப்பாடு முடிந்து, சித்தய்யா கைகழுவப் பின் கட்டுக்குப் போனான்.

சென்னியோ உயிரற்ற யந்திரத்தைப் போல் காரியங்களைச் செய்து வந்தாள். அவன் கொல்லைப் புறம் போன சமயம் பார்த்து அவன் துப்பாக்கியிலிருந்த தோட்டாக்களை அப்புறப் படுத்தி விட்டாள். வாசற் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து வைத்தாள்.

சித்தய்யா படுக்கையில் வந்து உட்கார்ந்தான். சென்னம்மா அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். அவனது கண்கள் அவளது அழகைப் பருகிக் கொண்டிருந்தன. அப்போது தான் சொர்க்க இன்பத்தை அனுபவிப்பது போல் அவனுக்குத் தோன்றியது.

"இன்னும் ஏன் பேசாமல் இருக்கிறாய்! என் மேல் உள்ள கோபம் இன்னும் தணியவில்லையா! இந்தா, உனக்காக இருநூறு ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன். எங்கே கொஞ்சம் சிரி, பார்க்கலாம்'' என்றான் சித்தய்யா.

சென்னம்மாவின் முகத்தில் புன்முறுவல் பூத்தது. ஆனால் ஒரே விநாடியில் அது மறைந்து மறுபடியும் வேதனை படர்ந்தது.

சித்தய்யா கவலையின்றி ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். ஆனால், சென்னம்மாவுக்கு எப்படித் தூக்கம் வரும்! துயரம் தாங்க முடியாமல் அவளது தேகம் முழுதும் துவண்டது; ஹிருதயம் அடித்துக் கொண்டது.

அவள் எழுந்து உட்கார்ந்தாள். சித்தய்யாவைப் பார்த்தாள். அவன்மீது அவளுக்கு எல்லையற்ற அன்பு சுரந்தது. ஆனால் அடுத்த நிமிஷத்தில் அது அப்படியே வெறுப்பாக மாறியது. அவனால் சகிக்க முடியாத துன்பத்துக்கு ஆளானவர்களின் முகங்கள் அவள் கண்முன் தோன்றி மறைந்தன.

அவள் விளக்கை எடுத்து ஜன்னலில் வைத்தாள். அந்தச் சப்தத்தினால் விழித்துக் கொண்ட சித்தய்யா, "என்ன அது!'' "என்ன அது!'' என்று பரபரப்புடன் கேட்டான்.

அவ்வளவுதான்! சென்னியின் தேகம் முழுவதும் நடுங்கியது. எனினும் அடுத்த விநாடியில் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"விளக்கு பிரகாசமாக இருந்தது. கொஞ்சம் மங்கலாக வைத்தேன்'' என்று சோகக் குரலில் கூறிய சென்னம்மா அப்படியே சித்தய்யாவின் பக்கத்தில் துவண்டு விழுந்தாள்.

* * *

அன்று மாலையிலிருந்து பிமராவும் மற்றப் போலீசாரும் வைக்கோல் போருக்குக் கீழே மறைந்து கொண்டு, சிறிது தூரத்தில் உள்ள சென்னியின் வீட்டையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். குறிப்பாக, பிமராவ் அந்த ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தார். நாழி ஆக ஆக அவர் பொறுமையிழந்தார். ஒரு வேளை தம்மை வலையில் சிக்கவைப்பதற்கு அது ஒரு சூழ்ச்சியாக இருக்குமோ என்ற ஐயம் அவருக்கு மீண்டும் ஏற்பட்டது.

அவரது கைக் கடிகாரம் அப்போது பன்னிரண்டு மணி காட்டியது.

"இனி, இங்கே காத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. எல்லோரும் பாய்ந்து அந்த வீட்டைச் சூழ்ந்து கொண்டு தாக்குவோம். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே செல்லுவோம்."

இவ்விதம் பீமராவ் சொல்லிக் கொண்டிருந்த போதுதான் சென்னி ஜன்னலின் மீது விளக்கை வைத்து அதன் திரியைக் கீழே இறக்கினாள்.

சித்தய்யா நன்றாக விழித்துக் கொண்டான். சிறிது தூரத்தில் நாய்கள் இடைவிடாமல் குரைத்துக் கொண்டிருந்தன.

வீட்டுக்கு வெளியில் தடதட வென்ற சப்தத்தைக் கேட்டுச் சித்தய்யா திடுக்கிட்டு எழுந்தான். சென்னம்மா நடுக்கத்தினால் பாதி நினைவிழந்தாள்.

"அது என்ன சப்தம்! உனக்குக் கேட்கிறதா!" என்று சித்தய்யா பரபரப்புடன் கேட்டுக் கொண்டே, துப்பாக்கியைக் கையில் எடுத்தான்.

அதே சமயம் கதவைத் திறந்து கொண்டு பீமராவ் எதிரில் நிற்பதைக் கண்டதும், சித்தய்யா கோபாவேசத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு அவரை நோக்கிச் சுட்டான். ஆனால், துப்பாக்கியில் தோட்டாக்கள் இருந்தால்தானே!

ஒரு விநாடியில் அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. "பாவி! துரோகி!" என்று கூறிய வண்ணம் துப்பாக்கியின் அடிக் கட்டையால் சென்னியின் மண்டையில் அடித்து விட்டான். மண்டையிலிருந்து உதிரம் பெருகச் சென்னி கீழே விழுந்தாள்.

அச்சமயத்திலும் சித்தய்யா கலங்க வில்லை. துப்பாக்கியின் அடிக்கட்டையினாலேயே அவர்களை எதிர்த்துத் தாக்கத் தொடங்கினான். அவன் அடித்ததில் இரண்டு போலீஸ்காரருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டது. பீமராவும் காயமடைந்தார். அவனைச் சுட்டாலின்றி, அவன் தப்பி ஓடிவிடுவான் என்று தோன்றியது. எனவே, அவர் சித்தய்யாவின் காலைக் குறி வைத்து இரண்டுதடவை சுட்டார். அவன் நிற்க முடியாமல் கீழே விழுந்தான்.

பிறகு போலீசார் அவன்மீது விழுந்து, அவன் கைகளைக் கட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர்.

காயமடைந்த சென்னம்மாவைப் பீமராவ் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று, அவளுக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார்.

மறுநாள் காலையில் பீமராவ் படுக்கையை விட்டு எழுந்தபோது, அவரது வேலைக்காரன் பரபரப்புடன் ஓடிவந்தான். "சென்னம்மா ஏரியில் விழுந்து மாண்டு விட்டாளாம்" என்றான்.

பீமராவ் அவசரம் அவசரமாக ஏரிக்கரைக்குச் சென்றபோது, அங்கு ஜனக் கூட்டத்தின் மத்தியில் சென்னம்மாவின் உடல் கிடந்தது. டாக்டர் பரிசோதனை செய்து விட்டு, அவள் இறந்து சில மணி நேரம் ஆகியிருக்கவேண்டும் என்று கூறினார்.

பீமராவின் கண்களில் நீர் ததும்பியது. யாராலும் பிடிக்க முடியாத கொள்ளைக்காரன் சித்தய்யாவைப் பிடித்தவரும், மிகுந்த தைரியமும் நெஞ்சழுத்தமும் உள்ளவருமான பீமராவ் சென்னியைக் குறித்துக் கண்ணீர் விடுவதைக் கண்டு, அங்கிருந்த ஜனங்கள் ஒன்றும் புரியாமல் விழித்தனர்!

அகில உலகச் சிறுகதைப் போட்டிக்காக "நியூயார்க் ஹெரால்டு டிரிப்யூன்"க்கு அனுப்பப்பட்ட நாலு பரிசுக் கதைகளில் இது ரூ. 750 பரிசு பெற்ற மூன்றாவது கதையாகும்.



கோகிலா

ரமணலால் வஸந்தலால் தேசாய்

மொழிபெயர்ப்பு: ரா. வீ.

34. நீரும் நிலமும்

போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்காத தோஷமாக ஒருவர் பேசினால் யாருக்குமே அதிர்ச்சி ஏற்படுவது இயல்புதானே? நாத் பாபாவின் சுபாவத்தைச் சரிவரப் புரிந்து கொள்ள இயலாத ஜகதீஷ் போலீஸாரின் கையில், தான் சிக்கிக் கொண்டு விட்டதாகவே தீர்மானித்து விட்டான். போலீஸார் துறவியின் பேச்சை உண்மையென்று நம்பிப் பிடித்து விட்டால்.........? அவன் நினைத்தது போல் அவர்கள் செய்யவில்லை. நாத் பாபா வேண்டுமென்று தங்களைக் கேலி செய்வதாகவே எண்ணினார்கள்.

அதனால், "என்ன சாமி இது? எங்களையே கேலி செய்கிறீர்களே! எங்கள் கடமை இதையெல்லாம் கேட்க வேண்டியது. இன்ஸ்பெக்டர் ஐயா உத்தரவு போட்டார். அதற்காக இங்கே வந்தோம். இல்லாவிட்டால் எங்களுக்கு இங்கே என்ன வேலை?" என்றார் போலீஸ்காரர்களில் ஒருவர்.

"அப்படிச் சொல்லுங்கள்! உங்கள் இன்ஸ்பெக்டருக்கு என் மேலேயே சந்தேகமா?"

"சாமி! என்ன, இப்படிப் பேசுகிறீர்கள்!"

"பின்னே?"

"சாமி! நீங்கள் எட்டு நாட்களாக இங்கே இருந்திருக்கிறீர்கள். இவ்வளவு நாட்களும் உங்களோடு இவரை நாங்கள் பார்க்கவில்லை. அதனால்தான் இவரை யாரென்று கேட்டோம்! நீங்கள் எங்களைத் தப்பாக எடுத்துக் கொண்டு விட்டீர்களே!"

"ஆமாம், இப்படிக் கேட்டால் ஒருவன் தப்பாக எடுத்துக் கொள்ளாமல் வேறு எப்படி எடுத்துக் கொள்வானாம்!"

"சாமி, மன்னிக்கணும். எங்கள் மனசிலே எந்தவிதமான தீய எண்ணமும் கிடையாது. போலீஸ்காரர்களாகிய நாங்கள் ஓடியாடிக் களைத்துப் போய் வந்தால் உங்களிடம் உட்கார்ந்து ஒரு மணி அரை மணி பொழுதைப் போக்கிக் களைப்பைத் தீர்த்துக் கொள்ளுவதற்குச் சௌகரியமாயிருந்தது. நீங்கள் போய் விட்டால்...!"

இவ்விதம் சொல்லியவாறே இருவரும் படகிலிருந்து கீழே இறங்கி விட்டார்கள். படகோட்டிகள் படகை அவிழ்த்து ஓட்டத் தொடங்கினார்கள். அப்பொழுது நன்றாகப் பொழுது புலர்ந்து சூரியோதயமும் ஆகிவிட்டது. இரண்டு சூரியோதயத்துக்குள் தன் வாழ்க்கை எப்படியெப்படியெல்லாம் மாறி விட்டது என்று ஜகதீஷ் சிந்திக்கலானான். மூன்றாநாள் வரை அவன் தைரியமாகப் பொதுப் பாதைகளில் பிறருக்குப் பயந்து ஓடி ஒளியாமல் இஷ்டப்படித் திரியும் சுதந்திர புருஷனாக விளங்கினான். ஆனால் இன்றோ? ஓடி ஒளிவதற்கு இடம் தேடித் திரியும் குற்றவாளியாகி விட்டான். மூன்றாநாள் வரை சமூகத்திலும் சமூகத்தில் வாழும் மாந்தர்களிடையேயும் இடம் தேடும் நாகரிகம் தோய்ந்த வாலிபனாகத் திகழ்ந்தான். இன்று அந்தச் சமூகத்தையே வேருடன் களைந்து எறிந்துவிட வேண்டும் என்று எண்ணும் சமூக விரோதியாகக் காட்சியளித்தான். இதை விதியின் விபரீத விளையாட்டு என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

காற்று அநுகூலமாக இருந்தது. அதனால் படகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. ஒரு மணி ஒன்றரை மணி நேரத்துக்குள் படகு ஐந்தாறு மைலைக் கடந்து விட்டது. அவ்வளவு நேரமும் மௌனமாக உட்கார்ந்திருந்த நாத் பாபா ஜகதீஷைப் பார்த்து, "ஜகதீஷ்! உன்னைப் போல் நன்றி கெட்டவனை நான் பார்த்ததில்லை!" என்றார்.

"சாமி! நீங்கள் எனக்கு இடம் அளித்துக் காப்பாற்றினீர்கள். அதை நான் என் ஆயுள் உள்ளளவும் மறவேன். இது சத்தியம்!" என்றான் ஜகதீஷ்.

"ஏறக்குறைய இருபது வருஷங்களாக நான் கண்டு கொண்டிருந்த கனவை நீ நொடிப் பொழுதில் கலைத்து விட்டாயே!"

"நான் ஒன்றும் அப்படிச் செய்ததாகத் தெரியவில்லையே! தெரியாமல் ஏதாவது செய்திருந்தால் சொல்லுங்கள். என்னால் இயன்றவரை நான் திருத்திக் கொள்ள முயற்சிக்கிறேன்!" என்றான் ஜகதீஷ்.

"அதெல்லாம் உன்னால் ஒன்றும் நடக்காது. என் வருங்காலத்தையே நீ கட்டிப் போட்டு விட்டாயோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது; மனத்துள் பயமாகவும் இருக்கிறது!" என்றார் நாத் பாபா.

"நீங்கள் கூறுவது ஒன்றும் எனக்குச் சரியாக விளங்கவில்லை. உங்கள் சுபாவத்தை நான் சிறிதும் அறியேன். அப்படியிருக்கும் பொழுது உங்கள் வருங்கால வாழ்க்கையை நான் கட்டிப் போடவாவது?"

"நேற்றைய இரவு நிகழ்ச்சி உனக்கு நினைவிருக்கிறதா? நீ மட்டும் நேற்று என்னுடன் இல்லாமல் இருந்தால் நான் என்ன செய்திருப்பேன், தெரியுமா?"

"பெண்களைப் புண்படுத்தும் விஷயத்தை என் காதில் போடாதீர்கள். ஆண்களை அடித்துக் கொன்றே போடவேண்டும் என்றாலும் என்னிடம் சொல்லுங்கள். அதற்கு நான் தயார்!" என்றான் ஜகதீஷ்.

"நீ பேசுவதைப் பார்த்தால் நான் உன் மனைவியை ஒருதடவை பார்க்க வேண்டும் என்றல்லவா தோன்றுகிறது!"

"அவள் பரம சாது. தங்கமான குணம் படைத்தவள். பெண் என்றால் அவளைப் போல் இருக்க வேண்டும்!" என்றான் ஜகதீஷ்.

அவர்கள் கிட்டத்தட்டப் பத்துப் பன்னிரண்டு மைல்கள் தாண்டியிருப்பார்கள். சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக வான முகட்டில் ஏறத் தொடங்கி விட்டான். வெய்யில் சுள்ளென்று உறைக்க ஆரம்பித்திருந்தது. ஜகதீஷின் முகம் சூடு தாளாமல் குங்குமமாகச் சிவந்து விட்டது. தன் வேஷத்தை மாற்றிக் கொள்வதற்காக அவன் வேறு ஒன்றும் செய்யவில்லை. ஒரு வெள்ளைப் போர்வையை மட்டும் உடலில் போர்த்திக் கொண்டிருந்தான். அவன் தலையைக் காஷாயத் தலைப்பாகை அலங்கரித்துக் கொண்டிருந்தது. இவையே தன் தோற்றத்தில் பெரிய மாறுதலை உண்டு பண்ணிக் காட்டுவதாக ஜகதீஷுக்குத் தோன்றியது. எனவே தான் அவன் தன்னுடைய தோற்றத்தை இன்னும் அதிகமாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கருதவில்லை.

படகு ஆற்றின் எதிர்க் கரையில் போய் நின்றது. ஜகதீஷைப் படகிலிருந்து இறங்குமாறு சொல்லி நாத் பாபா இறங்கினார். அவரைத் தொடர்ந்தாற் போலவே ஜகதீஷும் இறங்கினான். அடுத்த நிமிஷமே நாத் பாபா ஓடக்காரனையும் மற்றவர்களையும் திரும்பிப் போகுமாறு கட்டளையிட்டார். அப்புறம் இருவரும் கரையேறி ஒற்றையடிப் பாதை வழியே நடந்தனர். கொஞ்ச தூரத்தில் வயல் வரப்பு ஒன்று இருந்தது. அதில் இறங்கிச் சிறிது தூரம் சென்றதும் வயல் வெளியில் சில குடிசைகள் காணப்பட்டன. நான்கைந்து குடியானவப் பெண்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். ஒரு பெரிய மரத்தின் மீது பரண் அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஏறி அமர்ந்து ஒரு குடியானவ வாலிபன் ஏதோ ஒரு தெம்மாங்கை உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தான். அமைதியாக இருந்த அந்தச் சூழ்நிலையில் அவன் பாட்டு எதிரொலித்துக் கொண்டிருந்தது.

துறவி வருவதைப் பார்த்ததும் ஒரு கிழவன் குடிசையொன்றிலிருந்து எழுந்து வெகு வேகமாக வெளியே வந்தான்.

"வாருங்கள், வாருங்கள்! சாமி, எங்கிருந்து வருகிறீர்கள்? சாமி வருகிற விஷயத்தை எனக்குத் தெரிவிக்கவே இல்லையே!" என்று நாத் பாபாவை எதிர்கொண்டு பக்தி சிரத்தையுடன் வரவேற்றான் அவன்.

"திடீரென்று புறப்பட்டு வரும்படியாகி விட்டது. அதனால் உனக்குச் சொல்லியனுப்ப முடியவில்லை. உடனே உன் குதிரைகளைத் தயார் செய். நான் புறப்படவேண்டும்!" என்றார் நாத் பாபா.

"என்ன சாமி, இது? வந்ததும் வராததுமாகப் புறப்படுகிறேன் என்கிறீர்களே! இது பயணத்துக்கு எடுத்த நேரமா? அப்படி என்னங்க அவசரம்? பொழுது ஏறிப் போய் விட்டது. போகலாம், உட்காருங்க!" என்றான் கிழவன்.

"இல்லை, பூபதாஜி! இப்பொழுது உட்கார எனக்கு நேரம் இல்லை. நான் உடனே புறப்பட்டாக வேண்டும். எங்களைத் துரத்திக் கொண்டு பின்னால் போலீஸ் வந்து கொண்டிருக்கிறது!" என்றார் நாத் பாபா.

பார்க்கப் பரம சாதுவாகத் தோற்றமளித்தான் முதிர்ந்த பிராயத்தினனான பூபதாஜி. அவன் முகத்தில் கபடமின்மையும் எளிமையும் இழையோடிக் கொண்டிருந்தன. போலீஸ் என்ற சொல்லைக் கேட்டதும் அவன் கண்கள் பளிச்சிட்டன.

"நம் கிராமத்தில் நமக்குத் தெரியாமல் யார் வர முடியும்? நீங்கள் இருங்கள். நம் பயல் அதோ பரண்மேல் உட்கார்ந்திருக்கிறான். ஒரு கண் இருக்கட்டும் என்று அவனிடம் சொல்லி வைக்கிறேன். சுற்று வட்டாரத்தில் ஐந்து மைல் தூரத்துக்கு யார் வந்தாலும் நன்றாகத் தெரியும். யோசனை பண்ணாதீர்கள்!" என்று பூபதாஜி அவர்களுக்குத் தைரியம் அளித்தான்.

சொல்லோடு சொல்லாக இரண்டு கயிற்றுக் கட்டில்களைக் கொண்டு வந்து போட்டு இருவரையும் உட்காரச் சொன்னான். சிறிது நேரத்துக்குள் ஒரு பெண்மணி இரண்டு லோட்டாக்களில் பால் கொண்டு வந்து வைத்தாள். அதை எடுத்து நாத் பாபாவின் கையிலும் ஜகதீஷின் கையிலும் கொடுத்துக் குடிக்குமாறு வேண்டினான் பூபதாஜி.

"ஜகதீஷ்! இந்த பூபதாஜியை நன்றாக நினைவு வைத்துக் கொள். இவரும் உன் வழியில் போகிறவர்தான்!" என்றார் நாத் பாபா.

"அது எப்படி?" என்று வியப்புடன் கேட்டான் ஜகதீஷ்.

"ஆண்களை ஒரே வீச்சில் அடித்துக் கொல்வதில் இவர் சிறிதும் தயங்குவதில்லை. இவர் கையும் கத்தியும் அதற்கு ரொம்பப் பழக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பெண்களின் பெயரைக் கேட்டாலே நடுங்குவார். வாலிபப் பருவத்தில் இவருக்குப் பெரிய கொள்ளைக்



காரர் என்று பெயர். இவர் பெயரைக் கேட்டால் எட்டுத் திக்கும் நடுங்கும். ஆனால் இப்பொழுதெல்லாம் அம்மாதிரி இல்லை. இனி அந்த நிலை ஏற்படாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது!" என்றார் நாத் பாபா.

"சாமி! எல்லாம் தங்கள் பிரதாபத்தினால் வந்தது. ஆனால் பெண்கள் மேல் கை வைப்பது என்றால் இன்னும் என் மனம் ஒப்ப மாட்டேன் என்கிறது!" என்றான் பூபதாஜி.

"காளைப் பருவத்தில் இவர் ஒரு டாகுரின் பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்து விட்டார். அப்புறம் வாலிபம் பருவம் முழுவதிலும் கொள்ளையடிப்பதையே தம் தொழிலாகக் கொண்டிருந்தார். பிள்ளைகள் பெரியவர்களாகி இவருக்கும் வயது அதிகரித்து விடவே, கொள்ளைத் தொழிலை விட்டு விட்டு விவசாயத்தை மேற் கொண்டிருக்கிறார்!" என்று துறவி பூபதாஜியின் பூர்வ வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாக விவரித்தார்.

பால் கொண்டு வந்து வைத்த பெண்மணி பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். நடுத்தர வயதை அடைந்த அவள் நல்ல சிவந்த மேனி படைத்திருந்தாள். அவள் முக மலரில் வண்டொத்த கரு விழிகள் மொய்த்துக் கொண்டிருந்தன. தலை நிமிர்ந்த ஜகதிஷ் எதிரே நின்று கொண்டிருந்தவளை ஒருமுறை நிலைத்த கண்களுடன் கண்டான். பூபதாஜி கடத்திக் கொண்டு வந்த பெண்மணி இவளாகத்தான் இருக்க வேண்டும் என்பதை உடனே ஊகித்துக் கொண்டான்.

துறவி கட்டிலில் படுத்துக் களைப்பாற முயன்றார். ஆனால் ஜகதிஷ் படுக்கவில்லை. அவனால் எப்படிப் படுத்து உறங்க முடியும்? அவனைத்தான் போலீஸ் பின் தொடர்ந்து கொண்டிருந்ததே! அந்தப் பயம் அவனுக்கு மட்டும் இல்லை, துறவிக்கும் கூடவல்லவா இருந்தது! தமக்கும் அந்தப் பயம் இருக்கிறது என்பதைத்தான் அவர் பூபதாஜியுடன் நடந்த சம்பாஷணையில் தெளிவாகக் காட்டிக் கொண்டாரே! அதனால் ஜகதிஷ் அங்கிருந்து எழுந்து சென்று வயல்களைச் சுற்றி வரலானான். அவனுடன் பூபதாஜியும் சென்றான். அவன் வயல் வெளியைச் சுற்றிக் காட்டி ஒவ்வொரு மரத்தின் விருத்தாந்தத்தையும் ஜகதிஷுக்கு வெகு விஸ்தாரமாகச் சொன்னான்.

"அதோ பசுக்கள் கட்டியிருக்கின்றனவே, அந்த ஆலமரம் இந்தப் பூமி பண்படுத்துவதற்கு முன்னாலிருந்தே—அதாவது இந்த இடம் தரிசாக இருந்த காலத்திலிருந்தே இருக்கிறது. பழைய காலத்து மரம்! கொள்ளைக்காரர்கள் எல்லோரும் இந்த மரத்தின் அடியில் உட்கார்ந்துதான் பொருள்களைப் பிரித்துக் கொள்வது வழக்கம். அதோ, மாந்தோப்புத் தெரிகிறதே! அங்கே மாங்கன்றுகள் வைத்துப் பதினைந்து வருஷங்களாகியிருக்கலாம். வருஷா வருஷம் விஸ்தரித்துக் கொண்டே போகிறேன். கன்றுகள் காய்க்கின்றன. இந்த வேப்ப மரங்களும்

சற்றுப் பழையவைதான். மற்ற மரங்கள் எல்லாம் சமீபத்தில் வைத்தவை. முன்னால் இங்கே ஏகப்பட்ட கருவேல மரங்களும் இலந்தை மரங்களுமாகக் கிடந்தன. பூமி குன்றும் குழியுமாக மேடும் பள்ளமுமாகக் கிடந்தது. போக்குவரத்துக்குக் கூடச் சரியான வழி கிடையாது. நான் வந்துதான் வெட்டிக் கொட்டிச் சரி செய்து நிரவிப் பூமியைப் பதனிட்டேன். இருபது வருஷங்களாக இந்தக் காரியத்தைக் கவனித்து வருகிறேன். அதனால்தான் இந்த இடம் இன்று இவ்வளவு தூரம் பார்க்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது!'' என்றான் பூபதாஜி.

உண்மையில் ஜகதீஷுக்கு அந்த இடம் மிகவும் பிடித்து விட்டது. விசாலமான வயல் வெளி, நெடிதுயர்ந்து விஸ்தாரமாகப் படர்ந்து நிழல் தரும் மரங்கள், கண்களுக்குக் குளிர்ச்சி தரும் பசும் புல் தரைகள்—இம்மாதிரியாக மனத்துக்கு மகிழ்ச்சியளிக்கும் பற்பல அற்புதக் காட்சிகள் அவன் மனத்தைக் கவர்ந்தன.

பிறகு பூபதாஜி அவனைக் கிணற்றடிக்கு அழைத்துச் சென்றான். கிணற்றில் இரண்டு கமலை யேற்றங்கள் வேலை செய்து கொண்டிருந்தன. கமலையில் பூட்டி யிருந்த எருதுகள் பார்ப்பதற்கு நன்றாகவும் பலம் பொருந்தியவையாகவும் கொழுத்து வளர்ந்திருந்தன. நேராக நிமிர்ந்து வளர்ந்திருந்த கொம்புகள் அவற்றின் அழகை அதிகமாக எடுத்துக் காட்டின. தூரத்திலிருந்து பார்ப்பதற்கு அவை கொழு கொழுவென்று வளர்ந்த சிற்றானைக் குட்டிகளாகத் தோற்றமளித்தன.

இரண்டு சால்களும் பாதாளத்தில் முழுகிப் பின்னால் மேலே வரும். கிணற்றின் மேல் நின்று கொண்டிருக்கும் ஆள் கயிற்றை இழுத்துச் சாலைச் சாய்ப்பான். கரையிலே வெட்டி விடப்பட்டிருக்கும் வாய்க்கால் வழியே தண்ணீர் சலசலத்து ஓடி வயலின் நாற்புறமும் ஓடிப் பாத்திகளில் பாயும்.

எருதுகள் மறுபடியும் கிணற்றடிக்கு வரும். கமலையில் உட்கார்ந்திருக்கும் ஆள் ஓட்டினால் பள்ளத்தில் இறங்கும். அவை இறங்கினதும் தண்ணீர்ச் சால் மேலே வரும். அந்த அழகான காட்சியைக் காண ஜகதீஷுக்கு வேடிக்கையாயிருந்தது. தண்ணீரின் சலசலப்புச் சப்தமும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் பூபதாஜியைப் பார்த்து ''எருதுகள் நன்றாயிருக்கின்றன!'' என்றான்.

''தம்பி! பயிர்த் தொழிலில் மனிதனும் கடுமையாக உழைக்க வேண்டும். மாடுகளும் கடுமையாக உழைக்க வேண்டும். இல்லாவிட்டால் காரியம் நடக்காது; பலனும் ஏற்படாது!'' என்றான் பூபதாஜி.

சூரியனது கிரணங்கள் பட்டுத் தகதகவென்று பிரகாசிக்கும் துல்லியமான நீரோடையில் கால்களைத் தோய்த்துக் கொண்டு நின்றான் ஜகதீஷ். தண்ணீரை எல்லோருமே தொட்டிருப்பார்கள். ஆனால் கிணற்றி

விருந்து புதிதாக இறைக்கப்பட்டு ஓடும் தண்ணீர் உள்ளத்துக்கு ஒரு புத்துணர்ச்சியை அளிக்கிறது என்பதை அநுபவித்தவர்கள் தான் உணர முடியும். தரையைத் தண்ணீர்க் காடாக்கிக் கொண்டு வாய்க்கால் வழியே பாயும் நீர் வயல்களுக்கு உயிரை யல்லவா ஊட்டுகிறது? அதனால்தான் நீருக்கு வடமொழியில் அமிர்தம் என்றும் ஜீவனம் என்றும் பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஓடும் நீரில் காலை வைத்த ஜகதீஷுக்கு வருணன் வழிபடும் தெய்வமாக ஏன் கருதப்படுகிறான் என்பது தென்னென விளங்கியது. தெய்வப் புலவர் திருவள்ளுவரும் வான் சிறப்பிலே நீரின் பெருமையைக் கூறுமிடத்து நீரை அமிர்தம் என்று தானே கூறுகிறார்?

இரண்டு பெண்மணிகள் நீர் ஓடும் வாய்க்கால்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பாத்தி நிரம்பி விட்டால் மண்வெட்டியால் மண்ணை யெடுத்து அதன் வாயை அடைத்து விடுவார்கள். ஓட்டத்தையே குறியாகக் கொண்டிருக்கும் நீர், அடுத்த கணமே அடுத்த பாத்தியை நோக்கி ஓடிவிடும். நீரின் ஓட்டத்தை அடக்கியாளும் அந்தப் பெண்களின் முகம் மலர்ச்சியுற்றுக் காணப்பட்டது. அவர்களைப் பார்த்த ஜகதீஷுக்குக் குடியானவப் பெண்களில் நல்ல அழகிகளும் இருக்கிறார்கள் என்பது அப்பொழுதுதான் தெரிந்தது. அவர்களது முகத் தெளிவையும் நிறைவையும் கண்ட ஜகதீஷ் இனிய கற்பனையில் ஆழ்ந்தான். 'இந்தப் பட்டிக்காட்டுப் பெண்களுக்குப் பகட்டான ஆடையை அணிவித்தால், தன் அழகில் செருக்குற்று ஒய்யார நடை நடக்கும் நகரத்துப் பெண்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்களாக இருக்க மாட்டார்கள்!' என்பதுதான் அவன் மனத்தில் ஓடிய அந்த இனிய கற்பனை.

ஜகதீஷுக்கு அதைத் தொடர்ந்தாற்போலவே, அவன் உத்தியோகம் பார்த்த நாட்கள் நினைவு வந்தன. அவன் எத்தனையோ நாட்கள் வயல்களை அளந்து கணக்கிடுவதற்காகவும், வயல்களின் தராதரத்தைப் பரிசீலனை செய்வதற்காகவும் போயிருக்கிறான். ஒரு ஏக்கர் நிலத்தில் எத்தனை மணங்கு கோதுமை விளைகிறது? ஒரு வருஷத்தில் எத்தனை கம்பு விதைக்கப்படுகிறது? ஐம்பது சால் தண்ணீர் இழுக்க வேண்டுமானால் எருதுகளுக்கு எத்தனை நேரம் பிடிக்கிறது? ஒரு ஏக்கருக்கு எத்தனை சால் நீர் பாய்ச்ச வேண்டும்? — இம்மாதிரி எத்தனை எத்தனையோ விஷயங்களைக் குடியானவர்களிடம் கேட்டு அவன் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறான். அந்தக் காலத்தில் இந்த அறிவைக் கொண்டே அவன் பெரிய அறிவாளியாகக் கருதப்பட்டான். இன்று அதை நினைத்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அதிகார கெடுபிடியில் அவன் ஒரு ஏக்கருக்கு எத்தனை கோதுமை விளைகிறது என்று சராட்டு மேனிக்கு ஒரேயடியாகத் தீர்மானித்து விட்டான். நிலத்தின் தரத்துக்குத் தகுந்தபடிதான் விளைச்சல் இருக்கும் என்பது அவனுக்கு அந்த நாளில் நினைவே வரவில்லை. ஒரு சால் தண்ணீர் எடுப்பதற்கு எத்தனை நேரம் பிடிக்கும் என்பது சரியான கேள்வியல்ல. அது அந்த வேலை செய்யும் ஆளின் சுறுசுறுப்பைப் பொறுத்தது. அவனவனைக் கேட்டால்தான் அதன் விவரம் விளங்கும் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது.

அதற்குப் பிறகு குடியானவனுக்கும் நிலத்துக்கும் உள்ள சம்பந்தம் என்ன? இதைக் குடியானவனாக ஆகாமல் ஒருவன் எப்படி அறிந்து கொள்வது? நிலத்தின் ஒவ்வொரு அணுவிலும் தன் உயிரை வைத்திருக்கும் குடியானவன்தான் நிலம், சாகுபடி ஆகியவற்றைச் சரியான வகையில் மதிப்பிட முடியும். நிலத்துக்காகக் குடியானவன் உயிரை விடுகிறான்; அதிலிருந்தே உயிரும் பெறுகிறான். நிலத்தின் பொருட்டுக் குடியானவன் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தண்ணீராய்ச் செலவழிக்கிறான். தன் நிலத்தை விற்கும் போது குடியானவனை யாராவது பார்த்திருக்கிறார்களா? பார்த்திருந்தால் தெரியும்! அவனைப் போல் பரிதாபத்துக்கு உகந்தவன், கருணைக்குப் பாத்திரமானவன் வேறு யாருமே இருக்க முடியாது. அந்தக் காட்சியைக் காண்போர் கண்களிலேயே நீர் கசியத் தொடங்கி விடும்.

குடியானவர்களையும் நில புலன்களையும் சீர்திருத்தி விடுவதாக மார் தட்டிக் கொள்ளும் அதிகாரிகளும் தலைவர்களும் ஏதோ தங்கள் தங்களுக்குத் தோன்றியதை உளறுகிறார்கள் என்றே ஜகதீஷுக்குத் தோன்றியது. குடியானவனின் உள்ளத்தை ஒருவன் சரியாகப் புரிந்துகொள்ளாதவரை குடியானவனைப் பற்றிப் பேசுவதற்கே அவனுக்கு உரிமை கிடையாது என்று அவன் தீர்மானித்தான். அதிகாரத்தில் இருந்த காலத்தில் அவன் நவீன முறையில் சாகுபடி செய்வதற்காகப் பல பிரயாசைகள் செய்திருந்தான். அதிகாரத்திலிருந்து விலகிய பின் குடியானவர்களின் அறியாமையைப் போக்குவதற்காக அவன் பல பிரசங்கங்கள் வேறு புரிந்திருந்தான். அரசாங்கமும் வட்டிக்கடை வியாபாரிகளும் எளிய குடியானவர்களை எப்படி எப்படி யெல்லாம் உறிஞ்சுகிறார்கள் என்பதை நிரூபிப்பதற்காக எத்தனை எத்தனையோ காரசாரமான கட்டுரைகள் எழுதியிருந்தான்.

அன்று வயல் வெளியில் சுற்றும் பொழுது தனது அந்த இரண்டு முயற்சிகளும் அறியாமை நிறைந்தவை, அசட்டுத் தனத்தை வெளியிடுபவை என்று அவனுக்குத் தெளிவாகியது. அதிகாரத்தில் இருந்த காலத்தில் துரையாக உடை உடுத்திக் கொண்டும் தேசத் தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்தில் துல்லிய கதர் ஆடை அணிந்து கொண்டும் அவன் குடியானவர்களுக்கே குடியானவர்களின் தாழ்ந்த நிலையைப் பற்றி அறிவுறுத்தியிருந்தான். ஆனால் கலப்பையின் கனம்

பஹோலா ஆர்னிகேடெட் ஹேர் ஆயில்

இது ஒரு வாசனைக் கூந்தல் தைலம் மாத்திரமல்ல —
ஆனால் இது ஒரு சக்தி வாய்ந்த ஹோமியோ ஔஷதமாகும்

- முடி உதிர்வதைத் தடுக்கிறது
- அகால நரை தடுக்கப்படுகிறது
- பொடுகு நீங்கி, வழுக்கை விழுந்த இடங்களிலும் புது முடி உண்டாகிறது
- ஏராளமான அழகிய கூந்தல் உற்பத்தியாகிறது


ஒரே மாத உபயோகத்தில் நீங்கள் "பஹோலா" பக்தர்களாகி விடுவீர்கள்

பாட்டில் விலை ரூ. 2-8-0 (அனுப்பும் செலவுகள் தனி)

(ஏஜெண்டுகள் தேவை)

பாரத் ஹோமியோ லாபரெட்டரி ஸ்தா. பெ. 1906 **சென்னை-1**

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து 22-1-1955 - நாகப்பட்டினத்திலிருந்து 23-1-1955

மாறுதலுக்கு உட்பட்டது

ஸலூன் இடவசதி முழுவதும் புக் ஆகிவிட்டது. ஆனால் கம்பெனியின் ஏஜண்டுகளிடமிருந்து உணவுடனோ அல்லது உணவின்றியோ பர்த் வசதி இல்லாததும் பங்க் வசதி உள்ளதுமான பிரயாண டிக்கெட்டுகள் கிடைக்கும்.

'பங்க்' வசதி டிக்கெட் கட்டண விவரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கீழ்க்கண்ட பிரயாண மற்றும் ஆரோக்கிய பத்திரங்கள் தேவையாகும்.

1. அனுமதி பர்மிட்டுடன் கூடிய செல்லக் கூடியதான பாஸ்போர்ட் அல்லது மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட ரீ-எண்ட்ரி பர்மிட் (பாரம் ID.64 அல்லது 65).
2. வருமான வரி செலுத்தியதற்கான அல்லது வரி விலக்கு சர்டிபிகேட்.
3. காலரா தடுப்பு ஊசியும் வைசூரி அம்மை வராமலிருக்க ஊசியும் போட்டுக் கொண்டதற்கு இந்திய அரசாங்கத்ினரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாரங்களில் சர்டிபிகேட்.

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றுமதிக்குச் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும். சிங்கப்பூரில் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்புவதற்கான சரக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்	**மதுரா கம்பெனி லிமிடெட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

என்ன இருக்கும் என்றுகூட அவனுக்கு அந்தக் காலத்தில் சரியாகத் தெரியாது.

சாருபடி நிலம் அவன் காதுகளில் ஏதோ மாபெரும் இனிய கீதத்தைப் பொழிந்து கொண்டிருந்தது. அதில் லயித்திருந்த அவன் நினைவு அலைகளைக் கலைத்து, "இவர்கள் இருவரும் என் பெண்கள். இவர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டேன். என் பெரிய பெண் தன் கணவன் இல்லாத காலத்தில் நகரத்துக்கு ஓடி விட்டாள். அவள் அங்கே யார் வீட்டிலேயோ இருக்கிறதாகக் கூடக் கேள்விப் பட்டேன். அந்தக் காலமாயிருந்தால், அதாவது நான் இளம் பிராயத்தினனாக இருந்தால் அவளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றே போட்டிருப்பேன். ஆனால் அதெல்லாம் இப்போது நடக்கக் கூடிய காரியமாக எனக்குத் தோன்றவில்லை!" என்றான் பூபதாஜி.

"என்ன?" என்று துணுக்குற்றுக் கேட்ட ஜகதீஷ், "அவள் பெயர் என்ன?" என்று விசாரித்தான்.

"ராதா!"

"ராதாவா? அவள் என் வீட்டில்தான் இருக்கிறாள். அவளைப் போல் தூய நடத்தையுள்ள பெண்ணை நான் பார்த்ததே யில்லை!"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இவ்விஷயம் நம் சாமிக்குத் தெரியுமா?" என்று கேட்டான் பூபதாஜி.

"தெரியாது. நேற்றுத்தான் சாமியோடு அறிமுகம் ஏற்பட்டது!" என்றான் ஜகதீஷ்.

"இவள் தாயும் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தாள். பெண்ணாகப் பிறந்து விட்டால் கன்னியாகவே இருக்க முடியாது. தாயைப் போலத்தான் பெண்ணும் இருக்கும்! தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் பெண்ணைப் பார்க்க வீட்டுக்குப் போக வேண்டியதில்லை என்கிறார்களே, அந்தப் பழமொழி ரூபாய்க்குப் பதினாறு அணா உண்மையானதுதான்!" என்றான் பூபதாஜி.

"ஆமாம், அவள் உங்கள் வீட்டிலிருந்தா நகரத்துக்கு ஓடினாள்?"

"இல்லை. அவளுக்கு இருக்கிற கர்வத்துக்கு ஒரு கங்கு கரை கிடையாது. அவள் புருஷன் நான்கு வருஷங்களாகச் சிறையில் இருக்கிறான். ஆனால் அவள் ஒரு தம்பிடி என்றால் ஒரு தம்பிடி என்னிடமிருந்து உதவி கோரினதில்லை. கொண்டு கொடுத்தாலும் வேண்டாம் என்று உதறி விட்டாள்!"

"என்ன இருந்தாலும் நீங்கள் அவளைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா? நகரத்துக்கு ஓடி வந்த அவள் நிலைமை என்ன வாயிற்று என்று உங்களுக்கு என்ன தெரியும்? சொன்னாலும் உங்களுக்குப் புரியாது. அத்தனை கஷ்டப்பட்டு விட்டாள்!"

"நான் என்ன செய்வேன்? எத்தனை கூப்பிட்டும் அவள் என் வீட்டுக்கு எங்கே வந்தாள்? அவளும் அவள் வீடும்தான் அவளுக்கு வேண்டியிருந்தது. 'இம்மாதிரியெல்லாம் நடக்காது. நம் வீட்டுக்கு வந்து விடு, அம்மா!' என்று நான் படித்துப் படித்துச் சொன்னேன். அவள் கேட்டால்தானே? தன் வீட்டை விட்டு விட்டு வர முடியாது என்று தீர்மானமாக மறுத்து விட்டாள். இளம் பெண். சின்னஞ்சிறு குழந்தை. தனியாக எப்படி இருப்பது? ஒரு தடவை எனக்குக் கடுமையான கோபம் வந்து விட்டது. 'நீ இந்தத் தடவை என் சொல்லைக் கேட்டு வராவிட்டால், அப்புறம் கூப்பிடவே மாட்டேன். இப்பொழுதே சொல்லி விட்டேன்!' என்றேன். அதற்கும் அவள் மசியவில்லை. அப்புறம் நான் கூப்பிடுவதையே நிறுத்தி விட்டேன். அவளும் வரவில்லை. கொஞ்ச நாட்கள் கழித்து நகரத்தை நோக்கி ஓடி விட்டாள் என்ற செய்தி கிடைத்தது.—ஏ, பொண்ணு! ஓடிப் போய் உன் அம்மாவிடம் ராதா அகப்பட்டு விட்டாள் என்று சொல்!" என்றான் பூபதாஜி.

இரண்டு பெண்களும் தங்கள் வேலையை அப்படியே போட்டு விட்டுத் தாய்க்கு நற்செய்தி தெரிவிப்பதற்காக ஓடினார்கள். பூபதாஜியும் குடிசையை நோக்கிப் புறப்பட்டான். வழியில்தான் பரண் இருந்தது. அதில் ஏறிப் பூபதாஜியின் பின்னே உட்கார்ந்திருந்தான். "யாராவது வருகிறது தெரிகிறதா, பார், அப்பா!" என்றான் பூபதாஜி.

"இல்லை, அப்பா!" என்றான் மகன்.

வயல் வெளியில் உள்ள ஒவ்வொரு பொருளும் அன்று ஜகதீஷின் மனத்தை ஏனோ தெரியவில்லை, கவர்ந்து கொண்டிருந்தன.

"ஆமாம், நாங்கள் வந்தபொழுது இந்தப் பையன்தான் பாடிக் கொண்டிருந்தானோ?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"ஆமாம், ஆமாம்! இவன்தான் பாடிக் கொண்டிருந்திருப்பான். இவனுக்குப் பாட்டு என்றால் ரொம்பப் பிடிக்கும். டோலக் வாசிக்கக் கூடக் கற்றுக் கொண்டிருக்கிறான். ஒரு தடவை யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் நகரத்துக்கு ஓடிப் போய் நாடகமும் பார்த்து வந்திருக்கிறான்!" என்றான் பூபதாஜி. பிறகு, 'தம்பி! இந்தப் பரண்மேல் அடிக்கிற காற்றே தனி. மேலே ஏறி உட்கார்ந்து விட்டால் நம்மை யறியாமல் குஷி பிறந்து விடும். பாடத் தெரியாதவனையும் பாடச் சொல்லும். கீழே இறங்கி விட்டால் குஷியும் இறங்கி விடும். இதை என் அநுபவத்தில் சொல்கிறேன்!" என்றான் பூபதாஜி.

"அப்பா! அவரை உயர அழைத்துக் கொண்டு வாயேன்!" என்றான் மகன். குடியானவர்கள் கட்டி வாழும் பரணின் பெருமையை ஜகதீஷுக்கும் காட்டுவோமே என்ற ஆசை அவனுக்கு.

"ஏணி இருக்கிறதா?" என்று தன் மகனைக் கேட்டான் பூபதாஜி.

"இல்லையே! ஆனால் கயிறு இருக்கிறது. தொங்க விடட்டுமா?" என்று தகப்பனைப் பார்த்துக் கேட்டான் மகன்.

"ஆமாம், கயிற்றைக் கொண்டு உங்களால் ஏற முடியுமா?" என்று ஜகதீஷைப் பார்த்துப் பூபதாஜி கேட்டான்.

"ஓ! தாராளமாக முடியும்!" என்று சொன்ன ஜகதீஷ் கிராமத்தார்களைப் போலவே பரணில் ஏற விரும்பினான். மரம், கயிறு இவ்விரண்டின் உதவியையும் கொண்டு அவன் பூபதாஜிக்குப் பின்னாலேயே பரணில் ஏறினான். பரணை அடைந்ததும் அவன் ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்கு அந்தச் சூழ்நிலை முழுவதுமே சங்கீதம் தோய்ந்ததாகத் தோன்றியது. கீழே தரையில் விரிந்திருந்த பசுமையைக் கண்ணுற்ற அவனுக்கு, மக்கள் போஷணைக்கென்றே ஒரு வற்றாக் களஞ்சியம் தோன்றியிருப்பதாகத் தோன்றியது. 'கர கர' வென்று சப்திக்கும் கமலையிலிருந்து வாய்க்கால் வழியே வழிந்தோடும் நீர் வளைந்து வளைந்து வெகு தூரம் பளிச்சென்று பிரகாசித்தவாறு ஓடிக் கொண்டிருந்தது. சூரியனின் கடும் வெய்யிலைக் குளுமையாக்கித் தன் எல்லையற்ற போஷணைச் சத்தினால் உலகத்தையே காத்து ரக்ஷிக்கும் பூமித் தாய் அன்புடன் கை நீட்டித் தன்னை அருகில் அழைப்பது போல ஜகதீஷுக்குத் தோன்றியது. எதற்கும் கவலைப் படாதே என்று அபயம் தந்து அடைக்கலம் அளிக்கிறேன் என்று தன்னைப் புவி அன்னை அழைப்பதாகத் தோன்றவே அவன் ஒரு கணம் மெய் மறந்தான். அடுத்த கணம் நாணமே உருவான கோகிலா அவன் மனக் கண் முன்னே தோன்றினாள். வெட்கத்தினால் தலை குனிந்த வண்ணம் தன் எழில் மிகு விரல்களை அசைத்து அவள் அவனைத் தன்னருகே அழைத்தாள். அவ்விரு காட்சிகளும் மாறி மாறித் தனித் தனியே படம் பிடித்தாற்போல் நின்றன.



ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டு விழா சென்ற மாதம் தமிழ் நாடெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தமிழகத்திலே இருபத்தைந்து பத்திரிகைகளுக்கு மேல் சாரதாமணி தேவியாரின் நினைவு மலர்கள் வெளியிட்டன. சென்னை ராமகிருஷ்ண மடத்தார் அந்தப் பத்திரிகைகளை மேற்கண்ட விதத்தில் அன்னை சாரதாமணி தேவிக்கு அழகுறச் சமர்ப்பணம் செய்தனர். அன்னை சாரதாமணி தேவியாரின் படத்துக்கு அருகிலேயே சமர்ப்பணமாக டிஸம்பர் ஐந்தாம் தேதி கல்கி சாரதாமணி இதழ் இருப்பதைப் படத்தில் காணலாம்.

இரண்டும் இரண்டு விதத்தில் உயர்ந்தவையாகவே தோன்றின. பெருக்கெடுத்தோடும் வாத்ஸல்ய ரஸத்தைப்பருகச் செய்வதற்காகச் சிறிதும் சங்கோசமின்றிக் கை நீட்டி அழைக்கும் அன்னபூரணியின் உருவம் ஒரு புறம். நாணிக் கோணிக் கொண்டு நல்ல பாதையில் போ என்று வழி காட்டும் அருமை மனைவி கோகிலாவின் உருவம் இன்னொரு புறம். மாறி மாறிக் காட்சியளித்த இரு உருவங்களும் சிறிது நேரத்துக்கெல்லாம் சேர்ந்தாற்போல் நிலைத்து நின்றன. இரு உருவங்களையும் ஏககாலத்தில் கண்ட ஜகதீஷுக்கு உரோமம் சிலிர்த்தது. உலகத்தைக் காக்கும் பொறுப்புப் பெண்களுடையது தான் என்ற முடிவுக்கு வந்தான் அவன். பெண் மனைவியின் உருவத்தில் வந்து ரக்ஷித்தால் என்ன? தாயின் உருவத்தில் தோன்றி ரக்ஷித்தால் என்ன? பெண் பெண்தானே? எனவே, பெண்ணின் பெருமை சொல்லத் தரமன்று என்று நிர்மானித்தான்.

அதே சமயம் பூபதாஜி அவன் சிந்தனையைக் கலைத்து, "தம்பி! விளை நிலம்தான் நம் உண்மைத் தாய். யாரையாவது இந்தப் பூமி பட்டினி போட்டு இன்றுவரை கொன்றிருக்கிறதா? அதனால்தான் பெரியவர்கள் மாநிலத் தாயை வணங்கு என்கிறார்கள். என்ன, நான் சொல்வது?" என்றான்.

இதைக் கேட்டதும் தன் உள்ளத்தில் உருக் கொண்டிருந்த முடிச்சு அவிழ்ந்து விட்டதாகத் தோன்றியது ஜகதீஷுக்கு. ஒரு தெளிவற்ற ஒளி அவனுடைய உள்ளத்தில் பதிந்தது. அடுத்த கணம் தாய்நாடு அவன் நினைவுத் திரையிலே நிலைபெற்று நின்றது. இன்று வரை, அவன் தன் தாய்நாட்டுக்குச் செய்த தொண்டுகள் அனைத்தும் தவறான பாதையில் செய்யப்பட்டவையாக அவனுக்

குத் தோன்றின. அவன் செய்தது தொண்டு அல்ல, தொண்டு என்னும் பிரமைதான். இதுவரை அவன் தன் தாய்நாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ளவே இல்லை.

தாய்நாடு கற்பனைச் சித்திரத்தில் அடங்கி விடவில்லை. கவியின் கயம் நிறைந்த கவிதையில் தோய்ந்து விடவில்லை. பிரசங்கிகளின் பிரமிப்பில் ஆழ்த்தும் பிரசங்கங்களில் ஐக்கியமாகி விடவில்லை என்பதை அவன் அப்பொழுது நன்கு உணர்ந்தான்.

இன்றுதான் அவன் அகக் கண்களுக்கும் புறக் கண்களுக்கும் எதிரே தாய் நாட்டின் உண்மைச் சொரூபம் தெரிந்தது. தாய் நாடு அவன் கண்களுக்கெதிரே அன்னை பூதேவியாகக் காட்சி அளித்தது. இன்று வரை உண்மை யுருவத்தில் காணாத மாநிலத்தாயை உண்மையுருவத்தில் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் மனம் பூரித்து மரியாதையோடு வணங்கி வழிபட்டான். தாய் நாட்டுக்குத் தான் செய்ய வேண்டிய தொண்டு இன்னும் எத்தனை யெத்தனையோ பாக்கி யிருக்கிறது என்பதை அவன் நன்கு உணர்ந்தான். இப்படிச் சொல்வது கூடத் தவறு. தான் செய்ய வேண்டிய தாய் நாட்டின் தொண்டு இனிமேல் தான் ஆரம்பமாக விருக்கிறது என்றே முடிவு கட்டினான்.

"அப்பா! ஆற்றில் ஒரு படகு வருவதாகத் தோன்றுகிறது!" என்றான் பூபதாஜியின் மகன். தாய்நாட்டின் தெய்வச் சிலை தன் கண்களெதிரே உருவெடுத்து வருவதை ஒருமைப் பட்ட உள்ளத்துடன் காண முயற்சித்துக் கொண்டிருந்தான் ஜகதீஷ். பூபதாஜியின் மகன் சொன்ன சொற்கள் காதில் விழுந்ததும் அவனுடைய ஒருமைப் பட்ட உள்ளம் கலைந்து விட்டது. ஆனால் அச்சம் எல்லாம் தன்னை விட்டு ஓடி விட்டது போலவே அவனுக்குத் தோன்றியது. போலீஸ் பயம் அவனுக்கு லவலேசங் கூட உண்டாகவில்லை. பூபதாஜியைப் போன்ற கொள்ளைக்காரனே புவியன்னையைச் சரண் அடைந்து சுகமாக வாழ்கிறான் என்றால், 'நாம் வாழ முடியாதா? நிலத் தாய் நம்மைக் கை விட்டு விடுவாளா?' என்றே எண்ணினான்.

அவன் அப்படி எண்ணினால் ஆயிற்றா? உலகம் ஒப்புக் கொள்ள வேண்டாமா? பூபதாஜியின் வாழ்க்கை வேறு சான்றாக நின்றது. அதே சமயத்தில், "புறப்படுங்கள், சீக்கிரம்!" என்றான் பூபதாஜி. (தொடரும்)


ஆற்றங் கரையினிலே!

"ஆற்றங் கரையதனில் முன்னம்
ஒருநாள்—எனை
அழைத்துத் தனியிடத்தில்
பேசியதெல்லாம்"

என்று பாடினார் கவியரசர் பாரதியார்.

ஆற்றங் கரையினில் அமர்ந்து தனியுரை மட்டுந்தானா நிகழ்த்தலாம்! நெஞ்சை அள்ளும் இலக்கியங்களின் இன்சுவையைப் பருகிக் கொண்டும் இருக்கலாம் அல்லவா!


ஆற்றங் கரையினில், வெண் மணற் பரப்பில் அமர்ந்து இலக்கிய விருந்து வழங்குவது போன்ற இனிய எளிய நடையில் பழந் தமிழ்க் காப்பியங்களிலிருந்து அழகு மிகுந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து விளக்கம் செய்யும் அருமையான கட்டுரைத் தொடர் 'கல்கி' 16—1—55 பொங்கல் இதழில் ஆரம்பமாகிறது.



பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளையவர்களைப் புதிதாக நேயர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டுவதில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைக்குத் தலைவராக வீற்றிருந்து, இலக்கியப் பணி செய்து வரும் இந்த அறிஞர் திலகம் 'ஊரும் பேரும்' என்ற அற்புதமான ஆராய்ச்சி நூலின் மூலம், தமிழ் இலக்கிய உலகில் நிரந்தரமான ஸ்தானம் வகித்து வருகிறார். அவருடைய மேடைப் பேச்சுக்களிலே மானும் கிளியும் குயிலும் கொஞ்சும்; மந்தமாருதம் வீசும். தமிழின் இனிய சொற்கள் 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு வந்து செவிக்கு விருந்தளிக்கும்! கேட்கக் கேட்கத் தெவிட்டாத சுவையும், மொழி வழகும் நிரம்பிய இந்தப் பேச்சுக்களைக் கேட்டு அநுபவித்துள்ள ஆயிரக்கணக்கான ரஸிகர்கள், இனி வாரந்தோறும் இந்த இலக்கிய மணியின் இனிய கட்டுரைகளைத் தொடர்ந்து 'கல்கி' இதழ்களில் படித்து மகிழலாம் என்பதை ஆனந்தத்தோடு நமது நேயர்களுக்கு அறிவிக்கிறோம்.

பொங்கலும் செங் கரும்பும் உள்ளத்தைத் தித்திக்கச் செய்யும் தமிழரின் பண்டிகையை யொட்டி வெளியாகிற 'கல்கி'யின் பொங்கல் இதழில், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் முதலாவது கட்டுரை வெளியாகிறது. சிலப்பதிகாரம் கூறும் காவேரியின் கரையிலே நேயர்களை அமர்த்தி உரையாடுகிறார். இதைத் தொடர்ந்து தமிழ் இலக்கியம் என்ற இலக்கிய நதியின் பல் வேறு துறைகளுக்கும் நம்மை அழைத்துச் செல்வார்.

"ஆற்றங் கரையினிலே" ஜனவரி பதினாறாம் தேதி இதழில் ஆரம்பமாகிறது.


·SANFORIZED·
REGD TD MK
SHRUNK
‘சான்பொரைஸ்ட்’ துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப் பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
—எத்தனை முறை
சலவை செய்தாலும் கூட
முக்கிய கவனிப்பு—
உங்கள்
தையல்காரரிடம்
சொல்லுங்கள்:
“இது
‘சான்பொரைஸ்ட்’
துணி—உடை
தைப்பதற்குமுன்
நனைக்க
வேண்டாம்”

நான் இப்பொழுது மிகுந்த தெம்புடன் இருக்கிறேன்—
ஊளைச் சதை
கரைந்த பின்னர்



"ஊளைச் சதை கரைவதற்காக நான் "க்ருஷன்" ஸால்ட் உட்கொண்டேன். இரண்டே வாரங்களில் 5 ராத்தல் கனம் குறைந்தது பற்றிப் பெரிதும் மகிழ்வுற்றேன். ஐந்து வாரங்களில் 10 ராத்தல் கனம் குறைந்து விட்டது. க்ருஷன் சிகிச்சைக்கு முன்னர் நான் எப்பொழுதும் அசதியும் மந்தமு முள்ளவளா யிருந்தேன். ஆனால் இப்பொழுதோ மிகுந்த தெம்புடன் சுறு சுறுப்பா யிருக்கிறேன். நான் "க்ருஷன்" கட்சியிலே இருப்பதுடன் எப்பொழுதும் க்ருஷனையே போற்றுக செய்வேன்."—K. G.

உட்புற இந்திரியங்கள் சரிவர வேலை செய்யத் தவறும்பொழுது ஜீரணிக்கப்படாத கழிவு பொருள்கள் குடலுக்குள் சேருவதால் சதைக் கோளங்கள் உண்டு பண்ணப் படுகின்றன. குடல்களும், மூத்திரக் கோசங்களும் சரிவர ஒழுங்காய் இயங்குவதற்கு நன்கு உதவுவதால் "க்ருஷன்" சதைகள் உண்டாவதை தீவிரமாக எதிர்க்கிறது. மெதுவாக, ஆனால் நிச்சயமாக அதிகப்படியான சதை மறைய ஆரம்பிக்கிறது. தினசரி ஒரு சிறு அளவு க்ருஷன் உட்கொள்ளுவது உங்களை மந்தமான, ஊளைச் சதை யுள்ளவரன்றி, வீர்ய மிகுந்த ஒற்றை நாடிச் சரீர முள்ளவராகச் செய்யும்.

"க்ருஷன்" உங்கள் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

புண்பட்டு வலிக்கும் கால்களுக்கு
ஜாம்-பெக் தடவி சுகம் பெறச் செய்க

Zam-Buk



ஜாம்-பெக் உலகின் மகோன்னதமான சருமக்களிம்பு. ஜாம்-பெக் சருமத்துவாரங்களுள் புகுந்து நோயுற்ற கால் தசைக்கு கமனா ஊட்டி பலமும் தருகின்றது. ஜாம்பெக் சருமத்தை மிருதுவாக்கி, எரிச்சல் அல்லது ரணம் ஏற்படாமல் தடுக்கும். உங்கள் காலில் உபாத்திரவம் இருந்தால் ஜாம்-பெக் தடவி உடன் குணம்பெறுக. பிறகு பிரதி இரவிலும் உபயோகித்து பாத ஆரோக்கியமும் அடையுங்கள். சரும நோய்களையும், காயங்களையும் ஆற்றுவதில் ஜாம்-பெக் அற்புத சக்தி வாய்ந்தது. ஜாம்-பெக்கில் இதர மதிப்பு வாய்ந்த ஔஷதப் பொருள்களைத் தவிர க்ளோரோபில் அதன் நோயாற்றும் குணம், தசைநார் போஷாக்கு மற்றும் இதர குணங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.



மிருகக் கொழுப்பு சேர்க்கவில்லை என்பதற்கு உத்திரவாதம்
ஜாம்-பெக்கினுல் குணம் பெறுவீர்கள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்



மீண்ட ஒளி

சோம - மகாதேவன்

சலனமற்ற இரவு அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்தது!

எதிர்க் கட்டிலிலே அவன் மனைவி கோமதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். தன்னையே மறந்து துயில் கொள்ளும் அளவுக்கு அவள் மனம் நிம்மதியாகத்தான் இருக்க வேண்டும்.

அவளாவது கவலையற்று உறங்கட்டும்.

இதைத் தான் சுந்தரமும் விரும்பினான்.

அவனது மனத்தில் பெரும் பாரமாக அழுத்திக் கொண்டிருந்த புயலின் ஒரு பகுதியை அவளுக்கும் பகிர்ந்தளித்திருக்கலாம். ஆனால் என்ன பயன் ஏற்படப் போகிறது! கண்ணீரைக் கொட்டுவதைத் தவிர அவளால் அவனுக்கு ஆறுதலளிக்க முடியுமா! அவனது இதயத்திலே அந்தத் துயரச் சுமையை நிரந்தரமாக ஏற்றிய பிறகு அவளுக்கு எந்த வழியில்தான் தேறுதல் கூற முடியும்! பெண் மனத்திலே துயரத்தின் அடிச்சுவடு ஆழமாகப் பதியும்போது கொந்தளிக்கும் எண்ண நிலைகள் அவளையே அழித்து விடலாமல்லவா!

தனது அன்பு மனைவியின் மென்மையான உள்ளம் புண்படக் கூடாது என்பதற்காக அந்தக் கொடிய வேதனையைத் தானே ஏற்றுக் கொள்ளவும் அவன் தயங்கவில்லை. அதற்காக அன்று காலையில் நடந்த நாடகம் அவனது மனத் திரையில் ஆழமாகப் பதிந்தது.

கடந்து விட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்று காலையிலேதான் அவள் முகத்தில் மகிழ்ச்சி ததும்பும் புன்னகை மின்னியதைக் கண்டான். அவனது வார்த்தைகளைக் கேட்டு, அவன் சொல்வதெல்லாம் உண்மையென நம்பி அவள் சிறு குழந்தை போல் ஆடினாள், பாடினாள்; சிரித்தாள்! சுந்தரமும் அவளுடன் சேர்ந்து சிரிக்கத்தான் செய்தான்! ஆனால் நடித்தான்.

அவள் திரும்பத் திரும்பக் கேட்டாள்! அது வரையிலும் இதயத்திலே நிறைந்திருந்த துயரத்தையெல்லாம் வெளியேற்ற அத்தனை கேள்விகள் கேட்க வேண்டியிருந்தது.

தாய்மையின் பூரிப்புப் பொங்க, அவள் குழந்தையை அணைத்துக் கொண்டு வார்த்தைக்கொரு முத்த மீந்தபோது சுந்தரம் வேறு பக்கமாகத் திரும்பிப் பொங்கி எழுந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று!

அவள் பெரும் பூரிப்பிலே - மகிழ்விலே - குழந்தையின் வருங்காலத்திய நினைவுகளில் மிதந்து கொண்டிருந்த அவளுக்குப் பயம் இருக்க முடியுமா!

எப்படி இருக்க முடியும்!

சுந்தரம் நீண்ட பெருமூச்சுடன் திரும்பிப் படுத்தான். அவனுக்கும் அவளுக்கும் இடையிலிருந்த தொட்டிலில் குமுதா படுத்திருந்தாள்.

இன்னும் சற்று நேரத்தில் பொழுது விடிந்து விடும். மேற்குப் புறமாகச் சரிந்திருந்த சந்திரனின் ஒளிக்கிரணங்கள் அந்த அறையெங்கும் மங்கிய ஒளியைப் பரப்பின. தொட்டிலின் மீது சுற்றப் பட்டிருந்த மெல்லிய போர்வை குளிர்ந்த தென்றலில் வளைந்து வளைந்து பேச முயல்வது போல் தோன்றியது அவனுக்கு!

அவன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

எத்தனையோ கதைகள்! அத்தனையும் மேகத்தின் எல்லையைத் தொடக் கூடியவைதான். நேற்றெல்லாம் இந்த நினைவுகளில் பசுமை இருக்கத்தான் செய்தது. ஆனால் பயந்துகொண்டே இருந்த முடிவை டாக்டர் உறுதிப்படுத்தி விட்டால் அவரது வார்த்தைகள் மெய்யாகி விட்டால், அவன் மகள் குமுதா மூச்சுள்ள வரையிலும் குறைவுள்ள பெண்ணாகத் தானே இருக்க முடியும்! அஸ்திவாரத்தின் அளவைக் கொண்டே அதன்மீது எழுப்பப்படும் கட்டடம் இவ்வளவு உயரம்தான் இருக்க முடியும் என்பதை எளிதாகக் கூறிவிட முடியாதா!

அவன் நெற்றியை விரல்களால் அழுத்திப் பிடித்துக் கொண்டான்!

அவனது நினைவுகள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே இருந்தன! குழந்தையின் வளர்ச்சியில் ஒவ்வொரு பருவமும் அவனது மனத்திரையில் வளர்ந்து கண்கலங்கச் செய்தது!

அவனுக்கு நல்ல சம்பாத்தியம் இருந்தது. மனமொத்த மனைவி. இன்பம் தோய்ந்த இல்லறம். மூன்னோரின் துன்பங்களைத் திரும்பிப் பார்க்கக் கூட நேரமில்லை அப்போது. வெளியில் இருக்கும் போது கூட அவனது நினைவுகள் எல்லாம் நிச்சயமாக வீட்டில்தான் இருக்கும். அப்படி அவள் அவனைப் பைத்தியமாக்கி இருந்தாள்.

"கோமதி!" என்றழைத்துக் கொண்டே அவன் வீட்டினுள் நுழையும்போது அவள் தன்னை மறந்து முகம் மலர்ந்து துள்ளி வருவாள். உடலெங்கும் புதிய உற்சாகம் பெருக அவள் பேச ஆரம்பித்து விட்டால் வெளியுலக நினைவுகளுக்கு இடமிருக்க முடியுமா!

பிள்ளை வரம் கேட்டு, கோவில் குளங்களுக்குப் போகும் சந்தர்ப்பம் சுந்தரத்துக்குக் கிடையாது. இருந்தாலும் மணமான இரண்டு வருடங்களுக்குப் பிறகு குமுதா பிறக்கும் வரை பிள்ளைப் பைத்தியம் அவனையும் அவளையும் எவ்வளவோ தூரம் அலைக்கழித்து விட்டது.

குமுதா பிறந்தாள்!

கோமதி பூரித்துப் போனாள். குழந்தையின் புன்னகையைப் பார்த்துப் பார்த்து அதனோடு பேசிக் கொண்டே இருந்தாள். அப்பொழுதெல்லாம் அவளுக்குத் தெரியாது! அவள் பூரணமாக

கம்பவில்லை! தன் மகள் வாழ் நாள் முழுவதும் துயரச் சுழலில்தான் நீந்த வேண்டும் என்பதைப் பெற்ற மனம் எளிதாக ஏற்றுக் கொள்ளுமா!

அக்கம் பக்கத்தில் பேச்செழுந்த போது சுந்தரம் நிதானமாகக் கவனித்தான். அவள் பெற்ற குழந்தை யென்றாலும் அவன் உயிரின் ஒரு பிரிவு தானே! அவனது கண்கள் திடீரெனக் குருடாகி யிருந்தால்கூட அவ்வளவு மனவேதனை ஏற்பட்டிருக்காது.

தங்கச்சிலை யொத்த அவன் மகள் குமுதா கண் குருடாகப் பிறந்து விட்டாள். அந்தக் கொடுமையை ஆண் மகனாக இருந்தாலும் அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் நாட்கள் ஓடியபோது அந்தப் பெரிய பழியிலிருந்து தப்புவதற்கு வேறு வழியே இருக்கவில்லை!

குழந்தை வளர்ந்த போது ஒருவருக்கொருவர் தேறுதல் சொல்லிக் கொண்டனர். ஒரே விதமான நம்பிக்கையில் தான் இருவருக்கும் ஆறுதல் இருந்தது. அதாவது குழந்தைக்கு வயதாகும் போது எப்படியும் பார்வை வந்துவிடும் என்பதுதான்.

குழந்தையோடு கொஞ்சுகையில்—அதன் மலர் முகத்தில் உயிரற்று மிதக்கும் கருவிழிகளைக் காணும்போது ஏற்படும் அதிர்ச்சி, 'வயதானால் சரியாகிவிடும்' என்ற ஆறுதலில்தான் இரண்டு ஆண்டுகளாகத் தேய்ந்து மறைந்தது.

நேற்றுத்தான் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்ளச் சுந்தரத்தின் மனம் துணிந்தது. என்ன நினைத்தாளோ என்னவோ, கோமதியும் தன் மகளை டாக்டரிடம் கொண்டு போய்க் காட்டும்படி நச்சரித்தாள். குமுதா குருடியில்லை என்பது நிச்சயமாகி விட்டால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்!

இப்போது சுந்தரத்தின் வாழ்விலே ஒரு பெரிய சோதனையைப் புகுத்தி விட்டார் டாக்டர். குழந்தையின் கண்கள் ஒளிபெற வழியே இல்லை என்பதற்குக் காரணங்களைக் காட்டி விளக்கி விட்டார்.

அவன் மகள் குமுதா சாகும் வரையிலும் குருடியாகத்தான் இருக்க வேண்டும் என்பது நிச்சயமாகி விட்டது.

இந்தக் கொடுமையை ஏற்றுக் கொள்ள அவனே இப்படி நடுங்கும்போது பெற்றவள் என்ன பாடு படுவாள்! தான் முகம் நோக்கி உருவறிந்து மகள் சிரிக்கப் போகிறாள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் கோமதியை இந்தச் செய்தி மரணம் வரையிலும் கொண்டு போய் விடலாமல்லவா!

குழந்தையின் எதிர்காலத்தை நிர்ணயித்து விட்டு அவன் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிய நிலையே ஒரு தனி அத்தியாயம்தான்!

வண்டிக்காரன்கூடப் பாதையை மறந்து சுந்தரத்தின் பிரமை பிடித்த நிலையைக் கவனிக்க வேண்டியதாயிற்று.

கோமதி வீட்டில் தயாராகக் காத்துக் கொண்டிருப்பாள்! தன் அருமை மகளின் வருங்காலத்தை அறிய ஒரே ஆவலாக இருக்கும் அவளுக்கு!

ஆனால் அவளிடம் எதைச் சொல்லுவது!

'நீ பெற்ற மகள்...பிறவிக் குருடிதான்!' என்ற உண்மையைச் சொன்னால் இந்தக் கொடிய சோதனையைத் தாங்கும் சக்தியுள்ளதா அவளது மென்மையான இதயம்! இதைக் கேட்கும்போதே அவள் நிலை குலைந்து போவாளே! இந்தச் செய்தியை அவளிடம் எப்படிச் சொல்வது!

வண்டி ஓடிக் கொண்டே இருந்தது. அவனது நினைவுகள் எங்கெல்லாமோ மிதந்து வந்தன! ஒரே முடிவுதான் கடைசியில் நிலைத்து நின்றது.

தற்காலத்திற்காவது கோமதி சந்தோஷமாக இருக்கட்டுமே! குமுதா நிரந்தரமாகக் கண் இழந்த அபலைதான் என்பதைச் சொல்லி அவள் கொண்டுள்ள நம்பிக்கையை ஏன் குலைக்க வேண்டும்! நிச்சயமாக அவள் அழும்போது அவளுக்கு எந்த வகையில் தான் ஆறுதல் கூற முடியும்! குழந்தையை அணைத்து அணைத்து அவள் அழுது கொண்டேதான் இருப்பாள்! இதற்கு எல்லையே இருக்கப் போவதில்லை! இதைப் பார்த்துச் சுந்தரம் மட்டும் நிம்மதியாக இருக்க முடியுமா!

சிறிது காலத்திற்காவது அவள் உள்ளம் இருளாது இருக்கட்டுமே! உண்மையைச் சொல்லி அவளது மனத்தைப் புண்படுத்துவதில் என்ன பலன் இருக்கப் போகிறது!

சுந்தரம் வண்டியிலிருந்து குழந்தையுடன் இறங்கினான். சத்தம் கேட்டவுடனேயே வாசலுக்கு ஓடி வந்து விட்டாள் அவள்! தன் திறமை எல்லாம் ஒன்று சேர்த்துச் சுந்தரம் நடித்தான்.

அவன் எதிரில் தன் மகளுக்கு எத்தனை முத்தங்கள் கொடுத்தாள் அவள்! அவள் ஆனந்த மேலீட்டால் பைத்தியம் போல் பேசினாள்! குழந்தைபோல் தன் மகளுடன் விளையாட ஆரம்பித்து விட்டாள். அவளது முகத்திலே எத்தகைய ஆனந்தம் பரவியது!

"நிச்சயமாகப் பாப்பாவுக்குப் பார்வை வந்து விடும் என்று டாக்டர் சொன்னாரா!" என்பதை ஆயிரம் தடவைகள் கேட்டு விட்டாள் அவள்.

அவனும் டாக்டரைப் போலவேதான் அவளுக்குப் பதில் சொன்னான்.

"சில குழந்தைகளுக்குப் பிறக்கும்போது கண் பார்வை குறைந்து போவது உண்டாம். வயதாகும்போது நரம்புகள் வளர்ச்சி யடைந்தவுடன் தானாகவே பார்வை வந்து விடுமாம்!"



அவன் மனமறிந்து சொன்ன பொய்யில் அவள் அகமகிழ்ந்து போனாள். ஆனால் இதிலே அவனுக்குக் கிடைத்த ஆறுதலில்தான் அமைதி இல்லை.

அவள் பெறும் இந்த 'மகிழ்வு' எத்தனை நாட்களுக்குத்தான் நீடிக்க முடியும் !

காலம் ஓடும்போது தடுமாற்றத்துடன் தவழ்ந்து திரியும் மகளைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடும் தந்தையுடன் தாயும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியவள் தானே ! அப்போது வாழ்விலே நிம்மதி இருக்க முடியுமா !

இந்த மனக் குழப்பத்துக்கு விடிவு காலம் எப்போது ! இந்தக் கேள்விக்கு விடை காணும் முன்பே பொழுது விடிந்து விட்டது.

குளிர்ந்த காற்று வீசியது. பெரியவர்களைப் போல் விடிந்த பிறகும் குழந்தைகள் உறங்குவதில்லையே ! குழந்தை விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது. அதுவரையிலும் தன்னை மறந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவள் சேயின் அழுகுரலைக் கேட்டதும் துள்ளி எழுந்தாள்.

மகளின் குரல் காதில் புகுந்ததும் அவளது உடலில்தான் எவ்வளவு துடிப்பு ஏற்படுகிறது!

"குழந்தை தாயின் உடலோடு கலந்ததுதானே!"

அவன் விரக்தியுடன் தனக்குத்தானே இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

அவள் தொட்டிலிலிருந்து குழந்தையைத் தூக்கினாள். மகளை மார்போடு அணைத்துக் கொண்டு தன் கணவனின் பக்கம் திரும்பினாள்.

"விழித்துக் கொண்டுதான் இருக்கிறீர்களா ! பாப்பா அழுகிறாளே! என்னை எழுப்பினால் என்ன !"

அவன் பதில் சொல்லவில்லை. என்ன சொல்வது! அழுகுரல் கேட்டவுடனேதான் அவள் துள்ளி எழுந்து விட்டாளே !

அவள் மகளோடு கட்டிலிலே உட்கார்ந்து கொண்டாள்.

சுந்தரம் அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

தாய்க்கும் மகளுக்கும் எவ்வளவு பொருத்தம் ! கோமதிகூடக் குழந்தைப் பருவத்தில் குமுதாவைப் போலவேதான் இருந்திருப்பாள் ! ஆனால் மயக்கும் அவளது கரு விழிகளில் உயிர் இருக்கிறது. குமுதாவுக்கு உயிரற்ற கண்கள் !

என்ன சோதனை இது ! பெண்ணாகப் பிறந்தும் கண்ணில்லாமல் பிறக்க வேண்டுமா !

அவள் குழந்தையோடு கொஞ்ச ஆரம்பித்து விட்டால், தாயும் மகளும் சேர்ந்து விட்டால் அவர்கள் இருக்கும் உலகமே வேறுதான் !

குமுதாவுக்குப் பார்வை வந்து விடும் !

கோமதியைப் பொறுத்தவரை மகளைப் பற்றிய துயர நினைவுகளுக்கெல்லாம் அணை போட்டு விடுகிறது. ஆனால் அவனுக்கு ......!

அவனுக்குத்தான் நிச்சயமாகத் தெரியுமே, குழந்தையின் வருங்காலம் ! குழந்தையின் வளர்ச்சியோடு அதன் நினைவுகளும் வளர்ந்து உள்ளத்தைப் பலமாகத் துளைக்கிறது.

கோமதி அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

பெரிய தலையணையின்மீது சாய்ந்து தலையைக் கட்டிலின் மேல்பக்க விளிம்பின்மீது வைத்தவாறு ஒருக்களித்துப் படுத்திருந்தான் அவன் !

"அப்பவே எழுந்து விட்டீர்களா !"

"ஆமாம் !" என்று பதிலளித்தான் அவன்.

"பனியடிக்கிறதே ! ஜன்னலை எல்லாம் மூடினால் என்ன! தொட்டுப் பாருங்கள். பாப்பாவுக்கு உடம்பெல்லாம் குளிர்ந்து விட்டது. இந்தக் குளிர் உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமா !"

அவள் எழுந்து குழந்தையைத் தோளின்மீது சாய்த்துக்கொண்டு ஜன்னல் கதவுகளை மூட ஆரம்பித்தாள். அவனது கண்களில் நீர் திரையிட்டது.

☼ ☼ ☼

சந்திரன் தேய்ந்து வளர்ந்தான்.

எல்லை காண முடியாத மனக் குழப்பத்தில் தொடர்ச்சியாக மூழ்கி இருப்பவன் உருக்குலைந்து போக வேண்டியதுதானே !

சுந்தரத்துக்கு ஏற்பட்டிருந்த வேதனை வளர்ந்து கொண்டேதான் இருந்தது.

குழந்தையின் மழலைமொழி கேட்டு, களங்கமற்ற புன்னகையைக் கண்டு பூரித்துப் போகும் கோமதிக்கும் அவனுக்கும் எவ்வளவோ இடைவெளி இருந்தது.

அவனது காது கேட்க அவள் தன் தோழிப் பெண்களிடம் தன் மகளைப் பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்ளும்போது சுந்தரத்தின் உடல் முழுவதுமே நடுங்க ஆரம்பித்தது. குழந்தைக்கு நிச்



சயமாகக் கண் பார்வை வந்து விடும் என்பதில் தான் அவளுக்கு எவ்வளவு நம்பிக்கை!

தன் மகளைப் பற்றி அவனிடமும் அவள் பேசிக் கொண்டேதான் இருந்தாள். அவளோடு ஒத்துப் போவதற்குச் சுந்தரமும் சேர்ந்து நடிக்க வேண்டியிருந்தது. குழந்தையின் எதிர்காலத்தை நன்கு அறிந்திருந்த அவனது உள்ளக் கிடக்கைக்கு மாறாக முகத்திரை மகிழ்ச்சிக் குறியைக் காட்ட வேண்டியிருந்தது. அவள் சிரிக்கும் போது அவன் மட்டும் அழுது கொண்டிருக்க முடியுமா!

இனிமேல் தனியாகச் சமையல்காரிதான் போட வேண்டும். அவளுக்குத்தான் விடிந்ததிலிருந்து தனது அருமை மகளைத் தூக்கி வைத்துக் கொஞ்சுவதற்கே நேரம் சரியாகப் போய் விடுகிறதே! அவளுக்கும் எத்தனை கட்டளைகள்!

தன் மகளுக்காக ஒரு நாள் நிச்சயமாக விசைத் தொட்டில் வேண்டியதிருக்கும். மற்றொரு நாள் பொய்க் குதிரை! எல்லாம் இந்தக் கண்ணில்லாத குழந்தைக்குத் தாயுள்ளத்தில் தேவையானவை!

அவள் அவனிடம் ரகசியமாகச் சொல்லுவாள்.

"அத்தான்! பாப்பாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வை வருகிறது. இப்போ கைகளை எல்லாம் கவனிக்க ஆரம்பித்து விட்டது!" என்பாள். அவனும் அதை ஆமோதிக்கத்தானே வேண்டும்? வேறு வழி என்ன இருக்கிறது!

பேதைமை கலந்த அவளது தாயன்பைக் காணும் போது அவனது உள்ளம் துக்கத்தால் நிரம்பி விடும். அவள் கூறிய ஏமாற்று வார்த்தைகளில் அவள் பைத்தியமாகவே மாறிவிட்டாள்.

சலனமற்றிருந்த வாழ்விலே குழந்தை பிறந்ததிலிருந்து பெரிய கொந்தளிப்பே உண்டாகிவிட்டது!

ஒரு நாளாவது நிம்மதியாகப் பொழுதைக் கழிக்க முடிகிறதா! அவனது எதிர்கால வாழ்வை எண்ணிப் பார்க்கும்போது இரவு பூராவும் அவன் விழித்திருக்கத்தான் வேண்டியிருந்தது. இப்படி எத்தனை இரவுகள்தான் முடியும்!

* * *

பால் நிலவு இரவிலே குளுமையைத் தெளித்துக் கொண்டிருந்தது.

அறையின் வெளியே முற்றத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தான் அவன்.

சற்று முன்னர்தான் கோமதி படுக்கச் சென்றாள். இன்று உண்மையாகவே அவளுக்குக் கோபம் வந்து விட்டது. தினமும் தன் மகளை வித விதமான உடைகளில் சிங்காரித்துப் பார்ப்பதில் அவளுக்கு ஏற்பட்டிருக்கும் அக்கறையை அளவிட முடிகிறதா!

தையற்காரன் செய்த தவறு! சுந்தரத்தால் அன்பு மனையாளின் கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. அளிக்கப்பட்ட தண்டனையை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே! இரவிலே அவள் சாப்பிடவில்லை! தான் பட்டினி கிடப்பதனால் தன் கணவனின் மனத்தை நோகச் செய்யும் தண்டனை கொடுப்பவள் அவள்! அவளுக்குப் பிடிவாதம் வளர்ந்து விட்டது. மகளோடு விளையாடி அவளும் குழந்தையாகவே மாறி விட்டாள்.

சுந்தரம் வறட்சியுடன் சிரித்துக் கொண்டான்.

அவள் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கண்ணில்லாத மகளின் மீது அன்பை எல்லாம் சுரந்து கொட்ட முடியும்! எவ்வளவு காலத்திற்குத் தன் கண்களுக்குள்ளே அவளை வைத்துக் காப்பாற்ற முடியும்!

அவள் எதிர்பார்ப்பது போல் மகளுக்குப் பார்வை வந்து விடுமா! நல்ல பைத்தியம்!

குமுதா பெரியவளாகி விடும்போது அழகே உருவான மகள் கண்ணிழந்து தவிப்பதைக் கண்டு பெற்றவளின் உள்ளமும் துயரத்தால் துடிக்கத்தான் போகிறது. அந்தச் சோக சித்திரத்தைக் காணும் போதெல்லாம் இவளும் கண்ணீரைக் கொட்டத்தான் போகிறாள். மகளின் துயர கீதத்தின் மத்தியில் தாய் நிம்மதியாக இருக்க முடியுமா! இந்தச் சோகத்திலே அமிழ்ந்துதான் கோமதியும் மடியப் போகிறாள்!

அறைக்குள்ளே குழந்தை மெதுவாகச் சிணுங்கும் சத்தம் கேட்டது.

சுந்தரம் திரும்பிப் பார்த்தான்! அங்கேயே வெகு நேரம் வரையிலும் பார்த்துக் கொண்டே இருந்தான். எண்ணக் குவியல்கள் உடலெங்கும் பதற்றத்தைக் கொடுத்தன.

எத்தனை இரவுகள் இப்படிப் பகலாகக் கடந்து கொண்டிருக்க முடியும்! சீக்கிரத்திலேயே உருக்குலைந்து மடிய வேண்டியதுதான்! அப்போது கோமதியின் நிலை...! குருட்டு மகளோடு தனித்து வாழ முடியுமா!

இதை யெல்லாம் ஆண்மையோடு எதிர்த்து நின்று வாழ்விலே அமைதியைப் பரப்ப வேறு என்ன வழி இருக்கிறது!

சுந்தரம் எழுந்து முகத்தை நன்றாகத் துடைத்துக் கொண்டான். அறை வாசலை நெருங்கி நிலைப்படியைப் பிடித்தவாறே உள்ளே சாய்ந்து மின்சார விளக்கைப் பொருத்தினான்.

அறையெங்கும் ஒளி பரவியது. வெறுந் தொட்டில் காற்றிலே ஊசலாடிக் கொண்டிருந்தது. தாயும் மகளும் கட்டிலிலேதான் படுத்திருந்தனர்.

வலது கையினால் குழந்தையை அணைத்துக் கொண்டு அவள் படுத்திருந்தாள்.

உலகமெல்லாம் எதிர்த்து வந்தாலும் குழந்தையின் உயிரைக் காக்கத் துடிக்கும் 'கை' யல்லவா அது! அதன் சக்திக்கு எந்த இரும்புக் கோட்டையைத்தான் ஒப்பாகச் சொல்ல முடியும்! குழந்தையின் உயிரோடு பொருந்திப் பாதுகாப்பளிக்கும் சக்தி வேறு எதற்காவது இருக்க முடியுமா!

கோமதியின் தொந்தரவு சகிக்க முடியாமல் போய் விட்டது. சுந்தரம், குமுதாவைப்பற்றிச் சொல்லி அவளுக்குப் பார்வை இப் பிறவியில் இல்லை என்று சொல்லியிருந்தால், இப்பொழுது அவன் உள்ளத்தில் அத்தனை வேதனை இருக்காது.

"புதிதாக ஒரு பிரபல கண் டாக்டர் இந்த ஊருக்கு வந்திருக்கிறார் என்று பக்கத்து வீட்டு லக்ஷ்மி சொன்னாளே! நானும் உங்களிடம் பத்துத் தடவைக்கு மேல் சொல்லியிருப்பேன். இன்றைக்குப் போய்க் குழந்தையைக் காட்டி விட்டு வரலாம். என்னுடைய நம்பிக்கையைத் தளர விடாதீர்கள்!" என்று கோமதி ஓரேயடியாக அவனை நச்சரிக்க ஆரம்பித்தாள். அவன் உள்ளம், அவளது திடமான நம்பிக்கைக்கு எதிரில் நெகிழ்ந்தது. இயந்திரம்போல் ஒரு டாக்ஸியைக் கொண்டு வந்து, அவளையும் குமுதாவையும் அழைத்துக் கொண்டு டாக்டரிடம் போனான்.

டாக்டர் குழந்தையின் கண்களைப் பரிசோதித்து விட்டு, "ஆப்பரேஷன் செய்தால் பார்வையை மீண்டும் பெறலாம். எதற்கும்...!" என்று மேலே பேசுவதற்குள் கோமதி இடைமறித்து, "என் குமுதாவுக்குக் கண் வந்து விடுமா, டாக்டர்! உடனே சிகிச்சையை ஆரம்பியுங்கள்!" என்றாள்.

சுந்தரம் மௌனமாக நின்றான். நிராசையுடனிருந்த அவனது உள்ளத்தில் அவளுடைய நம்பிக்கையைக் குலைக்கும் திடம் இருக்கவில்லை.

டாக்டர் சிகிச்சையைத் தொடங்கினார். ஆப்பரேஷன் பூர்த்தியாகிக் கட்டும் போட்டாயிற்று.

சில தினங்களுக்குப் பிறகு, குழந்தை குமுதாவின் கண் கட்டு அவிழ்க்கப்பட்டது.

டாக்டரின் சிகிச்சை வெற்றி பெற்று விட்டது. கோமதியின் நீண்ட நாளைய நம்பிக்கை வீண் போகவில்லை. சுந்தரத்தின் உள்ளப் புயலும் ஓய்ந்து, அமைதி பிறந்தது. குழந்தை குமுதா பார்வையைப் பெற்றே விட்டாள்! அவள் கண்கள் ஜீவ சக்தியுடன் ஒளி பெற்றுத் திகழ்ந்தன.

ஆனால்......!

கோமதியின் மகிழ்ச்சி அதிக நாள் நீடிக்கவில்லை. சுந்தரத்தின் மன அமைதியும் நீடிக்கவில்லை. நம்பிக்கையில் வாழ்ந்த பெற்றோரின் மகிழ்ச்சியைப் பறித்துக் கொண்டு குமுதா கண்களை மூடி விட்டாள்.

* * *

சுந்தரம் ஆவலோடு வரவேற்கக் காத்திருந்த இல்லறப் பாதையில் சில நாட்கள்தான் ஓடின. அதிலே அவன் எதிர்பார்த்த அமைதி இருந்ததா!

கோமதி கட்டிலில் படுத்திருந்தாள். கட்டிலுக்குப் பக்கத்தில் முழங்கால்களைக் கட்டியவாறு தரையில் உட்கார்ந்திருந்தான் சுந்தரம்.

அவனைப் போன்ற பைத்தியக்காரன் வேறு யாராவது உண்டா!

அருகிலே அமர்ந்து அயர்ந்திருந்த அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்!

சுற்றுப்புறத்தில் கருமையுற்று, அவளது கருவிழிகள் ஆழப் பதிந்திருந்தன. செக்கச் சிவந்திருந்த

எந்நாளும் வளர்த்திடுவோம்!

என். எஸ். ரீதம்பரம்

காலமெலாம் தமிழ்முழக்கிக்
'கல்கி'யெனும் தமிழ்ச்சிற்பி
ஞாலமிசை இசைகொண்டான்
நல்லமரர் உலகடைந்தான்!

கலைவடிவோன் எழுத்தரசன்
கருத்தறிஞன் எனும்படியாய்
நிலைத்திருந்த 'கல்கி' என்றும்
நிலைத்திருப்பான் தமிழ்நெஞ்சில்!

அன்னவனை எணுந்தோறும்
அருந்தமிழின் சீர்தோன்றும்!
இன்னமுதன் அவன்பணியை
எந்நாளும் வளர்த்திடுவோம்!

அவளது கன்னங்களில் மஞ்சள் கலந்த வெளுப்பு எங்கிருந்தோ கலந்து விட்டது. தளிர்த்த ரோஜா இதழை யொத்துப் பூரித்துப் போயிருந்த அதரங்கள் உலர்ந்து வாடித் துவண்டன.

கண்களினின்றும் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டான் சுந்தரம்.

அவளது அருமை மகளுக்காகத் தைத்த சட்டைகள், விளையாட்டுச் சாமான்கள் கட்டிலைச் சுற்றிலும் பரவிக் கிடந்தன! சற்று நேரம் வரையிலும் அவள் அவற்றையே வெறித்துப் பார்த்துக்கொண் டிருந்தாள்.

உறங்குவதற்கு முன் அவள் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தாள். அவைகளோடு என்னென்னவோ பேசினாள். அவளாகவே சிரித்துக் கொண்டாள். அப்புறம் அழ ஆரம்பித்தாள்!

இது என்ன பைத்தியம்! அருகிலேயே இருக்கும் அவனை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லையே அவள்! தூங்குவதற்கு முன் ஏதோ பேசினாள்! அவ்வளவும் பிதற்றல்!

அவனும் தனது திறனை எல்லாம் பயன்படுத்தித் தான் பேசினான்! அவளது புண்பட்ட உள்ளத்தில் சூழ்ந்திருக்கும் மயக்கத்தை நீக்கத்தான் பாடுபட்டான். அவளும் கேட்டுக் கொண்டேதான் இருந்தாள். அப்படியே அயர்ந்து விட்டாள்.

தூக்கம் துக்கத்தை மாற்றும் என்பார்களே! அவள் நன்றாகத் தூங்கட்டும்.

அவன் மெதுவாக எழுந்த போது அவள் விழித்துக் கொண்டு புரண்டு படுத்தாள்.

"அத்தான்!"

"என்ன கோமதி!" என்றான் அவன்.

"குமுதாவுக்கு, பார்வை வந்து விடவில்லையா!"

"கோமதி! இப்போது ஏன் அந்தக் கவலை! நிம்மதியாகத் தூங்கு!"

அவள் வறட்சியுடன் சிரித்தாள்!

"என் அருமைக் குமுதா குருட்டுப் பெண்ணா! இல்லவே இல்லை!"

"குருட்டுப் பெண் என்று யார் சொன்னது!"

"எல்லோரும் சொன்னார்களே!"

"சொல்லட்டுமே, கோமதி! இனி சொல்லித் தான் என்ன ஆகப் போகிறது!"

சுந்தரத்தின் கண்கள் நீரில் மூழ்கின! அழுகையோடு வாய் திறந்து பேச முயன்றான். ஆனால் நாக்கு மேலண்ணத்தோடு ஒட்டிக் கொண்டு விட்டது. உடைந்த உள்ளத்தோடு அதற்குமேல் பேசுவதற்குச் சக்தி எங்கே இருக்கிறது!

கட்டிலிலே உட்கார்ந்து முகத்தை மூடியிருந்த அவளது தளிர்க் கரங்களைப் பிரித்தான். நெருப்பினிடையே துவண்டு போயிருந்த செந்தாமரை மொட்டைப் போன்று அவளது முகம் கருகிப் போயிருந்தது. தொட்டால் சுடும் அளவுக்கு அவளது கைகளில் சூடு பரவியிருந்தது.

"கோமதி!" என்றழைத்தான் அவன், பொங்கி எழுந்த அழுகையை அடக்கிக் கொண்டு.

அவள் மெதுவாகக் கண் திறந்தாள். கருவிழிகளைச் சுற்றிலும் இரத்தச் சிவப்பு! பேயறைந்தாற் போன்ற வாடிய முகம்! கவலையினால் இளைத்துத் துரும்பான தேகம்!

"அத்தான்!......குமுதா சிரிக்கிறாளே! டாக்டர் சொல்லி விட்டார், அத்தான்! அவள் குருடியில்லை!" அவளது குரல் நடுங்கியது. உதடுகள் துடித்துக் கொண்டே இருந்தன! பாவம், இன்னும் என்னென்னவோ சொல்ல வாயெடுத்தாள். வார்த்தைதான் வெளிவரவில்லை.

அவன் கலைந்திருந்த அவளது தலைமயிரை அன்போடு ஒதுக்கி விட்டான்.

இது என்ன பிரமை! தாய்மைப் பித்துக் கொண்டு விட்டால்......அதற்கு முடிவே இருக்காதா, என்ன!

அவனது கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவளது நெற்றியிலே வழிந்தோடியது.

"கோமதி!" என்று அவன் அடித் தொண்டையிலிருந்து வெகு சிரமப்பட்டு வார்த்தை வெளி வந்தது.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வைக்குத் திடீரென்று அத்தனை சக்தி எங்கிருந்து வந்தது! அவன் இது வரையில் அவள் கண்களில் என்றும் காணாத சக்தி ஒளிவீசியதே!... ...ஒரு பவனை அணையப் போகும் விளக்கின் இறுதி ஒளியைப் போன்றதுதானோ இதுவும்! அப்புறம் அவள் அசையவில்லை. அப்படியே பார்த்தது பார்த்தபடி உயிரற்ற கண்களோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்!

அதைக் கண்ட அவன், இதய இரத்தம் சொட்டச் சொட்ட அழுதான்.

இந்தச் சோகக் குரல் அவளது இதயத்தைத் தொட்டதோ, இல்லையோ! அதே சலனமற்ற நிலைதான்! கண்கள் நிலைகுத்தி நின்றன.

சுந்தரம் குனிந்து இரு கைகளாலும் அவளது முகத்தை உயர்த்தினான். மேலிருந்து வழிந்த கண்ணீர்த் துளிகள் அவளது அழகிய முகத்தைக் கழுவின. சுந்தரத்தின் இதயமும் இப்பொழுது கல்லாகி விட்டது.


வாழ்வின் ஒளி மங்கிய பிறகு, ஜீவ ஊற்று வற்றிய பிறகு, அவன் இதயம் மட்டும் எப்படி இயங்கும் சக்தியைப் பெற்றுவிட முடியும்!

ஒரு கடியாரம் வாட்டர்புரூப் ஆக ஏன் இருக்க வேண்டும்?

முதல் நோக்கில், ஒரு வாட்டர் புரூப் வாட்சினுள்ள ஒரே சௌகரியம் அதைக்கட்டிக்கொண்டே வேண்டுமானால் ஜலத்தில் நீஞ்சலாம் என்பதுதான்.

ஆனால் விஷயம் அதுமட்டுமல்ல. உலகிலேயே முதன்முதல் வாட்டர்புரூப் கைக்கடியாரம் ஆவது தவிர, இன்றளவும் ஈடு இணையற்று விளங்கும் நிரந்தர வாட்டர்புரூப் ரோலெக்ஸ் ஆயிஸ்டரானது ஜலம் புகாதபடி பாதுகாப்பு தருவதுடன் நிற்பதில்லை.

ஒரு கடியார யந்திரத்திற்கு ஹானிகரமான தூசி, அழுக்கு, தூள் வியர்வை முதலியன கூட உட்புகாமல் தடுக்கப்படுகின்றன. ஜெனிவா நிபுணர்களின் கைத்திறனின் பயனாகிய ஸீலிடப்பட்ட ஆயிஸ்டர் கேஸ், ரோலெக்ஸ் யந்திரம் பிரதிதினமும் 4,32,000 டிக்-டிக் சப்தங்களுடன் (அதற்கு அதிகமுமில்லை குறைவுமில்லை) நேர்மையாகவே ஓடுவதற்கு உதவி புரிகின்றது.



எமது ரோலெக்ஸ் ஆயிஸ்டர் கடியார நிறங்களையெல்லாம் வந்து பாருங்கள்—ரோலெக்ஸ் ஆயிஸ்டர் டேட் உள்பட. இந்த கடியாரம் டயல் மீதுள்ள ஒரு சிறு ஜன்னல் மூலம் அன்றாடத் தேதியை தானாகவே தெளிவாகக் காட்டுகிறது. நேரில் வரமுடியாவிட்டால் ஒரு இலவச காட்லாக் அனுப்புகிறோம்.


ரோலெக்ஸ்

தென்இந்தியாவில் ஏக விநியோகஸ்தர்கள்:

மெஸர்ஸ் பி. ஆர் & ஸன்ஸ் லிட்.,


மவுண்டு ரோட், மதராஸ்

R. 737


AIRES Automat
THE AIRESTOCRAT OF AUTOMATS!
embodies all the features found in any Automat
plus 3 more :
1. Click type shutter-speed indicator
2. Click type diaphragm settings
3. World's most celebrated F: 3·5 NIKKOR "Coated" lens
Aires Automat – N. Nikkor F: 3.5/75mm. .. Rs. 777/-
Aires Automat – C. Coral F: 3.5/75mm. .. Rs. 600/-
Aires Reflex – C. Coral F: 3.5/75mm. .. Rs. 400/-
Seikosha Rapid Shutter – E.R.Case.
FUJI FILMS
Tropical Packing
Sch. 32. Ultra Speed
Panchromatic
Non-Halation
Also Fine Grain Sch. '28.
FUJI FILM
The Best From Modern Japan!
Sole Distributors:
CHOWGULE & CO., (HIND) LTD.
BOMBAY CALCUTTA NEW DELHI MADRAS


நக்ஷத்திர ஒளி
நம்முடைய வழிகாட்டி!
சுவாதி
ஜாக்கிரதையாகக் கப்பலோட்டுவதற்கு மாலுமிகள் நக்ஷத்திரங்களையே நம்புகின்றனர்......
நீங்கள் எஸ்ட்ரேலா பாட்டரிகளின் தவறாத பிரகாசமான வெளிச்சத்தை நம்பலாம் — அவைகள் இருமடங்கு சக்தி வாய்ந்தவை— குறைந்த விலையுள்ளவை.
ESTRELA
YOUR GUIDE IN DARKNESS
ESTRELA BATTERIES LTD BOMBAY
எஸ்ட்ரேலா பாட்டரீஸ்
எஸ்ட்ரேலா பாட்டரீஸ் லிட்.,
226

சக்கரவர்த்தித் திருமகன்



47. கரனும் ஒழிந்தான்!

ஜன ஸ்தானத்திலிருந்து கரனுடைய பதினான்கு சேனைத் தலைவர்களையும் அழைத்துக் கொண்டு சூர்ப்பனகை ராமனுடைய ஆசிரமத்துக்கு வந்தாள். பழி வாங்கி ராஜகுமாரர்களைக் கொன்று அவ்விடத்திலேயே அவர்கள் ரத்தத்தைக் குடிக்க வந்தாள்.

“அதோ அங்கே நிற்கிறார்களே அந்த இரு யுவர்களே என்னை அவமதித்து அங்கவீனம் செய்தது. அவர்களை உடனே கொல்லுங்கள்” என்றாள்.

ராமன் விஷயத்தை யறிந்தான். உடனே லக்ஷ்மணனிடம், “லக்ஷ்மணா! கொஞ்ச நேரம் சீதையைப் பார்த்துக் கொள். நான் இவர்களைப் பார்த்துக் கொள்ளுகிறேன்” என்று சொல்லிவிட்டு வில்லை யெடுத்து நின்றான்.

யுத்த வழக்கத்தை யனுசரித்து எதிர்க்க வந்தவர்களைப் பார்த்துத் தான் இன்னான் என்று சொல்லிவிட்டு, “ஏன் எங்களைத் தொந்தரவு செய்ய வந்தீர்கள்? ரிஷிகளின் கட்டளைப்படி அரக்கர்களைத் தொலைக்கவே நாங்கள் இந்த வனத்தில் குடியிருக்கிறோம். உயிர் தப்பிப் போக விரும்பினால் சும்மா போங்கள்” என்றான்.

அரக்கர்களும் வீரமாகப் பேசினார்கள். யுத்தம் ஆரம்பமாயிற்று. ராமனுடைய பாணங்கள் அரக்கர்களைக் கொல்ல அதிக நேரம் பிடிக்கவில்லை. அனைவரும் மாண்டார்கள்.

சூர்ப்பனகை மறுபடியும் கோரமாகப் புலம்பிக் கொண்டு கரனிடம் போய் அவன் முன்னிலையில் விழுந்தாள். விழுந்து புரண்டு கொண்டிருந்த சகோதரியைச் சமாதானப் படுத்தப் பார்த்தான். அவனுக்கு நிலைமை விளங்கவில்லை.

“யமனைப் போன்ற வீரர்களை அனுப்பினேன். இதற்குள் காரியம் முடிந்திருக்கும். ஏன் அழுகிறாய்? நான் இருக்க நீ இப்படி அழலாகாது” என்றான்.

அவள் எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள்.

“நீ பதினான்கு வீரர்களை அனுப்பினாய். உண்மையே. அவர்கள் பதினான்கு பெரும் பிணங்களாகக் கிடக்கிறார்கள். ராமனுடைய வீரமும் அவன் அற்புத யுத்தத்தையும் உனக்கு நான் எப்படிச் சொல்லுவேன்? உன்னுடைய சேனாபதிகள் மாண்டார்கள். உனக்கு மானமிருந்தால் உடனே புறப்படு. ராமனோடு யுத்தம் செய்து ராக்ஷஸ குலத்தைக் காப்பாற்று. இல்லா விட்டால் அழிந்தோம் என்பது நிச்சயம். உனக்கு ரோஷம் இருக்குமேல் புறப்பட்டு வா. ராமனை எதிர்த்து யுத்தம் செய். பயமாக இருந்தால் சொல். நீ உன்னையே சூரன் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. சூரனாக இருந்தால் ராமனை எதிர்த்துப் போர் செய். உன்னுடைய ராஜ்யத்திற்குள் புகுந்திருக்கும் இந்த யுவர்கள் உன் குலத்தை அழித்துத் தீர்க்க நிச்சயித்திருக்கிறார்கள்” என்றாள்.

தன் சபையிலேயே இவ்விதம் சகோதரி தன்னை அவமானப் படுத்திப் பேசிய மொழிகள் கரன் உள்ளத்தில் சூலம் போல் பாய்ந்தன.

“இந்த அற்பனைக் கண்டு நீ இவ்வளவு பயந்து பேசுகிறாய். இன்னும் ஒரு கணம் காத்திரு—அவன் ரத்தத்தை நீ குடிப்பாய்!” என்று கரன் எழுந்தான்.

“நீ ஒருவனாகப் போகாதே! சேனையைத் திரட்டிக் கொண்டு போ!” என்றாள்.

அப்படியே கரனும் உத்தர விட்டான். சகலவித ஆயுதங்களும் கொண்ட பெரிய

ராஜாஜி

சேனை தூஷணன் தலைமையில் முன்னால் சென்றது. பின்னால் கரனும் மெதுவாகத் தேரில் சென்றான். போகும் போது அரக்கன் அப

சகுனங்களைக் கண்டான். அவன் சிரித்து விட்டு, "துர் நிமித்தங்களைக் கவனிக்காதீர்கள். நான் இதுவரை எந்த யுத்தத்திலும் தோற்றதில்லை. துஷ்டர்களாகிய இந்த அற்ப மானிடப் பூச்சிகளை நசுக்கி விட்டு வெகு சீக்கிரத்தில் திரும்புவோம்" என்று தன் சேனைக்கு கர்ஜித்துச் சொன்னான். துர் நிமித்தங்களால் கொஞ்சம் பயமடைந்த அந்தச் சேனையும் மறுபடி உற்சாக மடைந்து சென்றது.

* * *

சேனை வரும் ஓசையைக் கேட்ட ராம லக்ஷ்மணர்களும் யுத்தத்துக்குத் தயாரானார்கள்.

"லக்ஷ்மணா! நிமித்தங்களைப் பார்த்தாயா? யுத்தம் வரும் என்பது நிச்சயம். ஜன ஸ்தானத்து ராக்ஷஸர்கள் அழிந்து போவது நிச்சயம். உன் முகத்தில் நான் காணும் பொலிவிலிருந்து நமக்கு வெற்றி நிச்சயம். நீ ஆயுதங்களும் கவசமும் தரித்து சீதையை அழைத்துப் போய்த் த சுந்த ஒரு மலைக் குகையில் ஜாக்கிரதையாக இருப்பாய். நான் இங்கே நின்று இந்த ராக்ஷஸ சேனையைப் பார்த்துக் கொள்ளுகிறேன். தாமதிக்க வேண்டாம். எனக்குத் துணை வேண்டியதில்லை" என்று தம்பிக்குச் சொல்லி விட்டு ராமன் கவசம் பூண்டு ஆயுத பாணியானான்.

லக்ஷ்மணன் ராமன் சொன்ன வண்ணம் சீதையை அழைத்துக் கொண்டு மலைக்குச் சென்று விட்டான்.

ஆகாயத்தில் தேவர்களும் கந்தர்வசித்த சாரண கணங்களும் யுத்தத்தைப் பார்க்க வந்து விட்டார்கள். ராமனுடைய விஜயத்தை விரும்பி அவர்களும் சுவஸ்தி சொன்னார்கள்.

ஒருவனாக நின்று எப்படி இந்தப் பெருஞ் சேனையைத் தாக்கி வெற்றியடையப் போகிறான் என்று ரிஷிகள் கவலை கொண்டார்கள். அச் சமயம் வில்லை வளைத்து நின்ற ராமசந்திரன் முகத்தில் ஜொலித்த தேஜஸானது பினாகி வில்லை வளைத்த ருத்திரனுடைய தேஜஸைப் போலவே ஜொலித்தது.

அரக்கன் சேனை வேகமாக வந்து விட்டது. சிம்ம நாதங்களும் வில்களின் டங்காரங்களும் பேரிகை நாதமும் ஏளம்பி வனம் நிறைந்து விட்டது. காட்டு மிருகங்கள் எல்லாம் பயந்து இங்கு மங்கும் சிதறி யோடின. ராமன் வில்லைப் பிடித்து நாண் ஏற்றி நின்றான். ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் சூழ்வன போல் ராக்ஷஸ சேனை ராமனைச் சூழ்ந்தது.

யுத்தம் ஆரம்பித்து மிகக் கோரமாக நடந்தது. ராமன் உடல் எல்லாம் அடிபட்டும் அசையாமல் நின்றான். இந்தப் பெருஞ் சேனையினிடமிருந்து எப்படி ராமன் தப்புவான் என்று தேவர்களும் கவலைப்பட்டார்கள்.

ராமனுடைய பாணங்களுக்கு ஆயிரக் கணக்கான ராக்ஷஸ வீரர்கள் இரையானார்கள். தூஷணனே நேரில் ராமனுக்கு எதிரில் நின்று யுத்தம் செய்தான். ராமன் தன் வில்லை வளைத்து மண்டலமாகத் தன்னைச் சுற்றி பாணங்களைச் செலுத்தி வந்தான். வில்லில் அம்பும் பாணமும் பூட்டுவதாவது, அவை நாணி லின்று விடுபடுவதாவது கண்ணுக்குத் தெரியவில்லை. ராமசந்திரன் நின்ற இடத்திலிருந்து சூரியமண்டலத்திலிருந்து கிரணங்கள் வீசுவதுபோல் பாணங்கள் பூமியில் எட்டுத் திசைகளிலும் பரவிச் சென்று ஆயிரக் கணக்கான வீரர்கள், தேர்கள், யானை, குதிரை முதலிய வாகன விலங்குகள் அடிபட்டுப் பல பல வென்று பூமியில் விழுந்து மாள்வதுதான் காணப்பட்டது. ஆகாயத்தில் அவன் செலுத்திய பாணங்கள் அரக்கருடைய உடல்களைத் துளைத்து ரத்தத்துடன் வெளிப்பட்டுக் கொழுந்து விட்டு எரியும் நெருப்பைப் போல் காணப்பட்டன.

அரக்கருடைய சேனை நிர்மூலமாயிற்று. ராமன் காலாந்த ருத்திரனைப் போல் நின்றான்.

* * *

மறுபடியும் தூஷணன் ஒரு பெரும் படைப் பகுதியுடன் ராமன்மேல் பாய்ந்தான். கொஞ்ச நேரம் அவனுடைய அட்டகாசம் நடந்தது. பிறகு ராமனுடைய பாணங்களுக்கு அவன் தேர், தேர்க் குதிரைகள், சாரதிகள் எல்லாம் இரையாகி அவனே கீழே குதித்துத் தண்டாயுதத்துடன் ராமன் மேல் பாய எத்தனித்தான். ராமனுடைய பாணங்களால் அவன் இரு கைகளும் அறுபட்டுத் தரையில் பெரிய யானையைப் போல் விழுந்து மாண்டான்.

தூஷணன் மாண்டதைப் பார்த்து மற்ற ராக்ஷஸப் படை வீரர்கள் ஒன்று சேர்ந்து ராமசந்திரன் மேல் பாய்ந்தார்கள். அவர்களும் கோதண்டத்திலிருந்து வெளிப்பட்ட பாணங்களுக்குப் பலியானார்கள்.



இவ்வாறு கரனுடைய சேனை முற்றிலும் மாண்டது. சமுத்திரம் போல் ஓசை கிளப்பிய பெருஞ் சேனை அவ்வளவும் சப்தம் அடங்கிப் போய்ப் பிரேதங்களாகவும் வெட்டு துண்டாக்கப்பட்ட ஆயுதங்களும் தேர்களுமாகக் கிடந்தது.

* * *

கரனும் திரிசிரஸனும் இருவரே மிஞ்சினார்கள். அடங்கா ரோஷத்துடன் கரன் முன் சென்று ராமனோடு யுத்தத்தில் கலக்கப் போனான். திரிசிரஸானவன் கரனை நிறுத்தி, "நான் முன்னால் சென்று ராமனைக் கொல்வேன். வெற்றியுடன் ஜன ஸ்தானம் திரும்புவோம். அல்லது ராமனால் நான் கொல்லப்படுவேன். நான் மாண்டபின் நீ ராமனை எதிர்ப்பாய்" என்று சொல்லி அவனைத் தடுத்து விட்டு அந்த மூன்று தலை அரக்கன் தேர் ஏறி ராமனைத் தாக்கினான்.

திரிசிரஸ் ராமன் பேரில் பாணங்கள் விட்டான். அவற்றைப் பொறுத்து ராமன் கால சர்ப்பங்களைப் போன்ற பல பாணங்களைச் செலுத்த ஆரம்பித்தான். முடிவில் திரிசிரஸ் ரத்தம் கக்கித் தரையில் விழுந்து மாண்டான். அவனுடன் வந்த அரக்கர்கள் மான்களைப் போல் ஓடினார்கள்.

இதைப் பார்த்த கரன் பயந்தோடிய அரக்கர்களை நிறுத்தி, தன் ரதத்தை ராமன்மேல் செலுத்தினான். அவனுடைய கர்வம் இதற்குள் அழிந்து விட்டிருந்த போதிலும் பலத்த யுத்தம் செய்தான். இருவருடைய பாணங்களும் ஆகாயத்தை மறைத்தன.

கரன் யமனைப் போல் தேரில் நின்று பாணங்கள் விடுத்தான். ராமசந்திரன் தன் வில்லின் மேல் கொஞ்ச நேரம் சாய்ந்து நின்றான். அச்சமயம் கரன் விடுத்த அம்புகளால் ராமனுடைய கவசம் அறுபட்டுக் கீழே விழுந்தது. உடல் வெளிப்பட்டுச் சூரியனைப் போல் சக்கரவர்த்தித் திருமகன் பிரகாசித்தான்.

ராமன் வைஷ்ணவ வில்லை எடுத்தான். கரனுடைய ரதம் வில் எல்லாவற்றையும் துவம்சமாக்கினான். ரதமும் வில்லும் இழந்த கரன் கதாயுதம் எடுத்து ராமனை எதிர்க்க நின்றான். யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தேவ ரிஷி கணங்கள் அச் சமயம் கவலையுடன் கை கூப்பி நின்றார்கள்.

"ஏ, கரனே!" என்று ராமன் சொன்னான்: "மக்களை இம்சித்து வந்தாய். உலகத்தாருக்குத் துக்கம் விளைத்து வருபவன் எவ்வளவு பலவானானாலும் மான்

வான். வனத்தில் தவம் செய்தும் விரதம் காத்தும் வந்த ரிஷிகளை ஏன் துன்புறுத்தியும் கொன்றும் வந்தாய்? அந்தப் பாவங்களின் பயனை இப்போது அடையப் போகிறாய். பாப காரியங்களைச் செய்து உலகத்தின் வெறுப்பைச் சம்பாதித்தவர்கள் அழிந்து போவது நிச்சயம். ரிஷிகளைக் கொன்று தின்றீர்களே அந்த ரிஷிகள் விமானத்தில் அமர்ந்து வானத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கொடிய அரக்கர்களை நிர்மூலமாக்கவே நான் தண்டகாரண்யத்துக்கு வந்திருக்கிறேன். என் பாணங்கள் உன் குலத்தார் உடல்களில் புகுந்து உயிரைக் குடிக்கும். செய் யுத்தம். உன் தலை பனங்காய் போல் கீழே உருளப் போகிறது!"

"அடே மனிதப் பூச்சியே!" என்றான் கரன். "தசரதன் மகனே! ஏன் அதிகமாகப் பேசுகிறாய்? பாமர அரக்கர்களைக் கொன்று விட்டாய் என்று கர்வம் கொண்டு விட்டாயா? வீரன் தன்னைத் தானே புகழ்ந்து பேசிக் கொள்ள மாட்டான். நீ பேசுவது அற்பர்கள் பேச்சு. குலத்திலிருந்து நீக்கப்பட்ட க்ஷத்திரியர்கள்தான் இப்படி வீரம் பேசுவார்கள். பொருளற்ற பேச்சு பேசாதே! யுத்தம் செய். மரணம் அடுத்து நிற்கும் போதுதான் இத்தகைய தற்புகழ்ச்சிப் பேச்சு கிளம்பும். உன்னுடைய அற்ப குணம் இதனின்று வெளியாயிற்று. காட்டுப் புல் பெரிதாக எரிவது போல் மிகப் பிரகாசமாகப் பேசுகிறாய். அது பயனற்ற நெருப்பாகும். இதோ கதையைப் பிடித்து நிற்கிறேன். உன் உயிரைக் கொண்டு போகும் யமனாக நிற்கிறேன். மாலை ஆகப்போகிறது. யுத்தம் நிறுத்த வேண்டியதாகும். ஆனபடியால் உடனே உயிரை இழக்கத் தயாராக நில். நீ கொன்ற இவ்வளவு பேர்களின் பழியைத் தீர்க்க நான் வந்தேன்!" என்று சொல்லிக் கையில் பிடித்த கதாயுதத்தைச் சுழற்றி ராமனை நோக்கி எறிந்தான்.

ராமனுடைய பாணங்களால் கதாயுதம் அந்த நிமிஷத்தில் துண்டிக்கப்பட்டு வேகமற்றுத் தரையில் விழுந்தது.

"அரக்கனே! உன் வீரப் பேச்சு முடிந்ததா? இன்று நீ சாவாய். இந்த வனம் இனி சுகமாக இருக்கும். முனிவர்களை இம்சித்த உன் ரத்தத்தைப் பூமி குடிக்கப் போகிறது" என்றான் ராமன்.

இவ்வாறு ராமன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கரன் அங்கிருந்த ஒரு பெரிய ஆச்சா மரத்தைப் பிடுங்கி உதட்டைக் கடித்துக் கொண்டு, "நீ செத்தாய்" என்று சொல்லி ராமன் மேல் எறிந்தான்.

இதையும் ராமன் தன் திவ்விய பாணங்களால் தடுத்து வெட்டித் தள்ளி, இனி தாமதம் கூடாது, இவனைச் சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்று பல பாணங்களை அவன் மேல் எய்து, அவன் உடல் ரத்தப் பிரவாகத்தில் மிதக்கச் செய்தான்.

பெருங் காயங்கள் அடைந்த வெறியுடன் கரன் ராமன் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். வில் வளைத்து பாணம் விட இடமில்லாமல் நெருங்கவே ராமன் பின்னுக்குக் குதித்து ஒரு இந்திர பாணத்தை விடுத்து அரக்கனுடைய மார்பைப் பிளந்தான். கரன் மாண்டான்.

ஆர்த்தெ ழுந்தனர்
　　ஆடினர் பாடினர்
தூர்த்த மைந்தனர்
　　வானவர் தூய்மலர்
தீர்த்த னும்பொலிந்
　　தான்கதி ரோன்திசை
போர்த்த மென்பனி
　　போக்கிய தென்னவே.

தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். "பாப கர்மங்கள் நிகழ்த்திய அரக்கனைக் கொன்று ஒழித்தான். தண்டகவனத்தில் இனி சுகமாக மக்கள் இருக்கலாம். மூன்று நாழிகைக்குள் கர தூஷணர்களையும் திரிசிரஸையும் அவர்களுடைய சேனையையும் ராமசந்திரன் நிர்மூலம் செய்து விட்டான். இவன் அல்லவோ வீரன்" என்று சொல்லிக் கொண்டு தேவர்கள் திரும்பினார்கள்.

சீதையும் லக்ஷ்மணனும் மலையினின்று திரும்பி வந்தார்கள். ரிஷிகளுக்குக் கொடுத்த அபய உறுதியைச் சொல்லிய வண்ணம் காத்த தனி வீரன் ராமனைத் தம்பி தழுவிக் கொண்டு அடைந்த மகிழ்ச்சி சொல்லுக்கு அடங்காது.

அரக்கர் உடல்களினின்று சிதறி விழுந்த ரத்தமும் பாதங்களில் பட்டு நின்ற யுத்தகளத்துத் தூசியும் தம்பியும் தேவியும் விட்ட கண்ணீர் கழுவி விட்டது என்கிறார் கம்பநாட்டாழ்வார்.

விண்ணில் நீங்கிய
　　வெய்யவர் மேனியின்
புண்ணின் நீரும்
　　பொடிகளும் போயுக

அண்ணல் வீரனைத்
தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினிற்
பாதம் கழுவினர்.

ஒருவன் தனியாக எவ்வாறு இவ்வளவு காரியங்களைச் செய்து தீர்த்தான்? ஒரு பசுமாடு தன் கன்றைக் காக்க மக்கள் கூட்டத்தின் மேல் பாய்ந்து அவர்கள் அத்தனை பேரும் விழுந்து ஓடிச் சிதறிப் போவதைப் பார்த்தால் உண்மை உணர்ச்சி பாய்ந்த ஓர் உயிருக்குள் எவ்வளவு வேகமும் சௌரியமும் பலமும் வந்து சேரும் என்பதை ஒருவாறு காணலாம். தெய்வமே மனித உருவத்தில் வந்து அநாதைகளுக்கு அபயம் தந்து அந்தச் சத்தியத்தைக் காக்க முனைப்பட்டால் அந்த மனிதன் எவ்வளவு செய்வான் என்பதைச் சிந்தனைச் சிற்ப சக்தியைக் கொண்டு காணலாம். ராமனை அவதார புருஷனாகத்தான் கம்பரும் வால்மீகியும் எடுத்துக் கொண்டு வெவ்வேறு விதத்தில் நமக்கு நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கிறார்கள். சில இடங்களில் தெய்வப் பிரசாதம் பெற்ற வீரனாகவும் சில இடங்களில் தெய்வமாகவேயும் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆனால் ராமன் தன்னைத் தெய்வமாக எப்போதும் எண்ண வில்லை. மனிதனாகவே க்ஷத்திரிய வீரனாகவே சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, தரும முயற்சிகளில் ஈடுபட்ட மானிடனாகவே வேதாந்த ஞானம் பெற்ற தீரனாகவே எல்லையற்ற சக்தியைப் பெறக் கூடிய ஆத்மாவாகவே தன்னை எண்ணிவந்தான்.


அரக்கருடைய பெருஞ் சேனை ராமனைத் தாக்க, திடீர் என்று வந்து நின்று 'அதோ அவன் தான்' என்று சூர்ப்பனகை அவர்களுக்குக் காட்டிய சமயம் ராமன் என்ன செய்து கொண்டிருந்தான் என்பதைக் கம்பர் பாடுகிறார்:

தூமலைப் போர்வல்
அரக்கர்க்குச் சுட்டினள்
அமலத் தோள்பெயர்
ஆயிரத்(து) ஆழியான்
நீமலைப் பாத
நினைவின் இருந்தஅக்
கமலக் கண்ணனைக்
கையினில் காட்டினள்.

நாராயணனே தானே ராமன் என்று அறிவான். ஆனால் ராமன் தானே நாராயணன் என்றெண்ண வில்லை. நாராயணனைத் தியானித்து ஆன்ம பலமும் எல்லா பலமும் பெற்று வந்தான்.



ஹாஸ்யக் களஞ்சியம்
"கிராப் வைத்துக் கொண்டு ஒருவர் போகிறார், கூப்பிடு என்றீர்கள்! இதோ எல்லோரையும் அழைத்து வந்து விட்டேன்! வேண்டியவரைப் பொறுக்கிக் கொள்ளுங்கள்!"
"உங்கள் குடையை எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போகிறேன். உங்களுக்கு ஏதேனும் வேணுமா?"
"வேண்டாம்! உங்களுக்கு ஒரு குடை வாங்கிக் கொள்ளுங்கள்!"
"இந்தக் கணக்குப் போடத் தெரியவில்லையே, அவனுக்கு!"
"எப்படித் தெரியும்? வீட்டுக் குழாயில் தண்ணீரும் வரவில்லை; கடிகாரமும் ஓடவில்லை!"
"சாமி! தூக்கிக் கொண்டு வரட்டுங்களா?"
"வேண்டாம், அப்பா! நானே மெள்ள நடந்து போயிடுறேன்!"
"ரயில்வே ஸ்டேஷனுக்குச் சீக்கிரம் போக வழி தெரியுமா?"
"சீக்கிரம் போகவா? வேகமாக ஓடுங்கள்!"


"சந்தேகத்துக்குக் கொஞ்சம் பாயஸம்!"
"மேஜையைத் தூக்கிக் கொண்டால் போதாது! அப்படியே இரண்டு கால்களையும் தூக்கிக் கொள்ளுங்கள்! ஜமக்காளத்தை விரிக்க வேணும்!"
"மன்னிக்கணும்! உங்கள் காலுக்கு அடியில் நான் நின்று கொண்டிருக்கிறேன்!"
"சரி! போய்விட்டு வாருங்கள். உங்க சௌகரியம் அப்படி இருக்கு... அப்படி நான் எழுந்து போக முடியுமா?"
சாமா.

உலகம் ஒன்று சேர்கிறது!

"புதன்"

இந்த உலகத்தின் பேதங்களையும் உலக மக்களுக்குள்ளே உள்ள வேறுபாட்டு உணர்ச்சிகளையும் எத்தனையோ பெரியார்கள் ஆராய்ந்து ஆராய்ந்து திகைத்திருக்கிறார்கள். பேதம் என்றும் பிரிவு என்றும் ஏற்படுகிற வகைகளைப் பல கோணங்களிலிருந்தும் விமர்சனம் செய்து முடிவு காண முயன்றிருக்கிறார்கள். நமது பாரத புண்ணிய பூமியின் மகான்களும், மேனாட்டு அறிஞர்களும் இந்த முயற்சியின் பயனாக, ஒரு விஷயத்தை முடிவாகக் கண்டார்கள். குழந்தையின் மனத்தைப் பண்படுத்துகிற முறையிலேதான் இம்மாதிரியான உணர்ச்சி பேதங்களைக் களைய முடியும் என்று தேர்ந்தார்கள். இந்த அரிய உண்மையை உணர்த்துகிற வகையில் அமைந்துள்ள ஒரு பழைய கதை:—

அகில உலக வர்ணப் படம் ஒன்றைச் சுக்கு நூறாகக் கத்திரியினால் துண்டித்துக் கொண்டு வந்து கொடுத்தார் தந்தை. மகளிடம் கொண்டுவந்து கொடுத்தார். "அம்மா! இந்தத் துண்டுகளை யெல்லாம் சரிப்படுத்தி உலகத்தை ஒன்று சேர்த்துவிடு பார்க்கலாம்!" என்றார்.

குமாரி அந்தத் துண்டுகளை எடுத்துக் கொண்டு தன்னுடைய அறைக்குப் போய் உட்கார்ந்தாள். நீண்ட நேரம் பலமாக யோசனை செய்தாள்.

"உலகப் படத்தை அப்பா எதற்காகத் துண்டு துண்டாகக் கத்திரிக்க வேண்டும், பிறகு எதற்காக இப்படி அந்தத் துண்டுகளை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒட்டும்படி சொல்ல வேண்டும்!" என்று அவளுக்குப் புரியவே இல்லை! எனவே அந்தக் காகிதத் துண்டுகளை அப்படியும் இப்படியும் புரட்டி வெகுநேரம் வரை, பொழுது போவதே தெரியாமல், ஆராய்ச்சி நடத்தினாள் குமாரி.

அன்று காலையில் தகப்பனார் கொடுத்த படத் துண்டுகளை, மாலை வரை ஆராய்ந்த குமாரி, சாயந்திரம் ஐந்து மணிக்குத் தன்னுடைய தம்பி பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் காண்பித்தாள். அதோடு நிறுத்தவில்லை. "தம்பி! இந்தப் புதிருக்கு விடையும் கண்டுபிடித்து விட்டேன், தெரியுமா!" என்று சொல்லிக் கொண்டே, தம்பிக்கு விஷயத்தைச் சொல்லாமல், தனியாக ஒரு அறையிலே போய் உட்கார்ந்து கொண்டு, அந்தக் காகிதத் துண்டுகளை எடுத்துச் சேர்த்து முடித்து விட்டாள் குமாரி! உலகம் ஒன்று சேர்ந்து கொண்டது! கத்திரிக்கப்பட்ட அகில உலகத்தின் துண்டுகள் எல்லாம் அந்த அந்த இடத்திலே போய் அப்படி அப்படியே பொருந்திக் கொண்டன! எல்லாவற்றையும் சேர்த்து ஒரு தாளிலே பரப்பி வைத்துக் கோந்தினால் ஒட்டி விட்டாள் குமாரி! அப்பா மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். உற்சாகத்தோடு பாராட்டினார். தம்பியோ ஒரே திகைப்போடு அக்காவைப் பார்த்தான்!

ஏதோ சின்னாபின்னமாகக் கிடந்த காகிதத் துண்டுகளைத் தனியாக அறைக்குள்ளே எடுத்துக் கொண்டு போய் அக்கா என்ன செய்தாள்? சிதறிப்போன துண்டுகளையெல்லாம் என்ன மாயத்தைக் கொண்டு ஒன்று சேர்த்தாள்? அகில உலக வர்ணப் படத்தை நான்கு துண்டுகளாகக் கத்தரித்தாலே, அந்த நான்கையும் ஒன்று சேர்ப்பது கஷ்டமாயிற்றே! அப்படியிருக்க, இத்தனை நூற்றுக் கணக்கான துண்டுகளை எந்த முறையிலே, எப்படி ஒன்று சேர்த்து அவ்வளவு கணக்காக மறுபடியும் பொருத்தி விட்டாள்?—தம்பிக்கு அந்த ரகசியம் புரியவே இல்லை!

"அக்கா! உலகத்தை எப்படி ஒன்று சேர்த்தாய்? சொல்லேன்!" என்று கெஞ்சினான் அவன்!


குமாரி தன்னுடைய தம்பிக்கு உலகம் ஒன்று சேர்ந்த ரகசியத்தை விளக்கிச் சொன்னாள்.

கத்திரிக்கப்பட்ட உலகப் படத்துக்குப் பின்னால் ஒரு குழந்தையின் படம் இருந்தது. குமாரி உலகத்தைக் கவனிக்காமல் குழந்தையின் உருவத்தையே கவனித்தாள். துண்டித்துக் கிடந்த காகிதக் குவியலை யெல்லாம் மறு பக்கமாகப் புரட்டி, குழந்தையின் தலை, கழுத்து, கைகள், மார்பு, கால் என்று குழந்தையின் உருவம் ஒன்று சேர்ந்து வரும்படியாகக் காகிதத் துண்டுகளை அடுக்கிக் கொண்டே ஒட்டினாள். குழந்தையின் படம் பூரணமாக ஒட்டிக் கொண்டது! இப்பொழுது அந்த ஒட்டிய காகிதத்தை மறு பக்கம் திருப்பினால், உலகம் ஒன்று சேர்ந்து ஒட்டிக் கொண்டு காட்சி அளித்தது!

இந்த ரகசியத்தைத் தம்பியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் குமாரி. அப்பொழுது அதைக் கேட்டுக் கொண்டே வந்த தகப்பனார், சொன்னார்: "உண்மை, குழந்தையைக் கவனி. உலகம் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும். குழந்தையின் சித்திரத்தை இணைத்துவிடு. உலகம் தானாகவே இணைந்து கொள்ளும்!"

அக்காவும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'குழந்தையைக் கவனிப்பதில், உலகத்தையே கவனிக்கிறோம்' 'குழந்தையை இணைப்பதில், உலகத்தையே இணைக்கிறோம்' என்ற அந்த உண்மைக்கு விளக்கம் சொல்வது போல, குழந்தையின் படமும் அதற்கு மறு புறம் அகில உலகப் படமும் அவர்களுடைய கண்ணுக்கு முன்னால் மாறி மாறிக் காட்சி தந்து கொண்டிருந்தன!



தங்க மாம்பழம்

15. மீண்டும் ஏமாற்றம்!

உமா 'ஓ' வென்று அலறியதைக் கேட்ட பிரபாகரன் திடுக்கிட்டு, அவன் பக்கம் திரும்பி, "என்ன உமா! ஏன் அப்படிக் கத்தினாய்?" என்று பரிவுடன் கேட்டான்.

"அண்ணா, என் கையில் இருந்த மாம்பழத்தை யாரோ பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள்!" என்று அழுதுகொண்டே சொன்னாள் உமா.

உடனே பிரபாகரன் பரபரப்படைந்து, கையைப் பிசைந்து கொண்டு நாலாபுறமும் பார்த்தான். அச்சமயம் மரத்தின் மேலிருந்து 'குர்ர், குர்ர்' என்று சத்தம் கேட்டது. உமாவும் பிரபாகரனும் மரத்தின் மேல் அண்ணாந்து பார்த்தார்கள்.

பெரிய மந்திக் குரங்கு ஒன்று மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்தது. அதன் கையில் தங்க மாம்பழம் பளபள வென்று பிரகாசித்தது. அந்தக் குரங்கு பழத்தைக் கையில் வைத்துக் கொண்டு கிளைக்குக் கிளை தாவிக் கொண்டிருந்தது.

உமாவையும் பிரபாகரனையும் ஏமாற்றித் தங்க மாம்பழத்தைத் தட்டிக் கொண்டு போக நினைத்த வீரப்பதேவனை அவன் சிறிதும் எதிர் பாராத விதத்தில் குரங்கு ஏமாற்றி விட்டது. 'லபக்' கென்று அது அவனுடைய கையிலிருந்து பழத்தைப் பிடுங்கிக் கொண்டது.

'என்னை முந்திக் கொண்டது இந்தக் குரங்கு! போகட்டும். எப்படியாவது அவர்களிடமிருந்து அந்த மாம்பழம் பிரிக்கப்பட்டதே அது எனக்குப் போதும். நான் இந்தக் குரங்கையே கவனித்துக் கொண்டு சமயம் பார்த்து அதனிடமிருந்து அம்மாம்பழத்தைப் பிடுங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன்!' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு குரங்கையே கவனித்துக் கொண்டிருந்தான்.

குரங்கு மாம்பழத்தைக் கீழே போட்டு அந்த அதிர்ச்சியினால் அதனுள்ளிருக்கும் கண்ணாடிக் கூடுகள் உடைந்து அதனால் அரசனுக்கு விபத்து ஏற்படுமோ என்று வீரப்பதேவன் வேதனைப் பட்டான்.

அதே சமயத்தில் உமாவும் பிரபாகரனும் தங்க மாம்பழம் கீழே விழுந்து விடுமோ என்று கவலைப்பட்டார்கள். அவர்களுக்கும் தங்க மாம்பழத்தின் ரகசியம் நன்றாகத் தெரியுமல்லவா?

"உமா, நான் மாம்பழத்தை உன்னிடம் கொடுக்க மாட்டேன் என்று சொன்னேனே, கேட்டாயா? என்ன காரியம் செய்து விட்டாய்? கடைசியில் குரங்கு கையிலிருக்கும் பழம், குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையாக ஆகிவிட்டால் என்ன செய்வது!" என்று பிரபாகரன் வருத்தத்தோடு சொன்னான். பிறகு இருவரும் குரங்கையே கவனித்துக் கொண்டிருந்தார்கள். உமா பதிலே சொல்லவில்லை. ஆனால் அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக வந்த கண்ணீர் அவள் செய்த தவறை அவள் உணர்ந்து விட்டாள் என்பதைத் தெரிவித்தது. அதைப் பார்த்த பிரபாகரன் "உமா, கவலைப்படாதே. இதுவரையிலும் நம்மைக் காப்பாற்றிய கடவுள் நம்மைக் கை விட மாட்டார். அதோ பார், அந்தக் குரங்கை!" என்றான்.

அப்பொழுது மாம்பழத்தை வைத்துக் கொண்டிருந்த குரங்கை, அதன் கையிலிருந்த மாம்பழத்தைப் பிடுங்க மற்றக் குரங்குகள் துரத்த ஆரம்பித்தன. ஆனால் அந்த மந்திக் குரங்கு மிகவும் சாமர்த்தியம் உள்ள குரங்கு. அதைப் பார்த்தால் சந்தையிலுள்ள குரங்குகள் எல்லாவற்றையும் விடப் பெரியதாகவே காணப்பட்டது. தன்னைத் துரத்திவரும் குரங்குகள் கையில் அகப்படாமல் இருப்பதற்காக அந்த மந்திக் குரங்கு மரக்கிளையின் மீது தாவி, அந்தக் கிளையின் உச்சிக்குப் போய்க் கிளையை மேலும் கீழுமாகப் பலமாக அசைத்தது. பிரபாகரனும், உமாவும் எங்கே தங்க மாம்பழத்தைக் கீழே போட்டு

விடுமோ என்று பயந்து மந்திக் குரங்கைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதே சமயத்தில் வீரப்ப தேவனும், உமாவுக்கும் பிரபாகரனுக்கும் கண்ணில் படாமல் மரத்தின் மறு பக்கத்தில் மறைந்த மாதிரி நின்று ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்தான்.

மேலே உட்கார்ந்திருந்த குரங்கு தங்க மாம்பழத்தைக் கடித்தது. நிஜ மாம்பழமாக இருந்தால் அல்லவா அதைக் கடிக்க முடியும்? ஒரு தடவை கடித்தது. கடிக்க முடியவில்லை. மாம்பழத்தை வேறு பக்கமாகத் திருப்பி மறுபடியும் கடித்துப் பார்த்தது. அதன் பற்கள் வலி எடுத்தன. குரங்குக்கும் கோபம் வந்தது. பல்லை இளித்தது. இப்படியும் அப்படியுமாகப் பார்த்தது. வேறு குரங்குகள் அதன் சமீபத்தில் நெருங்க ஆரம்பித்தன. வேறு கிளைக்குச் சட்டென்று தாவிற்று. கையிலிருந்த மாம்பழத்தைத் திடீரென்று கீழே போட்டது. வேறு கிளைக்கு அது தாவியதினால் கீழே எறியப்பட்ட மாம்பழம் வீரப்ப தேவன் கைகளுக்கு எட்டவில்லை.

ஒரு விநாடியில் அவர்கள் யாவருடைய மனமும் என்ன பாடுபட்டிருக்கும் என்று சொல்ல முடியாது. குரங்கினால் கீழே போடப்பட்ட மாம்பழம் அதிர்ஷ்ட வசமாகத் தரையில் விழவில்லை. ஒரு கடையின் பந்தலின்மீது 'தொப்' என்ற ஓசையுடன் விழுந்தது. இதைப் பார்த்த வீரப்ப தேவன் 'கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார். இதோ இப்பொழுதே விரைவில் சென்று அந்தப் பந்தலின்மீது ஏறித் தங்க மாம்பழத்தை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்' என்று கடையை நோக்கி வேகமாகச் செல்ல ஆரம்பித்தான்.

"உமா, கவலைப்படாதே! நம்முடைய கையில் தங்க மாம்பழம் திரும்பி வந்து சேர வேண்டிய காலம் வந்து விட்டது. இதோ சென்று அந்தப் பந்தலின் மேல் விழுந்திருக்கும் தங்க மாம்பழத்தை எடுத்து வருகிறேன்" என்று சந்தோஷத்துடன் சொல்லி விட்டுப் பந்தலை நெருங்கினான். உமாவும் சந்தோஷமடைந்து, "அண்ணா, ஜாக்கிரதையாகப் போய் அதை எடுத்துக் கொண்டு வந்துவிடு!" என்றாள். ஆனால் பாவம், அடுத்த விநாடியில் அவர்களுடைய சந்தோஷம் இருந்த இடமே தெரியாமல் போய் விட்டது. மகிழ்ச்சிக்குப் பதிலாகக் கவலையும் பயமும் உண்டாயின. அதற்குக் காரணம் பந்தலின்மேல் விழுந்த தங்க மாம்பழம் கனம் தாங்கமாட்டாமல் பந்தலின் ஒரு கீற்றுக்கும் மற்றொரு கீற்றுக்கும் உள்ள இடைவெளியின் வழியாகக் கடையினுள் விழுந்ததுதான். அந்தக் கடை ஒரு மாம்பழக் கடை. ஆதலால் அங்கே கும்பல் கும்பலாகக் குவிக்கப் பட்டிருந்த ஒரு மாம்பழக் குவியலில் தங்க மாம்பழமும் விழுந்தது. பிரபாகரனுக்கும் உமாவுக்கும் அதிர்ச்சியின் மேல் அதிர்ச்சி! "தங்க மாம்பழத்தை உண்மையான மாம்பழம் என்று யாராவது வாங்கிக் கொண்டு போய் விட்டால் என்ன செய்வது? சரி, இருக்கட்டும். இப்பொழுது தான் அந்தக் கடைக்கு யாரோ மாம்பழம் வாங்க வந்திருக்கிறான். அவன் போன பிறகு நான் போய்க் கடைக்காரனிடமிருந்து எப்படியாவது நமது மாம்பழத்தை வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று உமாவுக்குத் தைரியம் கூறினான் பிரபாகரன்.

பிறகு பிரபாகரனும், உமாவும் கடையிலுள்ள மாம்பழக் குவியல்களின் பேரிலேயே இருந்த தங்க மாம்பழத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீரப்ப தேவனும் சற்றுத் தூரத்திலிருந்து அதே மாம்பழத்தை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான். கடையின் உள்ளே இருந்த கடைக்காரன் 'தொப்'பென்று தங்க மாம்பழம் பந்தலில் விழுந்தவுடன், "இந்தக் குரங்குகளுக்கு வேலை இல்லை. குரங்குகளின் உபத்திரவம்தான் இந்தச் சந்தையில் மிகவும் தொந்தரவாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே தன் வியாபாரத்தைக் கவனித்தான்.

அடுத்த விநாடியில் மந்திர மாம்பழம் உள்ளே விழுந்து மற்றைய மாம்பழங்களுடன் கலந்ததை அவன் அவ்வளவு கூர்மையாகக் கவனிக்கவில்லை. கடை முழுவதும் தான் மாம்பழக் குவியல்களாக இருந்ததே! கடைக்கு வந்தவன் ஒரு குடியானவன். அவன் மாம்பழங்கள் வாங்குவதற்காக ஒரு பெரிய கூடை கொண்டு வந்திருந்தான். ஒவ்வொரு மாம்பழமாகப் பொறுக்கி எடுத்து அந்தக் குடியானவன் கொண்டு வந்திருந்த கூடையில் நிரப்பிக் கொண்டிருந்தான். எங்கே அந்த மாம்பழத்தையும் அந்தக் கூடையில் எடுத்து வைத்து விற்று விடப் போகிறானோ என்று பயந்தபடியே நின்று கொண்டிருந்தார்கள், பிரபாகரனும், உமாவும்.



'எப்படியாவது மாம்பழம் குடியானவனுடைய கூடையில் வந்துவிட்டால் போதும். பிறகு என் சாமர்த்தியத்தினால் நான் அதைப்பெற்றுக்

கொள்ளுகிறேன்' என்று துடி துடித்துக் கொண்டிருந்தான் வீரப்ப தேவன்.

கடைக்காரனுடைய கை தங்க மாம்பழத்திடம் சென்றது. குடியானவனுடைய விருப்பப்படி அந்த மாம்பழமும் கூடையில் வைக்கப்பட்டது. "ஐயோ, அந்த மாம்பழத்தை வந்தவன் வாங்கிக்கொண்டு விட்டானே! கூடையை இப்பொழுது எடுத்துக் கொண்டு அல்லவா போய் விடுவான்! என்ன செய்வது! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்று சொல்லுவார்களே, அது நம் விஷயத்தில் சரியாகப் போய் விட்டதே! எவ்வளவு சிரமப்பட்டுத் தங்க மாம்பழத்தைக் காப்பாற்றினேன்! அது யாரிடமோ அல்லவா போய்ச் சேரப் போகிறது!" என்று வருத்தத்துடன் சொன்னான் பிரபாகரன்.

தங்க மாம்பழம் குடியானவனுடைய கூடைக்கு வந்தவுடன், வீரப்ப தேவன், 'சபாஷ். நான் நினைத்தபடி ஆகி விட்டது!' என்று சந்தோஷத்தினால் குதித்தான். மாம்பழங்களை வாங்கிக் கொண்ட குடியானவன் ஓர் அரண்மனைச் சிப்பந்தி.

அந்தச் சிப்பந்திக்கு வீரப்ப தேவனிடம் ரொம்பவும் பயம் உண்டு. வீரப்ப தேவன் இட்ட கட்டளையைத் தலைமேல் தாங்கி, மிக்க சிரத்தையுடன் செய்பவன். அப்படிப் பட்டவனிடமல்லவா தங்க மாம்பழம் சிக்கி விட்டது! அதனால்தான் தங்க மாம்பழமும் ஜாக்கிரதையாக அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்துவிடும் என்று சந்தோஷம் கொண்டிருந்தான் வீரப்ப தேவன்.

'பிரபாகரனும் உமாவும் இம்முறை நன்றாக ஏமாந்தார்கள். நான் ஜெயித்தேன். ஹா ஹா ஹா' என்று சிரித்துக் கொண்டே குதிரையின் மீது ஏறினான். அரண்மனையை நோக்கி வெகு வேகமாகச் சென்றான் வீரப்ப தேவன். குடியானவனும் கூடையை எடுத்து வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

"அண்ணா, அண்ணா! அந்தக் குடியானவன் கூடையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டு விட்டானே! இப்பொழுது என்ன செய்வது!" என்றாள் உமா.

"இந்தக் கூட்டத்தில் அவனை ஒன்றும் கேட்க வேண்டாம். அவன் இப்பொழுது எந்த இடத்திற்குப் போகிறானோ தெரியவில்லை. எதற்கும் அவனைப் பின்பற்றியே நாமும் நடந்து செல்வோம். பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான் பிரபாகரன்.

உடனே பிரபாகரனும் உமாவும் மாம்பழக் கூடையைத் தூக்கிச் சென்று கொண்டிருந்த குடியானவனைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

வெகு தூரம் அவனைப் பின்பற்றி நடந்து சென்றார்கள். அந்தக் குடியானவனுக்கும் தன் பின்னால் இரண்டு பேர் வருவது தெரியாமல் இல்லை. அவன் மனத்தில் சந்தேகம் ஏற்படலாயிற்று.

எதற்காக இவர்கள் என்னைப் பின்பற்றியே வருகிறார்கள் என்ற சந்தேகம் அவனுக்குத் தோன்றிச் சட்டென்று தன் தலையிலிருந்த கூடையைப் பக்கத்தில் இருந்த சுமை தாங்கியின்மீது வைத்தான். இளைப்பாறுவது போலப் பாசாங்கு செய்து கூடையின் பக்கத்தில் நின்றுகொண்டான்.

குடியானவனைப் பின்பற்றிய பிரபாகரனும் உமாவும் குடியானவன் நிற்கவே தாங்களும் அவன் அருகில் சென்று மேலே செல்லாமல் நின்று கொண்டிருந்தார்கள். குடியானவனுடன் முதலில் பேசுவதற்குப் போதிய தைரியம் வரவில்லை. மிரள மிரள விழித்துக் கொண்டு குடியானவனையும் அவனுடைய மாம்பழக் கூடையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தார்கள்.

"என்னை ஏன் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? உங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு போங்கள்" என்றான் குடியானவன்.

"நாங்கள் இந்த ஊருக்குப் புதிது. நீங்கள் வைத்துக் கொண்டிருக்கும் மாம்பழக் கூடையில் எங்கள் மாம்பழம் ஒன்று இருக்கிறது. அதை உங்களிடமிருந்து வாங்கிப் போகவே நாங்கள் உங்களைத் தொடர்ந்து வருகிறோம்" என்று பிரபாகரன் மிகவும் பணிவாகச் சொன்னான்.

"என் கூடையில் உங்கள் மாம்பழம் இருக்கிறதா? இது வெகு வேடிக்கையாக இருக்கிறதே! உங்களுக்குமாம்பழம் தேவையாக இருந்தால் சந்தையில் போய் வாங்கிக் கொள்ளுங்களேன்" என்று சொல்லிக் கொண்டே சுமை தாங்கியிலிருந்து கூடையை எடுத்துக் கொண்டான். மறுபடியும் தன் தலையில் வைத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான் அந்த ஆசாமி.

"ஐயா, ஐயா! நாங்கள் சொல்லுவது உண்மை. எங்கள் பழம் அந்தக் கூடையில் தான் இருக்கிறது. இதோ இருக்கிறாளே, என் தங்கை உமா, மாம்பழத்தை அவள் கையில் வைத்திருக்கும் பொழுது ஒரு குரங்கு பிடுங்கி நீங்கள் வாங்கிக் கொண்டிருந்த மாம்பழக்கடையில் போட்டு விட்டது!" என்றான் பிரபாகரன்.

"குரங்கு மாம்பழக் கடையில் போட்டு விட்டால் என்ன? நான் அந்தக் கடைக்காரனிடம் பணம் கொடுத்துத் தானே வாங்கினேன்? இந்தக் கூடையிலுள்ள மாம்பழத்திலிருந்து ஒரு மாம்பழத்தைக் கூட நான் தரமாட்டேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே போக ஆரம்பித்தான்.

(தொடரும்)




பெர்ல் பார்லி என்று கூறுவதற்கு முன்பாக
ராபின்ஸன்ஸ்
என்று சொல்லிக் கேளுங்கள்
ROBINSON'S PEARL BARLEY
எல்லா உபயோகங்களுக்கும் சிறந்தது
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட்.,
த. பெ. 664 கல்கத்தா.



அந்த இருமலை நிறுத்துக தொண்டை ரணத்தை சமனமூட்டி குணப்படுத்துக
பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும்போதே, இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் சுவாசத்துடன் தொண்டை சுவாசக் குழாய் மூலமாக சுவாசப்பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே சென்று வேலைசெய்கின்றன. அதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாய் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, உங்கள் சுவாசப் பையை காப்பாற்றி, காய்ச்சலை உடைத்து, அடைப்பை நீக்குவதுடன் இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.
பெப்ஸ் சாப்பிடுங்கள்
PEPS
உலக பிரசித்தி பெற்ற
தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.
FPY. 29-TAM
மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

பிரஷால் தேய்ப்பதால்
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட்
ஈறுகளைப் பலப்படுத்துகிறது



இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனாமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.



CTPA/6/4

* நீரில் கரையும் குளோரோபிலின்கள் சேர்ந்தது

புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

1. ஆஸ்துமா

பிட்யூடரி கோளத்தைப் பற்றியும் அட்றினேல் கோளத்தைப் பற்றியும் நேயர்கள் நன்கு அறிந்திருப்பார்கள்.

ஆஸ்துமாக்காரர்களுக்கு மேற்படி கோளங்கள் சரிவர வேலை செய்யாததினால் தான் 'ஸிம்பதெடிக்' நரம்புச் சக்தி குறைவு ஏற்படுகிறது. வேகஸ் என்ற நரம்புச் சக்தியும் அவர்களுக்கு அவ்வளவு சரிவர வேலை செய்வதில்லை. இதற்குப் பிராண சக்தி தேவை. இந்த நரம்புச் சக்திகளைத் தூண்ட பிட்யூடரின் மருந்தும் அட்றினேல் மருந்தும் உபயோகிக்கின்றனர்.

உடலில் இருக்கக் கூடிய அவயவங்கள் நாம் உயிர் வாழுமளவும், நமக்கு வேலை செய்ய வேண்டியது இயற்கையின் கட்டளையாகும். அப்படியிருக்க எந்தக் காரணத்தினாலோ இந்த பிட்யூடரி ஹார்மோனும் அட்றினேல் ஹார்மோனும் போதுமான அளவு சுரப்பது தடைப்படுகிறது; அல்லது குறைகிறது. அப்படி வேலை செய்யாமல் இருக்கும் கோளங்களை மறுபடியும் வேலை செய்யச் செய்வதுதான் நல்லது. முறையும் அதுதான். அப்படியிருக்க, அந்த அவயவங்களை 'அப்படியே கிட' என்று விட்டுவிட்டு, அது செய்யக் கூடிய வேலையை வேறு விதத்தில் இந்த அட்றினேல் மருந்தின் மூலமாகவும், பிட்யூடரி மருந்தின் மூலமாகவும் செய்விப்பது எது வரை சரி என்பது முதல் பிரச்னை.

இது எப்படியிருக்கிறதென்றால், ஒரு பிள்ளை வேலை செய்யாமல் சோம்பேறியாய் இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுக்குப் போதியபடி அறிவுறுத்தித் தந்திரமாய் வேலை வாங்கினால்தான் பெரியவனாகி மற்றவர்களைப் போலப் பிழைப்பான். ஆனால் அப்படிச் செய்யாமல் 'நீ அப்படியே இருந்து விட்டுப் போ. நீ வேலை செய்து ஆக வேண்டியது எனக்கு ஒன்றும் இல்லை. நான் மற்றவர்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்கிறேன்' என்று சொல்லி அவ்வாறே நடந்தும் கொண்டால், அந்தப் பிள்ளை என்ன ஆவான்? ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் மேலும் சோம்பேறியாகி விடுவான்.

அவனுடைய சோம்பலைப் போக்கி நல்ல பையனாக்கிவிட்டால் இவைகளெல்லாம் நமது உடைமை, நமது பெற்றோர் என்று கருத்துடன் நடப்பான். அன்னியனைக் கொண்டு வேலை வாங்குவதால் பொருளில் கருத்தும் இருக்காது. பெற்றோர்களுக்குத் திருப்தியும் ஏற்படாது. குடும்பத்தில் பல கலகங்கள் நடக்கும். அதைப் போலத்தான் நமது உடலும். உடல் ஒரு பெரிய குடும்பம். இந்தக் கோளங்கள் பிள்ளைகளைப் போன்றவை. இவைகளில் ஒன்றிரண்டு சோம்பல் கொண்டால் சோம்பலைப் போக்க மார்க்கம் தேட வேண்டும். அவ்வாறு செய்யாமல் அது செய்யக் கூடிய வேலையை வெளியிலிருந்து ஹார்மோன்களை மருந்தாக உட் செலுத்திச் செய்து வந்தால் ஏதோ சில நாள் வேலை நடக்கிறது. பிறகு அந்த ஹார்மோன் அதிகரிப்பால் பல துன்பங்கள், கஷ்டங்கள், கலகங்கள் உடலில் நேருகின்றன. ஆனால் உடலில் வேலை செய்யவேண்டிய கோளங்கள் மேலும் சோம்பேறியாய் விடுகின்றன.

அப்படி என்ன உண்டாகி விடுகிறது? சாதாரணமாய் இந்த ஹார்மோன் மருந்துகளை உபயோகித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள் எனலாம். ஆம், அளவுடன் வைத்தியர்கள் உபயோகிக்கும் வரை ஒன்றுமில்லைதான். ஆனால் அதிகமாய் உபயோகிக்கும் போது ஆஸ்துமா விலகினாற் போல் இருந்தாலும் அவர்களின் இருதயம் இரத்தத்தை வேகமாய், சீக்கிரம் சீக்கிரம் அடித்து அனுப்பியதினால் களைத்துப் போய் அதனால் பாதிக்கப் படும். மூத்திரக் காய்களில் பழுதேற்படும். பிறகு உடலின் வேலைகள் கெட்டு, பூரண ஆரோக்கியம் கெடும். எத்தனையோ ஆஸ்துமா நோயாளிகள் பூரண ஆயுளை அநுபவிக்க முடியாமல் இருதயக் கோளாறினால் இறந்திருக்கிறார்கள்.

இருதய ஆஸ்துமா, குண்டிக்காய் ஆஸ்துமா என்று சொல்வதெல்லாம் இருதயமும் குண்டிக்காய்களும் கெடுவதினால் உண்டாகும் ஆஸ்துமாதான். இவைகளைக் குணமாக்க இந்த ஹார்மோன் மருந்துகளை உபயோகிக்க மாட்டார்கள். நுரைசரல் ஆஸ்துமாவுக்குத்தான் இவைகளை உபயோகிப்பார்கள்.

மற்றும், இரத்தம் கெடுவதால் ஆஸ்துமா, சொறி சிரங்கால் ஆஸ்துமா, அஜீரணத்தால் ஆஸ்துமா முதலிய மற்றும் பல விதமான ஆஸ்துமாக்கள் வருவதுண்டு. இதற்கெல்லாம் இந்த ஹார்மோன் மருந்துகள் தேவையில்லை. அதற்கான பரிகாரம் செய்தால் அவைகள் மறைய ஆஸ்துமாவும் உடனே மறைந்து போய் விடும்.

ஆனால் காற்றுக் குழாய் சம்பந்தப்பட்ட ஆஸ்துமா ஒன்றுதான் மிகக் கஷ்டப்படுத்தும் தன்மையுள்ளது. மூச்சு நன்கு வாங்கிவிட முடியவில்லையானால் அதைவிட வேறு என்ன வேண்டும்? எதிலும் அவர்களுக்கு விருப்பம்

ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்கு,

ஸ்ரீ ரா. கி. அவர்கள் மறைவுக்கு என் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னார் ஆத்மா சாந்தி யடைய "கல்கி" நீடூழி வாழ இசைத் தமிழ்த் தெய்வமாகிய ஸ்ரீ முருகப் பிரானை வேண்டிக் கொள்கிறேன்.

திருவிடைமருதூர் 31—12—54 நாதஸ்வரம், பி. எஸ். வீருசாமி பிள்ளை

இருக்காது. ஒரு மூச்சு நன்றாக வாங்கி விட முடியாதா என்று ஏங்குவார்கள்.

இந்த ஆஸ்துமாவானது ஹார்மோன் மருந்துகளால் அப்படியும் பூரண குணமாவதாயும் இல்லை. குணமாகாமல் இருப்பதற்குத் தக்க காரணமும் உண்டு. 'வேகஸ்' என்ற நரம்புச் சக்தியை இந்த ஹார்மோனால் ஊக்குவிக்க முடியாமல் இருப்பதினால்தான் ஆஸ்துமா பூரணமாய்க் குணமாவதில்லை. இதை ஊக்குவிக்க நமது ஆளுகைக்குள் கொண்டுவர மருந்தினாலும் ஹார்மோன்களினாலும் முடியாது என்று விஞ்ஞானிகளே ஒப்புக் கொள்ளுகின்றனர்.

ஆனால் யோக சிகிச்சை, முக்கியமாய் சில வித பிராணாயாமத்தினால் இதைக் கட்டுப் படுத்த முடியும். காற்றுக் குழாயின் ஆரம்பத்தில் சப்த ஜவ்வு இருக்கும். நாம் பேசினால், பாடினால் சப்தத்தை உண்டாக்கக் கூடிய சப்த ஜவ்வு திரையின் மூலம் காற்று உராய்ந்து சப்திக்கும்படி பிராணாயாமத்தில் பயிற்சி செய்யும்போது, எதற்கும் கட்டுப் படாத இந்த 'வேகஸ்' சக்தி ஊக்குவிக்கப் படுகிறது. இவ்வாறே தினசரி ஒரு சில நிமிஷங்கள் சில தடவைகள் பயின்று வந்தால் ஆஸ்துமா மாயமாய் மறைந்து விடுகிறது.

இவ்வளவு விஞ்ஞானம் முன்னேற்றமடைந்திருக்கிறது என்று சொல்லும் இந்தக் காலத்திலும் இந்த சூட்சுமத்தை அறிய முடியவில்லை. இவைகளை யெல்லாம் கருவிகளை வைத்தோ, கண்ணாடிக் குழாய்களை வைத்தோ, யந்திரங்களைக் கொண்டோ, அறுத்து ஆராய்ந்தோ பார்க்க முடிவதில்லை. யோக சக்தியால் யோகிகள்தான் அறிய வல்லார்கள்.

நினைத்த மாத்திரத்தில் நாம் நினைத்ததை யோகிகள் அறிகிறார்கள். அது எப்படி அறிய முடிகிறது என்று சோதனை செய்து சொல்ல முடியாது. ஒரு அறையில் அடைத்துப் பூட்டி விட்டாலும் அவர்கள் வெளியில் வந்து உலாவுவார்கள். குண்டு வைத்துச் சுட்டாலும் அவர்களைக் குண்டு ஒன்றும் செய்யாது. ஒரு சக்தி வாய்ந்த ரயில் எஞ்சினை நினைத்தால் நகரக்கூடச் செய்யாமல் நிறுத்தி விடுவார்கள். இவர்கள் ஸ்பரிசம் பட்டாலே நோய் பறந்து விடும் என்றால் இதற்கு மேல் எதுவும் சொல்ல வேண்டியதில்லை யல்லவா?

நமது அருட்பெருஞ் சோதி வள்ளலார் அவர்கள் செய்த அற்புதங்கள் எல்லோரும் அறிந்ததே. மரித்தவனை எழுப்பியதும், வியாதிகளைக் குணப் படுத்தியதும் ஒரு நூற்றாண்டுக்குள் நடந்த சம்பவம் அல்லவா? கடைசியில் அவர் தம் உடலை அணுக்களாய்ப் பிரித்தல்லவா நம்மிட மிருந்து மறைந்து விட்டார். ஏசு கிறிஸ்துவின் ஆடையைத் தொட்டதும் பெரும் நோய் நீங்கின ஸ்திரீயைப் பற்றி பைபிள் சொல்லுகிறது. முஸ்லிம் மதத்திலும் அநேக யோகிகள், பக்கிரிகள் இருந்திருக்கிறார்கள். விஷத்தை அமிர்தமாகப் பருகுவதும், தீப் பிழம்பை அல்லித் தண்டெனத் தழுவுவதும், காயும் எண்ணெயில் குளிர் ஸ்நானம் செய்வதும், தண்ணீரில் தெப்பமென மிதப்பதும், கூடு விட்டுக் கூடு பாய்வதும், சூட்சும சரீரத்துடன் மற்ற வேடங்களில் சஞ்சரித்து வருவதும், மற்றும் பல ஜாலங்களைச் செய்வதும் யோகிகளுக்குச் சிறு பிள்ளை விளையாட்டுகள் போன்றவை.


இவைகளெல்லாம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடத்தில் கண்ணாடிக் குப்பிகளின் மூலம் அடைத்து ஆராய முடியாதவை. ஸ்தூல ரூபமாய் இருப்பதைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்த முடியுமே தவிர சூட்சும ரூபத்தில் இருக்கக் கூடிய ஆன்மா, சக்தி, பஞ்ச பூதங்களின் நுட்ப ரகசியம் முதலியவைகளெல்லாம் ஆய்வுக் கூடத்தில் வைத்துப் பூரணமாய் அறிய முடியாது.

இவைகளெல்லாம் மிக மிகப் பெரிய விஷயம். நமது ஆயுள் பூராவும் அலைந்தாலும் அறிந்து கொள்ள முடியாது. இதற்காகப் பல பிறவிகள் எடுக்க வேண்டும்.

சாதாரண வாழ்க்கையில் ஆரோக்கியமாய் இருக்க—வந்த பிணிகளைப் போக்கச் சிறிதளவு, ஒரு அணுவளவு என்று சொல்லலாம்—யோகிகளின் அற்புத பிராணாயாமக் கலையின் ஒரு பகுதியை நாம் எடுத்துக் கொள்ளலாம். அதனால் ஆஸ்துமா மட்டுமல்ல, மற்றும் பல கடினமான நோய்கள் எல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடும் பிராணாவின் சக்தி அவ்வளவு மகிமை பொருந்தியது.

ஒரு பக்கம் பிராணாவின் மூலம் 'வேகஸ்' நரம்பின் சக்தியைத் தூண்டி விட்டுக் கொண்டு, மறு பக்கம் உடலில் வேலை செய்யாமல் சோம்பேறியாய் இருக்கக் கூடிய கோளங்களுக்குத் தகுந்த பயிற்சியை யோகாசனங்களின் மூலம் அளித்தால் ஆஸ்துமா, விலக யாரைக் கேட்க வேண்டும்?

அத்துடன் நில்லாமல், உணவு, ஸ்நானம் உடை, உபவாசம், ஒழுக்கம் முதலியனவும் அனுசரிக்க வேண்டும். எல்லா வயதினர்



கும்பகோணம் ஹோமியோபதி டாக்டர் ஸ்ரீ வி. ஆர். மூர்த்தி அவர்களின் ஹோமியோ மண்டபத்தில் டிஸம்பர் 26-ந் தேதி கல்கி திரு உருவப் படத் திறப்பு சிறந்த முறையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்குக் குடந்தை நகர சபைத் தலைவர் ஸ்ரீ குஞ்சிதபாதம் செட்டியார் தலைமை தாங்கினார். சர்க்கார் அதிகாரிகள், உபாத்தியாயர்கள், பொதுநல ஊழியர்கள், பிரமுகர்கள், பெண்மணிகள், எழுத்தாளர்கள் ஆகிய பலரும் திரளாக வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர். கல்கி அவர்களின் உருவப் படத்தைத் திரு பரீசதன் திறந்து வைத்தார். கல்கி அவர்களின் குண விசேஷங்களைக் குறித்து ஸ்ரீ பி. ஷண்முகம், ஸ்ரீ எம். கே. கந்தசாமி, ஸ்ரீ ஏ. ஷண்முகம், ஸ்ரீ எஸ். கே. சொக்கலிங்கம் செட்டியார் ஆகியோர் பேசினர். ஹோமியோ வைத்தியக் கழகத்தைச் சேர்ந்த ஸ்ரீ வீராசாமி நன்றி கூறினார். கல்கி அவர்களின் திரு உருவப் படம் திறக்கப் படுவதையும், உருவப்படத் திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய பிரமுகர்களையும், அதில் திரளாக வந்து குழுமியிருந்த ரஸிகர்களையும், இந்த நிகழ்ச்சிக்குக் காரணஸ்தரான ஹோமியோ டாக்டர் ஸ்ரீ வி. ஆர். மூர்த்தி அவர்கள் பேசுவதையும் மேலேயுள்ள படத்தில் காணலாம். ★ ★ ★

களுக்கும் ஒரே விதமான பயிற்சிகள் அளிக்க முடியாது. வயதுக்கும் பலத்துக்கும் தக்கபடி பயிற்சிகள் படிப்படியாய் அளிக்க வேண்டும். அதுவும் இலேசாய் ஆஸ்துமா இருக்கக் கூடியவர்களுக்கு ஒருவிதப் பயிற்சியும், அதிகமாய் இருக்கக் கூடியவர்களுக்கு வேறு விதமாகவும் நோயின் தன்மைக்கும் தகுந்தாற்போல் பயிற்சி ஏற்படும்.

இனி, ஆஸ்துமாக்காரர்கள் செய்யவேண்டிய மொத்த ஆசனங்களும் வெளி வரும். ஒவ்வொரு ஆசனத்தைப் பற்றிச் சொல்லும் போது அந்த ஆசனம் மற்றும் பல நோய்களைத் தீர்க்கக் கூடியதாய் இருந்தாலும் ஆஸ்துமாக்காரர்களுக்கு எந்த அளவு உபயோகமாய் இருக்கும் என்பதும் விளக்கப் படும். பிறகுதான் பிராணாயாமமாகிய மூச்சுப் பயிற்சிக்குப் போவோம். அதன் பின் உணவு முதலியன வரும். ஆகையால் அன்பர்கள் மிகுந்த கவனத்துடன் இவைகளைப் படித்து வர வேணும்.

இந்த ஆரோக்ய வாழ்வுக் கட்டுரைகளைப் படிக்கும் அன்பர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவரவர்களே சுலபமாய் ஆஸ்துமாவைப் போக்கிக் கொண்டு சுகமாய் ஆரோக்கியமாய் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எவ்வளவு தெளிவாய் மனத்தில் சுலபமாய்ப் பதியும் வண்ணம் எழுத முடியுமோ அவ்வாறு எழுத முயற்சிக்கிறேன். இதில் ஒளிவு மறைவு இரகசியம் என்பது ஒன்றுமே இருக்கக் கூடாது என்பதே நோக்கம். மக்கள் பயன் அடைவது ஒன்றே குறி. இந்த யோகக் கலை உலகம் முழுவதும் பரவ வேண்டும். முக்கியமாய் நமது தமிழ் மக்கள் பயனடைய வேண்டும் என்பதே என் ஆசை. அதில் நான் ஒரு சிறிதளவாவது வெற்றி அடைவேனானால் அதுவே எனக்குப் பரம திருப்தி. (தொடரும்)



காசு மாலை

ராணி

"என்ன பத்தரே! அந்தக் காசு மாலையைச் செய்து விட்டீர்களா! அம்மா வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்கள். நாளைக்காலை அக்கா ஊருக்குப் போக வேண்டுமே!" என்று கண்ணுசாமிப் பத்தரிடம் வந்து மேல் மூச்சு வாங்கக் கேட்டான் சிறுமி ஜயா.

"காசு மாலையை எடுத்துக் கொண்டு நானும் உன்னுடனேயே வருகிறேன்" என்று சொல்லி எழுந்தார் பத்தர்.

"அம்மா! இதோ பத்தர் வந்து விட்டார்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் சிறுமி ஜயா.

மகளின் குரலைக் கேட்டு முன் கட்டுக்கு வந்த பார்வதியம்மாள், "என்ன பத்தரே! இப்படி நாளைக் கடத்தி விட்டீர்களே! குழந்தை நாளைக் காலையில் மாப்பிள்ளை வீட்டுக்குப் புறப்பட வேண்டுமே!" என்றாள்.

அவள் முகத்தில் கவலைக்குறி படர்ந்திருந்தது.

"இதோ! கையுடன் கொண்டு வந்து விட்டேன், அம்மா" என்று சொல்லிக் கொண்டே காசு மாலையை எடுத்துப் பார்வதியம்மாளின் கையில் கொடுத்தார் கண்ணுசாமிப் பத்தர்.

உள்ளிருந்து அங்கு வந்த சரோஜா, அம்மாவின் கையிலிருந்த காசுமாலையை வாங்கிப் பார்த்து, "மிகவும் நன்றாக அமைந்து விட்டதே!" என்றாள் குதூகலத்துடன்.

"ஆம்! எல்லாம் நம் பத்தரின் கைத்திறன் தான். இந்தாருங்கள், பத்தரே! இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கொண்டே இரண்டு ரூபாய் நோட்டை அவரிடம் நீட்டினாள் பார்வதியம்மாள்.

"வேண்டாம் அம்மா! நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். இதற்கெல்லாமா உங்களிடம் நான் கூலி வாங்குவது. நான் சாப்பிடுவதே உங்கள் தருமம்தானே!" என்றார் கண்ணுசாமிப் பத்தர் குரல் தழுதழுக்க.

"இல்லை, பத்தரே! நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. ஏதோ எங்களால் முடிந்ததைச் செய்கிறோம். அவசியம் நீங்கள் இதைப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தற்போதைய நிலை, இதைத் தவிர மேற்கொண்டு செய்யச் சக்தியற்றவர்களாய் இருக்கிறோம்" என்றாள் பார்வதி.

"நீங்கள் தவறாக நினைத்து விடக் கூடாது. உங்களுக்காக உழைக்க நான் கடமைப்பட்டவன். குழந்தைக்கு இந்த உதவியாவது செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் சந்தோஷப் படுகிறேன். உங்கள் மனம் புண்படக் கூடாதே என்பதற்காக இதை நான் பெற்றுக் கொள்ளுகிறேன்" என்று கூறிக்கொண்டே பார்வதியிடமிருந்து அந்த இரண்டு ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டு விடைபெற்றுச் சென்றார் பத்தர்.

பத்தர் ஆழ்ந்த சிந்தனையில் நடந்து கொண்டிருந்தார். அவரது கால்கள் அவரைக் காவேரி ஆற்றங் கரைக்கு இழுத்துச் சென்றன. குளிர்ந்த காற்று அவரது மனத்துக்கு இதமாக இருந்தது. அப்படியே மணலில் உட்கார்ந்தார். அவரது சிந்தனை அவரைப் பின்னுக்கு இழுத்துச் சென்றது.

* * *

அந்த வட்டாரத்தில் கண்ணுசாமிப் பத்தரைத் தெரியாதவர்கள் இருந்திருக்க முடியாது. நாணயத்திலும், குறித்த காலத்தில் ஏற்றுக் கொண்ட வேலையை முடித்துக் கொடுப்பதிலும் அவருக்கு நிகர் அவர்தான்.

பிரபல 'கஜலக்ஷ்மி' பஸ் சர்வீஸ் அதிபர் பசுபதி முதலியாரின் மகள் சரோஜாவுக்கு விவாகம்

கூடியதும், பெண் வீட்டாரின் நகைகளைச் செய்வதற்குக் கண்ணுசாமிப் பத்தர் அழைக்கப்பட்டாரென்றால், அதில் ஆச்சரியமென்ன விருக்கிறது!

"இதோ பாருங்கள், பத்தரே! இந்தப் பெட்டியில் பழங்காலத்து நகைகள் இருக்கின்றன. அவைகளை அழித்து இன்னும் புதிய பவுன்கள் வாங்கி நகைகளைச் செய்து விடுங்கள்" என்றாள் பசுபதி முதலியாரின் மனைவி பார்வதி அம்மாள்.

கண்ணுசாமிப் பத்தர் பெட்டியிலிருந்த நகைகளை எடுத்துக்கொண்டு கையில் வைத்திருந்த தராசில் நிறுக்கத் தொடங்கினர். அதைக் கண்ட பார்வதியம்மாள், "வேண்டாம் பத்தரே! எதையும் எடை போடத் தேவையில்லை. நாணயத்தில் பெயர் பெற்ற நீங்களா இந்த அற்பக் காசுக்கு ஆசை வைக்கப் போகிறீர்கள்! அப்படித்தான் நீங்கள் இதில் கொஞ்சம் சாப்பிடுவதானலும் நாங்கள் என்ன குறைந்து விடப் போகிறோம்! இந்தாருங்கள், இந்த ரூபாய் ஆயாயிரத்தையும் வைத்துக் கொண்டு உங்களுக்குத் திருப்தியான வகையில் நகைகளை அமைத்துக் கொடுத்து விடுங்கள்" என்று பெருமிதத்துடன் கூறினள்.

பார்வதி அம்மாளின் வெள்ளை யுள்ளத்தைப் பார்த்து, "இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே!" என்று கண்ணுசாமிப் பத்தர் மனம் மகிழ்ந்தார்.

வீட்டை அடைந்தவர் கைப் பெட்டியிலிருந்த பழைய நகைகளைச் சோதிப்பதில் மூழ்ந்தார். அதிலிருந்த ஒரு காசுமாலை அவர் கவனத்தைக் கவர்ந்தது. அதைக் கையில் வைத்துப் பரிசோதனைக் கல்லில் உரைத்துக் கொண்டிருக்கும் போது அவர் மனைவி பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

"என்ன! நம் பெண்ணின் விஷயம் கவனம் இருக்கிறதா! ஆறு பவுனில் சங்கிலி செய்து போட்டாலொழியப் பெண்ணை அழைத்துக் கொள்ள முடியாதென்று மாப்பிள்ளை எழுதியிருக்கிறார்" என்று கூறிக் கொண்டே ஒரு கடிதத்தை அவரிடம் நீட்டினள் பத்தரின் மனைவி.

கடிதத்தை மௌனமாய்ப் படித்து முடித்தார் பத்தர். "ஆமாம். எவ்வளவு செய்தாலும்தான் திருப்தி ஏற்படாது. இங்கு என்ன கொட்டியா வைத்திருக்கிறது! கலியாணத்தின் போதுதான் அவர்கள் கேட்டதற்கு மேலேயே செய்து போட்டு விட்டோமே!" என்றார் மனதில் விரக்தியுடன்.

"இப்படிப் பேசிவிட்டால் ஆகிவிட்டதா! ஆக வேண்டிய காரியத்தைப் பார்க்க வேண்டாமா!"

"என்ன ஆக வேண்டிய காரியம்! கையில் இருந்தவற்றையெல்லாம்தான் அவள் கல்யாணத்தில் இறைத்தாய் விட்டதே!"

பத்தரின் மனைவி பதில் ஒன்றும் சொல்லாமல் முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு உள்ளே போனாள்.

அவள் உள்ளே சென்றதும் அந்தக்காசுமாலையை எடுத்துத் தனியே தம் கைப்பெட்டியில் வைத்துக் கொண்டு தம் வேலையில் மூழ்ந்தார் பத்தர்.

நாட்கள் உருண்டு சென்றன. பசுபதி முதலியார் வீட்டுக் கலியாணம் ஏக தடபுடலாக நடந்தது. மணப் பெண் சரோஜா அணிந்திருந்த நகைகளே அந்தத் திருமணத்தில் எடுத்துக் காட்டாக இருந்தன. நகைகள் செய்து கொடுத்து, அந்தக் கலியாணத்தைச் சிறப்பிக்கச் செய்த கண்ணுசாமிப் பத்தரை எல்லோரும் வாயாரப் புகழ்ந்தார்கள். அவரைப் புகழ்ஏணியின் உச்சிக்கே ஏற்றி விட்டு விட்டார்கள், அங்கு கூடியிருந்தவர்கள். ஆனால் கண்ணுசாமிப் பத்தரின் மனமோ எதிலும் பற்றில்லாமல் சலன மடைந்திருந்தது.

★

சரோஜாவின் திருமணம் நடந்த ஒரு வாரத்துக்குப் பிறகு கண்ணுசாமிப் பத்தர் எவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தம் சம்பந்தி ஊருக்குப் புறப்பட்டார். சம்பந்தி வீட்டை அடைந்த



அவரை வாசலிலேயே வரவேற்ற சம்பந்தியம்மாள், "என் மகன் ஏதோ கடிதம் எழுதியிருந்தானாமே! அதன்படி சங்கிலி செய்து முடித்து விட்டீர்களா! அந்தச் சங்கிலி யில்லையானல் அவன் அவளுடன் வாழ முடியாதாம்" என்று கொடூரமாகச் சொன்னாள்.

"மாப்பிள்ளையின் கடிதம் வந்தது. ஆனால் என்னுடைய தற்போதைய நிலைமை மிகவும் நெருக்கடியில் இருக்கிறது. மாப்பிள்ளையைப் பார்த்துச் சொல்லிக் கொண்டு போகலாமென்று தான் வந்தேன்......" என்று மென்று விழுங்கினர்.

"உங்கள் ஊரில் நடந்த கல்யாணத்தில் நகை செய்து கொடுத்ததற்கு உங்களுக்கு நிறையப் பணம் கொடுத்தார்களாமே! உங்கள் மகள் நன்மைக்காக மாப்பிள்ளையின் விருப்பப்படி இந்த அற்பச் சங்கிலி கூடச் செய்ய முடியாதா, என்ன!"

"அந்தப் பணம் வந்தது மெய்தான். ஆனால் அந்தப் பணத்துக்காகப் போட்டி யிட்டு நின்ற


கடன்காரர்களின் எண்ணிக்கையைப் பற்றி நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்" என்றார், மனம் குன்றி நம்பிக்கை யிழந்தவராய்.

"இதோ பாருங்கள்! நகையுடன் வேண்டுமானால் பெண்ணையும் அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள்" என்றாள் சம்பந்தி யம்மாள்.

கண்ணுசாமிப் பத்தர் அசைவற்று நின்று விட்டார். சம்பந்தியம்மாள் பேச்சு அவரைத் திக்பிரமை யடையச் செய்தது. உடைந்த உள்ளத்துடன் தம் வீட்டை அடைந்தார் பத்தர்.

★

வீட்டை அடைந்ததும் தம் இடத்தில் அமர்ந்தார். அவரது பார்வை தம் எதிரில் உள்ள திறந்த அறையினுள் சென்று லயித்தது. அவர் பெண் காந்தா கண்களைக் கசக்கிக்கொண்டு படுத்திருந்தாள். தந்தை மனம் அதைக் கண்டு



பொறுக்கவில்லை. "காந்தா!" என்று தம் மகளை அன்புடன் அழைத்தார்.

தந்தையின் குரல் கேட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவர் அருகே வந்தாள் காந்தா. இருவரும் சிறிது நேரம் ஒன்றும் பேசத் தோன்றாதவர்களாய் இருந்தார்கள். பத்தர் சிறிது தெளிவு பெற்று, "காந்தா! நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே. உன்னை உன் கணவரிடம் சேர்ப்பது என் பொறுப்பு. இன்னும் ஒரு வாரத்தில் உனக்கு ஒரு வித குறையுமில்லாமல் உன்னை நானே அழைத்துச் செல்கிறேன்" என்றார் மிகவும் குழைவுடன்.

தந்தையின் வார்த்தைகளைக் கேட்ட காந்தாவின் துக்கமெல்லாம் எங்கோ ஓடி மறைந்து விட்டது. துள்ளிக் குதித்துக் கொண்டு எழுந்து உள்ளே ஓடினாள். அவள் குதூகலத்தைக் கண்ட பத்தரும் தம் கவலையை ஒரு கணம் மறந்தவராய் அப்படியே உட்கார்ந்து விட்டார். தம் மகளின் அறியாமையைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்று அறியக் கூடாமல் யோசித்துக் கொண்டே ஒரு முடிவுக்கு வந்தவராய் தம் கைப் பெட்டியைத் திறந்தார்.

மூன் அதில் வைத்த காசு மாலையை எடுத்து அதை ஆறு பவுன் சங்கிலியாக மாற்றுவதில் தம் முழுக் கவனத்தையும் செலுத்தினார்.

ஒரு வாரத்தில் அந்தக் காசு மாலை ஒரு அழகான தங்கச் சங்கிலியாக மின்னியது. மகளுடன் புறப்பட்டு விட்டார் சம்பந்தி வீட்டுக்கு.

தம் மருமகளை ஆறு பவுன் சங்கிலியுடன் கண்ட சம்பந்தியம்மாள் அப்படியே பூரித்துப் போனாள். அவள் வாயெல்லாம் பல்லாகக் காட்சி யளித்தது. கண்ணுசாமிப் பத்தருக்குச் சம்பந்தி வீட்டில் உபசாரம் தடபுடலாக நடந்தது.

★

சரோஜாவின் திருமணம் நடந்து ஒரு வருடம் ஓடி மறைந்து விட்டது. அவள் கணவன் சந்திரன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்ததால் அவன் படிப்பு முடியும் வரை அவளைப் பிறந்தகத்திலேயே விட்டு வைத்திருந்தார்கள் சம்பந்தி வீட்டார்.

பசுபதி முதலியாரின் 'கஜலக்ஷ்மி' சர்வீஸ் எவ்வளவு முன்னேறியதோ அதைவிட வேகமாக முன்னேறியது அவர் கடன். சர்வீஸ் வேகமாகவே நடந்து வந்ததால் முதலியார் கவலையே இல்லாமல் கடன் வாங்கிக் கொண்டிருந்தார்!

பசுபதி முதலியார் அன்று காலை வந்த தினசரி பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தவர் அதில் பிரசுரமாயிருந்த ஓர் செய்தியைக் கண்டு திடுக்கிட்டு அப்படியே நாற்காலியில் சாய்ந்து விட்டார். அவர் பணம் போட்டிருந்த 'சந்திரகலா' பாங்க் பொருளாதார நெருக்கடி காரணத்தால் திடீரென திவாலாகி விட்டது என்ற செய்தியே அன்று பிரசுரமாகி யிருந்தது.

அதே சமயம் அவ்விடம் வந்த கருணாகர முதலியார் பசுபதி முதலியாரின் நிலையைக் கண்டு விஷயத்தை யூகித்துக் கொண்டவராய் அவருக்குவேண்டிய சமாதானங்கள் சொல்லி அவரைத் தேற்றி விட்டு விடைபெற்றுச் சென்றார். பசுபதி முதலியாருக்குக் கருணாகரர் ஐயாயிரம் ரூபாய் கடன் கொடுத்திருந்தார்.

அதிலிருந்து கருணாகரரைப் போல் எத்தனையோ நபர்கள், அவருக்குக் கடன் கொடுத்தவர்கள், அவரைக் கண்டு தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துச் சென்று கொண்டிருந்தனர்.

நண்பர்களின் பெருந் தன்மையைக் கண்ட பசுபதி முதலியார் அவர்களுக்கு மனக் கசப்பு ஏற்படுவதற்குள்ளாகவே அவர்களின் கடன்களைத் தீர்த்துவிட எண்ணி 'கஜலக்ஷ்மி' சர்வீசையே விற்று, கடன்களை அடைத்து விட்டுத் தனி மனிதனாகக் குடும்பத்தைக் காப்பாற்ற வகை தெரியாது வெறுங் கையுடன் நின்றார்.

அந்த வருடம் மாப்பிள்ளைக்குப் படிப்பு முடிவதால் பெண்ணுக்கு ஒரு காசுமாலை போட்டுப்

ஜெயப்பிரகாசரும் கல்கியும்

டி. எஸ். சீனிவாச சாஸ்திரி

ஸ்ரீ ஜெயப்பிரகாசர் தமிழ் நாட்டில், பூதான யக்ஞத்துக்காகச் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுப் புனா வந்து சேர்ந்தார். புனாவில் அவர் இயற்கை வைத்திய சாலையில் தங்கி இருந்தார். அப்பொழுது ராவ்ஸாஹெப் பட்ட வர்த்தன் என்னிடம் வந்து, "ஸ்ரீ ஜெயப் பிரகாசர் உங்களைப் பார்க்க விரும்புகின்றார். உடனே புறப்படுங்கள்" என்று அழைத்தார். நானும் உடனே அவருடன் இயற்கை வைத்தியசாலைக்குச் சென்றேன். அவர் என்னிடம், தமிழ் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தைக் குறிப்பிடும் போது, ஸ்ரீ கல்கி அவர்களை மனமாரப் புகழ்ந்தார். "ஒவ்வொரு ஜன நாயக தேசத்திலும், அரசாங்கத்தைச் சரிவர நடத்துவதற்கு இரண்டு ஸ்தாபனங்கள் தேவை. அந்த இரண்டு ஸ்தாபனங்களும், மாறி மாறி அரசாங்கம் நடத்தவும், பரஸ்பரம் குற்றம் குறைகளைத் தெரிவிக்கவும் உரிமை கொண்டதாக அமைய வேண்டும். அப்படி இல்லாவிடில், இப்பொழுது இருக்கும் தலைவர்கள் சரிவர அரசாங்கத்தை நடத்தினாலும், காலக்கிரமத்தில் அந்த ஸ்தாபனம் ஒரு சர்வாதிகார பீடமாகி மக்களுக்குக் கொடுமையை விளைவிக்கக் கூடும். இந்த உண்மையை நன்கு அறிந்து கொண்ட ஸ்ரீ கல்கி அவர்கள் சோஷலிஸத்தை எழுத்து மூலமும், செய்கை மூலமும் முழு மனத்துடன் ஆதரிக்கின்றார்கள். அவர் ஒரு பெரிய தீர்க்கதரிசி" என்றார்.

பின்னை வீட்டுக்கு அனுப்பி வைப்பதாக அவர் வாக்குக் கொடுத்திருந்தார். இவ்வளவு கேவலமான ஓர் நிலைக்குத் தாம் வரக் கூடுமென்று அவர் நினைத்திருப்பாரா? இப்போது மகன் கவலையும் கூடச் சேர்ந்து கொள்ள அவர் படுத்த படுக்கையாகி விட்டார். அதே நிலையில் பசுபதி முதலியார் ஒரு மாதம் கிடந்து விட்டுக் கண்ணையும் மூடி விட்டார்.

பசுபதி முதலியார் காலமாகவும் சரோஜாவின் பிறந்தக இருப்பு மேலும் நீடித்துக் கொண்டு வந்தது. கவலையே உருவாக முன்கூடத்தில் சிந்தனையில் மூழ்கியிருந்த அவளைத் 'தபால்' என்ற குரல் இவ்வுலகுக்கு இழுத்து வந்தது.

எழுந்து சென்று தபால் சேவகர் கொடுத்துப் போன கடிதத்தை வாங்கிப் பிரித்தாள். அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அவள் கணவன் சந்திரன் எழுதியிருந்தான்.

அன்புள்ள சரோஜாவுக்கு,

அனேக ஆசீர்வாதம். என்னுடைய கடிதம் உனக்கு மிகவும் அதிர்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். இல்லையா? மாமாவின் ஈமக்கிரியைகளுக்கு நான் வரக் கூடாமற் போய் விட்டது. காரணம் உனக்குத் தெரிந்திருக்கும். நமது குடும்பத்தில் இடையே ஏற்பட்டு விட்ட உயர்வு தாழ்வு மனப்பான்மையேதான் காரணம்.

திருமணத்தின்போது உனக்குச் செய்யப்பட்ட சீர் வரிசைகளே ஏராளம். நான் சற்றும் எதிர்பார்க்காதது. அவ்வளவு செய்திருந்தும் உன் தந்தை உன்னை இங்கு அனுப்பி வைக்கும்போது போடுவதாகச் சொன்ன ஒரு காசு மாலை எனக்கு அதிகமாகவே பட்டது. அதற்குத் தகுந்தாற் போல் உன் குடும்பம் நொடிக்கவும் என் குடும்பம் ஓங்கவும் காலம் மாறி விட்டது. ஆதலால் வரும் மருமகள், வீட்டுக்கு வரும்போது மேற்கொண்டு ஏதேனும் கொண்டு வந்தால்தான் தங்கள் கௌரவத்துக்குத் தகுதியாக இருக்குமென்று என் தாயார் நினைக்கிறார்கள். அம்மாளிடம் சொல்லி ஒரு 'கவரிங் காசு மாலை'யாவது செய்து போட்டுக்கொண்டு இங்கு வந்து சேர்ந்து விடு. பிறகு இங்கு நான் பார்த்துக் கொள்கிறேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே.

—சந்திரன்.

கடிதத்தைப் படித்து முடித்த சரோஜாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

முன் கூடத்துக்குத் தற்செயலாக வந்த பார்வதியம்மாள் தன் பெண் ஓர் கடிதத்துடன் உட்கார்ந்திருப்பதைக் கண்டு "என்னம்மா கடிதம். யாரிடமிருந்து வந்திருக்கிறது!" என்று கேட்டுக் கொண்டே அவளருகில் வந்தாள்.

சரோஜா அவளுக்குப் பதிலொன்றும் கூறாமல் மௌனமாகச் சிரித்துக் கொண்டு அந்தக் கடிதத்தைத் தன் தாயார் கையில் கொடுத்து விட்டு உள்ளே ஓடி மறைந்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்த பார்வதி அம்மாள் ஆனந்தம் பொங்கி எழத் தன் சிறிய பெண் ஜயாவை அழைத்து உடனே கண்ணுசாமிப் பத்தரை அழைத்து வரும்படி அனுப்பினாள்.

கண்ணுசாமிப் பத்தர் வந்ததும் பார்வதி அம்மாள் அவரிடம் மாப்பிள்ளையின் கடிதத்தைக் கொடுத்துத் தன் கழுத்தில் இருந்த இரட்டை வடம் சங்கிலியையும் கழட்டிக் கொடுத்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்த கண்ணுசாமிப் பத்தரின் கண்கள் கலங்கின. பசுபதி முதலியாரின் மருமகனையும் தம்முடைய மருமகனையும் ஒன்று சேர்த்து, தம் மனத் தராசால் எடை போட்டுப் பார்க்கவும் அவருடைய வினையே அவரைச் சுடுவதுபோல் உணர்ந்தார்.


பிறகு ஒருவாறு தம்மைச் சமாளித்துக்கொண்டு, "அம்மா! தங்கள் மனம் போல் தங்களுக்கு மருமகன் கிடைத்திருக்கிறார். ஆனால் என் மருமகனோ, ஆறு பவுனில் சங்கிலி செய்து போட்டாலொழிய என் பெண்ணைத் தன்னிடம் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டான். அவன் கேட்டபடியே சங்கிலி செய்து போட்டு அழைத்துக் கொண்டு போய் விட்டு வந்தேன். அப்படியும் அவளை வாழ விட்டானா! கட்டிய மனைவியை மறந்து தகாத வழியில் ஈடுபட்டுத் திரிந்தான். இதைக் கேட்டதற்காக என் மகளிடம் இருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு அவளைப் பிறந்தகம் விரட்டி விட்டான். இப்போது அவள் வாழாவெட்டியாக இங்குதான் இருக்கிறாள்" என்று படபடவென்று பேசி முடித்தார்.

பத்தரின் ஆவேசமான வார்த்தைகளைக் கேட்ட பார்வதியம்மாள் அவரைத் தேற்றும் பாவனையில், "நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள், பத்தரே! எல்லாம் நன்மையாக முடியும். காசுமாலை மட்டும் காலம் கடத்தாமல், எப்படியாவது மாப்பிள்ளை குறிப்பிட்டது போல், முடித்துக் கொடுத்து விடுங்கள்" என்றாள் கலக்கத்துடன்.

"சரி அம்மா! அடுத்த வாரத்திலேயே கொடுத்து விடுகிறேன். உங்கள் குழந்தைக்கு எந்தவிதமான குறையும் கடவுள் வைக்க மாட்டார்" என்று பார்வதியம்மாளுக்குத் தேறுதல் சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினார் கண்ணுசாமிப் பத்தர்.

பினகா பற்பசை

ஏன் உபயோகிக்க வேண்டும்?



வாய் ஓர் மலரும்

சோபையைப் பெற்று

பற்கள்  வெண்மையை அடைந்து



போன்ற உறுதியைப்

பெறுவதற்காகத்தான்!

நீங்களும் உங்கள் குழந்தைமார்களும்

அதன்  நறுமணத்தையும்

பற்களுக்கு அளிக்கும் போஷாக்கையும்

பெரிதும் விரும்புவீர்கள்.

பினகா ரோஸ் அல்லது 'பினகா கிரீன்' க்ளோ
ரோபில் சேர்ந்த பற்பசைகளை உபயோகியுங்கள்.

BINACA

சிபாவின் உன்னத பற்பசை.

ஒவ்வொரு ட்யூப் பினகா பற்பசையுடனும், நாற்காலிகள், சோபாக்கள், கண்ணாடிகள், சுவர்கள் இவைகளை அலங்கரிப்பதற்கான மனோரம்யமான ஒரு ஒட்டும் கலர் சித்திரம் அடங்கியுள்ளது.

"மாமா......!"

காவேரிக் கரையில் தம்மை மறந்த மோன நிலையில் உட்கார்ந்திருந்த கண்ணுசாமிப் பத்தர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. "ஹா, மாப்பிள்ளை! நீங்களா!" என்றார்.

"ஆமாம்! நான்தான். ஊரிலிருந்து இப்போது தான் வந்தேன்" என்றான் மாப்பிள்ளை ஷண்முகம்.

"வாருங்கள் மாப்பிள்ளை! வீட்டுக்குப் போகலாம். இப்போதாவது உங்களுக்கு எங்கள்மீது கருணை பிறந்ததே!" என்றார் பத்தர்.

"என்னை மன்னித்து விடுங்கள், மாமா. நான் உங்கள் குடும்பத்துக்கே பெரிய தீங்கு இழைத்து விட்டேன். என் பொருள் எல்லாவற்றையும் இழந்து அனாதரவாக நிற்கிறேன். காந்தாவுக்குப் பிராயச்சித்தமாக என்னால் என்னதான் செய்ய முடியுமோ!" என்றான் ஷண்முகம்.

"வாருங்கள், மாப்பிள்ளை! பேசிக் கொண்டே நடப்போம். நான் செய்த துரோகம்தான் நம் குடும்பத்தை இப்படியெல்லாம் ஆட்டி வைத்தது. அந்தத் துரோகத்துக்குப் பிராயச்சித்தத்தை இப்பொழுதுதான் செய்து விட்டு வந்து இங்கு உட்கார்ந்தேன். மனத்துக்கும் அமைதி ஏற்பட்டது. நான் என் தவற்றைத் திருத்திக்கொண்டதும் என் குலம் விளங்க, உங்களையும் இங்கு தெய்வம் அனுப்பி வைத்திருக்கிறது" என்றார் பத்தர் ஆனந்தம் பொங்க.

ஷண்முகம் பேச வகையறியாது அவர் பின்னே மௌனமாக நடந்தான்.

வாசலில் தந்தையுடன் தன் கணவனையும் கண்ட காந்தாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. வந்தவனை வரவேற்கவும் தோன்றாமல் பின் கட்டுக்குத் தன் தாயாரிடம் தெரிவிக்க உள்ளே ஓடினாள்.

கண்ணுசாமிப் பத்தரின் வீடு ஓரே குதூகலமாக மகிழ்ச்சியில் மூழ்கி இருந்தது.

மறுதினம் பத்தர் மன அமைதி பெற்றவராய் வெளி வாசலில் உட்கார்ந்திருந்தார். வாசலில் ஒரு வண்டி வந்து நிற்கவும் அதிலிருந்து சரோஜாவும் பார்வதியம்மாளும் கீழே இறங்கினார்கள்.

பத்தர் கைகூப்பிப் பார்வதியம்மாளை வரவேற்றார். அதற்குள் அவர் மனைவி, தம் பெண் காந்தாவுடனும் மருமகன் ஷண்முகத்துடன் அங்கு வந்து அவர்களை வரவேற்றாள்.

ஷண்முகத்தைப் பார்த்த பார்வதியம்மாள் ஆச்சரியத்துடன் பத்தரை நோக்கி, "என்ன பத்தரே! மாப்பிள்ளை வந்திருக்கிறார் என்று நேற்று வந்த நீங்கள் சொல்லவில்லையே!" என்றாள்.

"ஆமாம் அம்மா! ஆனால் நேற்று நான் தங்கள் வீட்டுக்கு வந்தபோது மாப்பிள்ளை இங்கு வரவில்லை. குழந்தையின் காசுமாலையைக் கொடுத்து விட்டுத் திரும்பிய போதுதான் மாப்பிள்ளை வந்தார்" என்றார் குரலில் ஆனந்தம் தொனிக்க.

"என்னமோ பத்தரே! எல்லாம் நன்மைக்குத் தான். இப்பொழுதுதான் குழந்தையை அவள் கணவன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறேன். உங்களிடம் சொல்லிக் கொண்டு போகலாமென்றுதான் இப்போது வந்தோம்" என்றாள் பார்வதியம்மாள்.

"உங்கள் நல்லெண்ணத்துக்குக் குழந்தைக்கு யாதொரு குறையும் வராது" என்றார் பத்தர்.

"ரயிலுக்கு நேரமாகிறது" என்று கூறி எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள் பார்வதியம்மாள். சரோஜாவும் பத்தரின் நல்லாசியைப் பெற்றுக்கொண்டு தாயார் பின்னே வண்டியில் ஏறினாள். வண்டியும் நகர்ந்தது.

எல்லோரும் முன்னே செல்லும் வண்டியையே உன்மத்தம் பிடித்தவர்கள் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பத்தரின் மனம் என்றும் காணாத சாந்தியைப் பெற்றது.

★

சரோஜா கணவன் வீடு வந்து ஒரு வாரம் சென்றது. அன்று இரவு சரோஜா வெற்றிலை மடித்துக் கொடுக்கவும் சந்திரன் அதை வாங்கிப் போட்டுக் கொண்டே, "என்ன சரோஜா! எத்தனை நாட்கள் தான் இந்தக் காசு மாலை விஷயத்தை நாம் மறைத்து வைக்க முடியும்! திடீரென்று ஒரு நாள் அது தன் சொரூபத்தைக் காட்டி விட்டால் அவமானமாயிற்றே!" என்றான் கிண்டலாக.

"ஆமாம். அதுதான் நானும் பயந்து கொண்டிருக்கிறேன். என்ன செய்வதென்றே தெரியவில்லையே!" என்றாள் சரோஜா, கைகளைப் பிசைந்துகொண்டே. அவள் கண்கள் கலங்கின.

அவள் கலக்கத்தைக் கண்ட அவன் சிரித்தான். "அடி அசடே! இதற்காகவா கலங்குவார்கள்! நான்தான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வதாக உனக்கு எழுதியிருந்தேனே! நாளைக் காலை நாம் இருவருமே காசுக் கடைக்குச் சென்று இந்த மாலையைக் கொடுத்து விட்டு இது போலவே நல்ல பவுனில் செய்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டு வந்து விடுவோம். பிறகு மாதா மாதம் எனக்குக் கொடுக்கும் பணத்தில் செலவைக் கட்டுப் படுத்திக் கொண்டு கடனை அடைத்து விட்டால் போகிறது" என்றான் அலட்சியமாக.

மறு நாள் பொழுது விடிந்தது. பகல் சுமார் பத்து மணிக்கு இருவரும் கடைத் தெருவுக்குப் புறப்பட்டார்கள். சரோஜா காசு மாலையை மறக்காமல் எடுத்து வைத்துக் கொண்டாள்.

அவர்கள் வீட்டு வாசற்படியை விட்டுக் கீழே இறங்கவும் அவர்களிடம் தபால் சேவகர் ஒரு கவரை நீட்டவும் சரியாக இருந்தது.

சரோஜா ஆவலுடன் கவரைப் பிரித்தாள்.

"அன்புள்ள சரோஜாவுக்கு.

அநேக ஆசீர்வாதம். இந்தக் கடிதம் உனக்கும், என் மருமகப் பிள்ளைக்கும் மிக்க ஆச்சரியத்தைக் கொடுக்கும். கண்ணுசாமிப் பத்தர் நம் ஊரில் இல்லை. குடும்பத்துடன் தம் கிராமத்துக்குச் சென்று விட்டார். நேற்று அவரிடமிருந்து கடிதம் வந்தது. பாவம்! நாணயஸ்தர். மானத்துக்கு அஞ்சி அவர் சென்று விட்டார்.

உன் கலியாணத்தின்போது செய்யக் கொடுத்த பழைய நகைகளில் ஒரு காசு மாலையை அழித்துச் சங்கிலி செய்து போட்டுத் தம் மகளை அவள் கணவன் வீட்டுக்கு அனுப்பி வைத்தாராம். அதன் பலனை அனுபவித்து விட்டதாக அவர் எழுதியிருக்கிறார். நம் நகையை அவர் எடுத்துக் கொண்டதிலிருந்தே அவருடைய குடும்பத்துக்குத் துன்பங்கள் ஏற்பட்டதாம். மகள் வாழாவெட்டியாகப் பிறந்தகம் வந்து விட்டாள். அதனால் அவர் மனமுடைந்து போனார். பிறகு உன்னை உன் கணவன் வீட்டுக்கு அனுப்ப, மாப்பிள்ளை எழுதியபடி கவரிங் காசுமாலை செய்யச் சொன்னபோது அவர் விழித்துக் கொண்டார். தாம் செய்த துரோகத்துக்குப் பிராயச்சித்தமாக நல்ல பவுனில் காசு மாலை செய்து கொடுத்திருக்கிறார். வீட்டை அடமானத்துக்கு வைத்துப் பணம் வாங்கி நல்ல பவுனில் காசு மாலை செய்து நம்மிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். நீ போட்டிருக்கும் காசு மாலை அது தான். எல்லாம் சுத்தப் பவுன். மாப்பிள்ளைக்கு என் ஆசிகள்.

பார்வதியம்மாள்"

கடிதத்தைப் படித்து முடித்த சரோஜா அப்படியே அயர்ந்து நின்று விட்டாள்!

★★★



தாஸப்பிரகாஷ் திறப்புவிழா

சென்னை நகருக்கு வருகிறவர்கள் இனிக் கவலைப்பட வேண்டாம். அவர்களை எல்லாவித உபசாரங்களுடன் வரவேற்று, தங்க வசதியளிக்க "தாஸப் பிரகாஷ்" ஹோட்டல், பூந்தமல்லி ஹைரோடில் கம்பீரமாக நிற்கிறது. இந்த ஹோட்டல் அதிபர் ஸ்ரீ சீதாராமராவ் ஏற்கெனவே சென்னை நகரில் 'மாடர்ன் கபே' ஹோட்டல் மூலம் பிரசித்தமானவர். இன்னும் பங்களூர், மைசூர், உதகமண்டலம், மங்களூர் ஆகிய ஊர்களிலும் அவருடைய ஹோட்டல்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. ஹோட்டல் தொழிலில் நிபுணரான அவர் எல்லாவித நவீன வசதிகளுடன் கூடிய நல்ல ஹோட்டல் ஒன்றை நடத்த விரும்பி 'தாஸப் பிரகாஷ்' என்ற ஹோட்டலை இப்பொழுது நிர்மாணித்திருக்கிறார். இந்த ஹோட்டலை டிசம்பர் 27-உ அன்று மைசூர் ராஜப் பிரமுகர் ஸ்ரீ ஜய சாமராஜ உடையார் பகதூர் அவர்களைக் கொண்டு திறந்து வைக்கச் செய்து பெரிய திருவிழாவாகவே நடத்தி விட்டார். மேற்படி ஹோட்டல் திறப்பு விழாக் காட்சிகளை இந்தப் பக்கத்தில் காணலாம். ★ ★ ★ ★

போட்டோ: எம். டி. கணேஷ்.

அபூர்வ எழுத்தாளர்

எம். எல். சபரிராஜன்

மூன்றடியால் உலகை அளந்தார் திருமால். ஆசிரியர் "கல்கி" அவர்கள் தம் மூன்று எழுத்துக்களால் தமிழகத்தை மட்டுமல்லாமல், தமிழ் வழங்கப்படும் எல்லாப் பகுதிகளையும் — கடல் கடந்த நாடுகளையுங்கூட ஆண்டார்.

ஒரு வருஷமா, இரண்டு வருஷமா !—மூப்பது வருஷம் ! வைத்த கிரீடத்தைக் கீழே இறக்கவே யில்லை,—கடைசி வரை ! — 'பூரணச் சந்திரன்' தான் ; சந்தேகமில்லை.

என்ன புகழ் ! என்ன செல்வாக்கு !—எத்தனை அரசியல் வாதிகள் அவரைக் கண்டு பயந்தார்கள் ! மந்திரிகள் கலங்கினார்கள் ! அதிகாரிகள் நடுங்கினார்கள் ! ஆக்கவும் அழிக்கவும் வல்லவரா யிருந்தார் அவர். இதுவரை எந்தத் தமிழ் எழுத்தாளரும் இத்தனை சக்தியுடன் விளங்கியதில்லை.

தஞ்சை ஜில்லாவில் எங்கோ ஒரு மூலையில் பிறந்த அவர், இத்தனை பெரும் புகழும் எப்படிப் பெற்றார் ! இதற்குக் காரணம் என்ன !

'அதிர்ஷ்டம்' என்று அலட்சியமாய்ச் சொல்லிவிட முடியாது ; 'மேதை' என்று சொல்லி எளிதாய்த் தட்டிக் கழித்துவிடவும் முடியாது.— அவர் பிறவி மேதை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அத்துடன் உழைப்பும் இருந்தது. இரண்டும் சேர்ந்ததால்தான் பிரகாசிக்க முடிந்தது.

"கல்கி" ஆசிரியர் அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை, எப்போதாவது யாராவது எழுதப் புகுந்தால், அவர் முதலாவது கீழ்க்கண்ட விதமாய்த்தான் ஆரம்பிக்க வேண்டியதா யிருக்கும்:—

"ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உழைப்பின் அவதாரம்." ஆம், இதுவே ரொம்பப் பொருத்தமா யிருக்கும். உழைப்பு என்றால் அவருக்கு அவ்வளவு ஆசை. சோம்பல் என்பது அவர் அகராதியில் கிடையாது. இதனால் தானோ என்னவோ, முன்பு அவர் 'தேனீ' என்று தமக்குப் புனைபெயர் வைத்துக் கொண்டிருந்தார்.

வெய்யிலென்றும் மழையென்றும் இரவென்றும் பகலென்றும் பாராது உழைப்பதுதான் அவருடைய தனிச் சிறப்பு.

அவருக்குக் கீழே வேலை செய்யக்கூடிய பாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவன்.

ஒருமுறை நான் நோய்வாய்ப் பட்டிருந்தேன். மலேரியா ஜுரம். ஒவ்வொரு வாரமும் நான் எழுத வேண்டியதா யிருந்த ஒரு குறிப்பிட்ட பகுதியை அந்த வாரம் எழுத முடியவில்லை. 'லீவு' போட்டு விட்டு, வீட்டில் இருந்து விட்டேன். இரண்டு நாள் கழித்து, உடம்பு குணமானதும், காரியாலயத்துக்குப் போனேன். அவர் என் உடலைப் பற்றி விசாரித்து விட்டு, "சாவதாயிருந்தாலுங்கூடச் செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டுத்தான் சாக வேண்டும்— தெரிந்ததா ?" என்றார்.

அன்று அவர் சொன்ன வார்த்தைகள்—"கடமையைச் செய்ய வேண்டும்" என்ற வார்த்தைகள், காற்புறமிருக்கும் இன்று என் காதுகளில் ஒலிக்கின்றன. "கடமையைச் செய்ய வேண்டும்" "கடமையைச் செய்ய வேண்டும்" "சாவதாயிருந்தாலும் கடமையைச் செய்து விட்டுத்தான் சாக வேண்டும்"—சொன்னபடியே அவர் செய்தார். கடைசி மூச்சு இருக்கும் வரை, அவர் எழுத வேண்டியவற்றை எழுதினார். அளவற்ற தம் மன வலிமையால் கடமையைச் செய்தார் !

மூப்பது வருஷம் அவர் கடமையைச் செய்தார்—உழைத்தார். எழுதி எழுதிக் குவித்தார். அப்படி எழுதியவை யெல்லாம் எப்படி இருந்தன ! —தங்கம் ! தங்கம் ! தங்கம் !!

என்ன அற்புதமான, அதிசயமான சக்தி படைத்த எழுத்தாளர் அவர் !—எழுதுவதற்காக அவர் கஷ்டப் பட்டதே யில்லை.

மடிப்புக் குலையாத அங்கவஸ்திரம் மேலே இருந்தபடியே இருக்க, மேஜையருகே நெருங்கி உட்கார்ந்து கொண்டு, நிமிர்ந்தது நிமிர்ந்தபடி, பேனாவைக் கையில் பிடித்து எழுதத் தொடங்கினால், சொற்களும் வாக்கியங்களும் "சரணம் !" "சரணம் !" என்று சொல்லிக் கொண்டே அவர் பேனாவில் வந்து விழும். கை எழுதித் தள்ளிக் கொண்டே போகும். பக்கங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்க் குவிந்து கொண்டே யிருக்கும்.

வறட்சி என்பது அங்கு கிடையாது. உழ உழ விளைச்சல் அதிகம் கொடுக்கும் பூமி அவர் மூளை.

எழுதுவதுதான் அவருக்கு உணவு, பொழுது போக்கு, ஆனந்தம்.

என்ன விஷயமானாலும் அலட்சியமாக அவர் எழுதினார்.— அல்ல, அவர் எழுதவில்லை ; பேனாவுடன் 'விளையாடினார்' என்றுதான் சொல்ல வேண்டும். நாற்புறமும் சுற்றிச் சுற்றி, சுழற்றிச் சுழற்றி, பாய்ந்து ஆடும் சிலம்ப விளையாட்டுக்காரனைப் போல அவர் பேனாவை உபயோகித்தார்.—அபூர்வமான, அசாதாரணமான திறமை !

அறுபது மைல் வேகத்தில் பேனா போனாலுங் கூட அந்த நடையிலே, தமிழிலே ஒரு குறை சொல்ல முடியுமா !—தமிழுக்குள்ள வளைவையும் நெளிவையும் குழைவையும் அவர் மூலம் கண்டோம்,—ஏன், தமிழ் வசன நடையையே அவர் மூலமாகத்தான் கண்டோம்.

அரசியலை, அழகு அழகாக, கோவை கோவையாக, கலை கலையாக எடுத்து மக்களுக்கு—சாதாரண மக்களுக்கு—அவர்களுடைய பாஷையிலே எழுதி, தமிழ் நாட்டில் அரசியலறிவைப் பரப்பிய பெருமை அவரை யன்றோ சாரும் !—காந்தீயத்துக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் தம்முடைய பேனாவின் மூலம் செய்த சேவை கொஞ்சமா நஞ்சமா !—குன்றைக் குடைந்து கோபுரம் கட்டிய பண்டைத் தமிழர் போல, பேனாவின் மூலம் மகா கடினமான விஷயத்தையும் தேனாக ஆக்கி, வாயிலே ஊற்றியவர் அவரல்லவா !

அப்புறம்—அவர் நடத்திய வாதங்கள் எத்தனை! விவாதங்கள் எத்தனை ! எத்தனை எத்தனை பெரிய 'ராட்சசர்'களையும் ஜடாமுனிகளையும் இந்தக் 'குறுமுனிவர்' தம் பேனா முனையாலே வீழ்த்தி யிருக்கிறார் ! அந்த வாதத்தின் போக்குதான் என்ன அற்புதமா யிருக்கும் ! பாராட்டி எழுதா விட்டாலும் கண்டித்தாவது நான்கு வரிகள் எழுதமாட்டாரா வென்று எத்தனை பேர் ஏங்கினார்கள்! – ஏனெனில் கண்டித்து எழுதும் தமிழ் கூட அத்தனை மதுரமா யிருக்கும் !

இப்படியாக, ஒப்புயர்வற்ற தம் எழுத்துத் திறமையினாலே,—மூப்பது வருஷங்கள் தமிழகத்தில் தனிப்பேரரசு செலுத்திய ஓர் அபூர்வ எழுத்தாளர், பேனாமன்னர்–'சொல்லேர் உழவர்' இன்று தமிழ் மக்களின் இதயங்களில் கலந்து விட்டார்.





கையிலிருந்த பத்திரிகையை மேஜை மேல் போட்டு விட்டு நண்பரின் பக்கம் திரும்பினார், டாக்டர் தியாகராஜன். "என்ன சிவராம்! ராமலிங்கத்தை எங்கே இன்னும் காணோம்!" என்று நண்பரை வினவினார் தியாகராஜன்.

"ராமலிங்கமா! காலையில் அக்கரைக்குப் போயிருந்தார். இவ்வளவு நேரம் திரும்பி யிருப்பார்" என்ற சிவராம், "அடேடே! இதோ அவரே வந்து விட்டாரே! வாங்க, ராமலிங்கம். உங்களுக்கு ஆயுசு நூறு!" என்றார்.

"நான் பிழைத்தது கடவுள் புண்ணியம். பரிசல் முக்கால் ஆற்றைக் கடந்து விட்டது. வெள்ளம் வருகிற ஓசையைக் கேட்டதுமே, பரிசலை வேகமாக விடச் சொல்லிக் கரையை அடைந்தேனோ, பிழைத்தேனோ! நான் கரையை அடைவதற்கும், வெள்ளம் குபுகுபுவென்று வேகமாக வருவதற்கும் சரியாக இருந்தது. கரையை அரித்துக் கொண்டு ஓடுகிறது, தண்ணீர்" என்றார் ராமலிங்கம்.

"அடடா! அப்படியானால் எத்தனைபேர் நடு ஆற்றில் வந்து தத்தளிக்கிறார்களோ!" என்று பச்சாத்தாபத்துடன் கூறினார் சிவராம்.

அவர் சொல்லி வாய் மூடவில்லை! தொப்பலாக நனைந்த டாக்டரின் வேலையாள் ஒருவன், "ஐயா! ஐயா!" என்று கூவிக் கொண்டே 'மூசு மூசு' வென்று மூச்சு வாங்க வந்து நின்றான்.

"என்ன, வீரா!" என்று பதட்டத்துடன் வினவினார் தியாகராஜன்.

"ஐயா! நம்ம ராணியம்மா சாயந்தரமா ஆற்றுப் பக்கம் போயிருந்தது. ஆற்றிலே வெள்ளம் வர சத்தம் கேட்டு, நானும் மருதையும் ஆற்றுப் பக்கம் ஓடினோம். நம்ம ராணியம்மா கரையிலே நின்று பரபரப்போடு ஆற்றையே பார்த்துக் கொண்டிருந்தது. எங்களைப் பார்க்கவும், 'பரிசல் ஒண்ணு கவிழ்ந்து போச்சு. இரண்டு பேர் அதிலே இருந்தாங்க' அப்படின்னு கூவுச்சுங்க. நானும் மருதையும், உடனே பாய்ந்து நடு ஆற்றுக்குப் போயிட்டோம். நல்ல காலம், இரண்டு பேருமே அகப்பட்டுக் கொண்டாங்க. வீட்டிலே கொண்டு வந்து வைத்திருக்கிறோம். சீக்கிரம் வாங்க" என்று பொரிந்து தள்ளினான் வீரப்பன்.

"சிவராம்! ராமலிங்கம்! நான் வருகிறேன்" என்று சொல்லியபடியே வீரனுடன் வீட்டை நோக்கி நடந்தார், டாக்டர் தியாகராஜன்.

டாக்டருக்கு அந்தச் சமயத்திலும், தன் மகளின் துணிச்சலைக் கண்டு பெருமிதமாக இருந்தாலும், மற்றொரு புறம் பயமாக இருந்தது. 'அந்தி நேரத்தில் ஆற்றுப் பக்கம் ஏன் போக வேண்டும்! இவள் மற்றவர்களைக் காப்பாற்றினது போக, இவளே வெள்ளத்தில் விழுந்திருந்தால் என்ன செய்வது! காலேஜுக்குப் போயும் ராணிக்கு இன்னமும் சிறுபிள்ளைத்தனம் போகவில்லையே!" என்று மகளைப் பற்றிச் சிந்தித்தபடியே நடந்த டாக்டர் இரண்டே நிமிஷங்களில் வீட்டை அடைந்து விட்டார்.

வாசலில் நின்றிருந்த மகளை நோக்கி, "அவர்களை எங்கே படுக்க வைத்திருக்கிறாய், ராணி!" என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தார் தியாகராஜன். வாசல் புறம் இருந்த முன் அறைக்கு அவரை அழைத்துச் சென்றாள் ராணி. அந்த அறையில் கட்டில்களில் படுத்திருந்த இருவரையும் முதலில் கூர்ந்து கவனித்தார் தியாகராஜன். தகப்பனும் பிள்ளையும் போல் தோன்றினார்கள்; தியாகராஜன் அவர்களைப் பரிசோதித்தார்.

"அப்பா! ஆபத்து இல்லையே!" என்று கலவரத்துடன் வினவினாள் ராணி. அவளது அழகிய முகத்தில் பயம் நிறைந்திருந்தது. ராணியின் பயம் டாக்டருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

அந்தப் பெரியவர்தான் முதலில் கண் விழித்தார். டாக்டரைப் பார்த்து, "ஐயா! மாதவன் பிழைத்து விட்டானா!" என்று தீனமாகக் கேட்டார். மாதவன் என்பது அந்த இளைஞனாக இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்ட டாக்டர், "பத்திரமாக இருக்கிறான். நீங்கள் நிம்மதியாகப் படுத்திருங்கள்" என்றார் ஆறுதலாக.

"பத்திரமாக இருக்கிறானா! உம்! பதினேழு வருஷங்களுக்கு முன் என் வாழ்க்கையில் குறுக்கிட்ட இந்தக் காட்டாறு, மறுபடியும் என் வாழ்க்கையில் குறுக்கிட்டிருக்கிறது. ஆனால், முன்னளவு துன்பத்தை எனக்கு அளிக்கவில்லை"— அவர் ஆயாசத்துடன் கண்களை மூடினார்.

"பதினேழு வருஷங்களுக்கு முன் என் வாழ்க்கையில் குறுக்கிட்ட இந்தக் காட்டாறு"—இந்த வாக்கியம் டாக்டர் தியாகராஜனின் சிந்தனையைக் கிளறி விட்டது.

* * *

பதினேழு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள்! வைத்தியக் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு எம். பி. பி. எஸ். பட்டத்துடன் தன் ஒரே ஆதரவான மாமாவுக்கு வைத்தியம் செய்யக் கிராமத்துக்கு வந்தான் தியாகராஜன். தீராத வயிற்று நோவால் துன்புற்ற மாமா நாட்டு வைத்தியங்கள் பயன் பெறாமல் போகவே, இளம் டாக்டரான மருமகனையே பார்க்கும்படி சொன்னார். தியாகராஜனுடைய கைராசியின் பலனோ என்னவோ, விரைவிலேயே மாமாவின் வயிற்று நோவு கொஞ்சம் கொஞ்சமாகக் குணமாகி விட்டது.

மருமகன் சென்னைக்குப் புறப்படுவதற்கு முதல் நாள், ஆசை தீரக் குளிப்பதற்காகக் காட்டாற்றுக்குப் புறப்பட்டான். குளிக்கப் போகுமுன் மாமா எச்சரித்தார் "தியாகு! இந்தக் காட்டாறு மிகவும் அபாயகரமானது. இப்பொழுது பார்த்தால் மிகவும் அமைதியுடன் ஓடுவது போல் இருக்கும். ஆனால், திடீர் என்று வெள்ளம் வந்துவிடும். அதுவும் மாலை நேரம்தான் மிகவும் அபாயகரமானது. ஜாக்கிரதையாகக் குளித்துவிட்டு வா. நீச்சலடித்துக் கொண்டே அதிக தூரம் போய் விடாதே!" என்றார். தியாகராஜன் தலையை அசைத்து விட்டு வந்தான்.

ஆனால் ஜிலுஜிலுவென்று ஓடும் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த தியாகராஜன் அந்த சுகத்தில் மாமாவின் எச்சரிக்கையை அடியோடு மறந்து விட்டான். பாதி ஆறு வரைக்கும் நீந்திக் கொண்டே வந்து விட்டான். அப்பொழுதுதான் நடு ஆற்றில் வந்து கொண்டிருந்தது ஒரு பரிசல். தலையை மட்டும் தூக்கி அதில் இருப்பவர்களைப் பார்த்தான், தியாகராஜன். ஒரு ஆடவனும், ஒரு யுவதியும் அதில் இருந்தனர்.

அப்பொழுதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது. ஆமாம்! மாமா எச்சரித்தபடியே நடந்து விட்டது. 'ஹோ' வென்ற ராட்சஸ ஒலி அவன் காதில் வந்து மோதியது. பரிசலோட்டி, "ஐயோ! சாமி! வெள்ளம் வந்து விட்டதே!" என்று திகிலுடன் கூவினான்.

"அடடே! சீக்கிரம் கரையை நோக்கிப் பரிசலைத் திருப்பு, அப்பா" என்று பரிதாபமாக ஓலமிட்டான், பரிசலில் இருந்த வாலிபன். ஆனால் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் 'ஓ' வென்ற இரைச்சலுடன், நுங்கும் நுரையுமாக வந்த வெள்ளம், அந்தப் பரிசலை மோதித் தள்ளியது.

"அண்ணா!"

"காந்திமதி!" என்ற கூக்குரல்கள் ஆற்றின் ராட்சஸ ஒலியையும் மீறிக் கொண்டு ஒரு முறை எழுந்து அடங்கின.

தியாகராஜனுக்குக் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நடந்த சம்பவத்தைப் பார்க்கவும், ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. 'மடேர்' என்று வேகமாக வந்து மோதித் தள்ளிய வெள்ளம் அவனை நிலை குப்புறத் தள்ளியது. உடலை விட்டு உயிரே பிரிந்து விட்டாற்போல் உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அதன் வேகம் ஒரு கணம் தான் அவனை உணர்வற்ற மனிதனாக்க முடிந்தது. மறுகணம் அவன் உடலில் ராட்சஸ பலம் புகுந்து விட்டது. உடலில் உள்ள பலம் அனைத்தையும் ஒருங்கே சேர்த்துக் கொண்டு, பொங்கி வரும் ஆற்று வெள்ளத்தை எதிர்த்துக் கொண்டு பரிசல் கவிழ்ந்த இடத்தை நோக்கி நீந்தினான். முதலில் அவன் கைகளில் தட்டுப் பட்டது பூப்போன்றதொரு உடல்தான்.

ஆம்! அது அந்தப் பெண்ணின் உடல்தான். அந்த மனிதனும், பரிசலோட்டியும் என்ன கதியானார்களோ தெரியவில்லை. அந்தப் பெண்ணை அப்படியே தூக்கிக் கொண்டு நீரைக் கிழித்துக் கொண்டு கரையை நோக்கி நீந்தினான், தியாகராஜன். அரைமணி நேரப் போராட்டத்துக்குப் பின், கரையை அடைந்த தியாகராஜனுக்குத் தரையில் கால் ஊன்றவே முடியவில்லை. இருந்தாலும் உறுதியைக் கைவிடாது, மயங்கிக் கிடந்த அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு மாமாவின் வீட்டை நோக்கி நடந்தான்.


ஒரு பெண்ணைத் தூக்கியவாறே தள்ளாடியபடி வரும் மருமகனைப் பார்க்கவும், "என்ன, தியாகு!" என்று பதறிப் போய் ஓடிவந்தார் மாமா. தியாகராஜனுக்குப் பேசக் கூட ஜீவன் இல்லை. அந்தப் பெண்ணை வராந்தாவில் கிடந்த பெஞ்சில் கிடத்திவிட்டு, நிற்கவும் சக்தியற்றவனாகப் பொத்தென்று கீழே விழுந்து விட்டான்.

திரும்பவும் அவன் கண் விழித்தபோது, மாமா தனக்கும், மாமி அந்தப் பெண்ணுக்கும் உணர்வு வருவதற்காகச் சூடேற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். "சாயந்தர நேரத்தில் குளிக்கப் போக வேண்டாம் என்றால், சொன்னால் கேட்கிறாயா! பிழைத்து வந்ததினால் போயிற்று. வெள்ளம் இழுத்துக் கொண்டு போயிருந்தால், என்ன செய்வேன்!" என்று அரற்றியபடியே உட்கார்ந்திருந்தார் மாமா.

"மாமா!" என்று மெல்லிய குரலில் அழைத்தான் தியாகராஜன். "என்னடா, தியாகு!" என்று பரிவுடன் கேட்டார் மாமா. "அந்தப் பெண்!" என்று வினவினான் தியாகராஜன். அப்பொழுதுதான் அந்தப் பெண்ணும் கண்களைத் திறந்தாள். தான் இருக்கும் சூழ்நிலையை ஒரு முறை மிரள மிரளப் பார்த்து விட்டு, "அண்ணா எங்கே!" என்று தீனமாகக் கேட்டாள்.

"அண்ணா!" என்று மாமி விழித்தாள்!

தியாகராஜன் மாமிக்கு ஜாடை காட்டினான். "அண்ணன் இருக்கிறார், அம்மா. நீ பேசாமல் படுத்துத் தூங்கு" என்றாள், அன்பாக. அவள் ஆயாசத்துடன் கண்களை மூடினாள். தியாகராஜன் மெல்லிய குரலில் நடந்தவற்றை விளக்கினான். பின், "மாமா! உங்கள் பண்ணை ஆட்களை விட்டு அவர் உடலாவது கிடைக்குமா என்று கரையோரங்களிலாவது பார்க்கச் சொல்லுங்கள்" என்றான். மாமா உதட்டைப் பிதுக்கினார்.



"கல்விக்குப் பிரயாணம்!" என்றும் "பிரயாணமே கல்வி!" என்றும் சொல்லுவதுண்டு. இதற்கேற்ப, சென்னை ஹிந்து தியாலஜிகல் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் வடநாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தனர். வடநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் சென்ற டிஸம்பர் மாதம் இருபத்தேழாம் தேதி நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களைப் பேட்டி கண்டனர். புது டில்லி ராஷ்டிரபதி பவனத்தில் தியாலஜிகல் உபாத்தியாயர்களுக்கு ஜனாதிபதி ராஜன் பாபு அவர்கள் தேனீர் கொடுத்து உபசரிப்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

"தியாகு! இந்த வெள்ளத்திலே உடலைக் கூடக் கண்டு பிடிக்க முடியுமா! இருந்தாலும் தேடிப் பார்க்கச் சொல்லுகிறேன்" என்றார்.

கடைசியில் மாமா சொன்னதுதான் பலித்தது. எங்கு தேடியும் அந்தப் பெண்ணின் அண்ணன் உடலைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அந்தப் பெண்ணின் கதையும் பரிதாபமானதாக இருந்தது. அவள் பெயர் காந்திமதி. அவளுக்குப் பெற்றோர் கிடையாது. தமையன் கனகசபை ஒருவர்தான் ஆதரவு. கனகசபைக்கு ஐந்து வயதில் ஒரு மகன் இருந்தான். கனகசபையின் மனைவியும் ஒரு வருஷத்துக்கு முன் இறந்து விட்டாள். வறுமையின் நிழலில் தான் அந்தக் குடும்பம் வாழ்க்கை நடத்தியது. காந்திமதி படித்து முடித்து விட்டு உபாத்தியாயினி வேலைக்கு மனுப்போட்டு, இந்தக் கிராமத்தில் வேலை கிடைத்திருக்கிறது. வேலையை ஏற்றுக் கொள்ள அன்று அவளும் கனகசபையும் குழந்தையை அதன் பாட்டியிடம் விட்டு விட்டு, வந்திருக்கிறார்கள். வந்த இடத்தில் தமையனையும் தவற விட்ட காந்திமதியின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருந்தது!

தியாகராஜன், மாமா, மாமி இவர்கள் ஆறுதல் சொல்லாவிட்டால், அழுதழுதே உயிரை விட்டிருப்பாள் காந்திமதி. மறுநாள் சென்னைக்குப் புறப்பட வேண்டிய தியாகராஜன், காந்திமதிக்காக ஒரு மாதம் கிராமத்திலேயே தங்கினான். ஒருவாறு மனம் தேறிய காந்திமதி இரண்டு வாரத்துக்கெல்லாம், உபாத்தியாயினி வேலையை ஏற்றுக் கொள்ள நினைத்தாள். ஆனால் தியாகராஜனின் மாமி அதைத் தடுத்தாள். குழந்தைகள் ஒருவரும் அவளுக்கு இல்லையாதலால், காந்திமதியைத் தன் குழந்தை போல் பாவித்தாள். அவளுடைய அன்பினாலேயே காந்திமதி விரைவில் தன் துயரங்கள் அனைத்தையும் மறந்து விட்டாள். தியாகராஜனும், அந்த அனாதைப் பெண்ணைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டான்.

தியாகராஜன் காந்திமதியுடன் சென்னைக்கு வந்து இரண்டு வருஷ காலம் இருந்தான். ராணி பிறந்தாள். ராணி தாயின் அழகையும் தந்தையின் துணிச்சலையும் பெற்றிருந்தாள்.

இதற்குள் மாமா மண்டையைப் போட்டு விட்டார். வாரிசு இல்லாத அச்சொத்துக்களைத் தியாகராஜன் பேரில் அவர் எழுதி வைத்திருந்தபடியால், தியாகராஜன் குடும்பத்துடன் கிராமத்துக்கே வந்து விட்டார்.

* * *

"அப்பா! இந்தக் காப்பியை அவரிடம் கொடுங்கள்" என்றாள் ராணி. டாக்டரின் சிந்தனை கலைந்தது. அந்த மனிதர் காப்பியை வாங்கிக் கொண்டு ராணியையே உற்று நோக்கினார். அவரிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. அவர் கண்களில் இலேசாக நீர் துளித்தது.

"உங்களுக்கு என்ன செய்கிறது!" என்று அன்புடன் வினவினார் தியாகராஜன்.

"இந்தப் பெண் உங்கள் மகளா!" என்று பதிலுக்குக் கேட்டார் அவர்.

"ஆமாம். இவள் என் பெண்தான். ஏன் கேட்கிறீர்கள்!" என்றார் டாக்டர் தியாகராஜன்.

"ஒன்றுமில்லை. இந்தப் பெண்ணின் முகச்சாயல்தான் என் மனத்தை என்னவோ செய்கிறது. பதினேழு வருஷங்களுக்கு முன் இதே காட்டாற்று வெள்ளத்தில் தவறி விட்ட என் தங்கையை நினைவுபடுத்துகிறது, இந்தப் பெண்ணின் முகம்."—அவர் குரல் துக்கத்தினால் தடைப்பட்டது. கண்களிலிருந்து நீர் பெருகியது.

தியாகராஜன் இருந்த இடத்தை விட்டுத் துள்ளி எழுந்தார். "உங்கள் பெயர் என்ன! கனகசபைதானே!" என்றார்.

"ஆமாம்! என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்!" என்று ஆவலோடு கேட்டார் அவர்.

"ஐயா! கவலைப் படாதீர்கள். உங்கள் தங்கை இறந்து விடவில்லை. உயிருடன்தான் இருக்கிறாள்!" என்று உற்சாகத்துடன் கூவினார் தியாகராஜன்.

"என்ன! காந்திமதி உயிருடன் இருக்கிறாளா?" என்று கூவிய கனகசபை படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தார். அவர் உட்காருவதற்கும் கோவிலுக்குப் போயிருந்த காந்திமதி பழம், புஷ்பங்களுடன் உள்ளே வரவும் சரியாக இருந்தது!

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10.


REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது . . ."
என்று கூறுகிறார் குமாரி கமலா



இந்தியாவில் தயாரித்தது

லக்ஸ் டாய்லட் சோப் இவ்வளவு வெண்மையாயிருப்பதின் காரணம் என்ன? அதை தயாரிக்க மிகவும் சுத்தமான எண்ணெய்களையே உபயோகிக்கப்படுகிறது என்பதுதான். குமாரி கமலா கூறுவதாவது: "எனது பூரண அழகு பராமரிப்பும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகிப்பதுதான். அதன் சுறுசுறுப்பான, மென்மையான நுரை ஆழப்புகுந்து சுத்தம்செய்து சருமத்தைப் பட்டுப்போல் மென்மையாகவும், தெளிவாகவும் வைத்திருக்கிறது. நீங்களும் அதை தினமும் உபயோகித்து உங்கள் வதனத்தையும் அழகாக வைத்துக்கொள்ளுங்கள். அதன் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்!"



". . . அதனால்தான் என் வதனத்தை தெளிவாகவும் மலர்ச்சியோடும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்!"

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை
கவர்ச்சி அளிக்க
புதிய பெரிய சைஸிலும்
இப்பொழுது கிடைக்கிறது!
இன்றே வாங்கி உபயோகியுங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 428-50 TM